# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2023 – 2024

## 1.அமைப்பும் மேலாண்மையும்

### 1–1. அமைப்பு

இவ்வறிக்கை முந்தைய திருச்சிராப்பள்ளி நகராட்சி , மாநகராட்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பின் தயாரிக்கப்பட்ட 29வது நிர்வாக அறிக்கை ஆகும்

இம்மாநகரம் தமிழகத்தின் மையப்பகுதியில் , சென்னையிலிருந்து 360 கி.மீ தொலைவிலும், 78.42 கிழக்கு தீர்க்கரேகையிலும், 10.49 வட அட்சய ரேகையிலும் , கடல் மட்டத்திலிருந்து 78.80 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது . மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் 2011ம் ஆண்டு அருகிலுள்ள ஒரு பேரூராட்சி மற்றும் 4 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு , 65 வார்டுகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது . இதன்படி இம்மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர்களாகும்.

நகரின் வட எல்லையாக , சரித்திர புகழ் வாய்ந்த **"கொள்ளிடம்"** நதியும், மத்தியில் நீண்டு உயர்ந்த "மலைக்கோட்டையை" இயற்கையாக அமையப்பெற்று, இடையே **காவேரி ஆறு** பாய்வதால், **வயல்கள் பசுமையுடன் காட்சி தரும் மாநகரமே திருச்சிராப்பள்ளி ஆகும்**

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட நிலை விபரம் பின் வருமாறு**

| | | |
|---|---|---|
| அரசு ஆணை எண்.1118 நாள்.30.10.1866 | 01.11.1866 | திருச்சிராப்பள்ளி நகராட்சி |
| அரசு ஆணை எண்.169 ஊ.வ(ம) உ.து நாள்.01.02.1972 | 01.04.1972 | சிறப்பு நிலை நகராட்சி |
| அரசு ஆணை எண்.109 ந.நி.ம.கு.வ.து நாள்.31.03.1994 | 01.04.1994 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 01.06.1994 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### 1–2. ஆட்சி எல்லை:

முந்தைய திருச்சிராப்பள்ளி நகராட்சி , ஸ்ரீரங்கம் நகராட்சி , பொன்மலை நகராட்சி பகுதிகள், கோ–அபிஷேகபுரம், கே.சாத்தனூர், பிராட்டியூர், மேலக்கல்கண்டார் கோட்டை , அரியமங்கலம் பேரூராட்சிகளின் பகுதிகள் , பனையக்குறிச்சி, உக்கடை அரியமங்கலம் , பாண்டமங்கலம், உய்யக்கொண்டான் திருமலை, திருவளர்ச்சோலை ஊராட்சிப் பகுதிகள் மற்றும் பொன்மலை ரயில்வே ஒர்க்க்ஷாப் காலனி குடியிருப்பு பகுதிகள் , இம்மாநகராட்சியின் அதிகார எல்லைக்கு உட்பட்டவையாகும்

**1–3. <u>மக்கள் தொகை</u>**

மாநில அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| வ. எண் | விபரம் | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள் தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு | பெண் | மொத்தம் |
| 1 | திருச்சிராப்பள்ளி நகராட்சி | 1981ல் | 183691 | 178354 | 362045 |
| 2 | திருச்சிராப்பள்ளி நகராட்சி | 1991ல் | 340220 | 328428 | 668648 |
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | 2001ல் | 376125 | 375941 | 752066 |
| 4 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு 1 முதல் 65 வரை | 2011ல் | 452590 | 462979 | 915569 |

இம்மாநகர் தமிழ்நாடு மாநிலத்தின் மையப்பகுதியில் உள்ளது . திருச்சிராப்பள்ளி அனைத்து ஊர்களுக்கும் செல்வதற்கு ஒரு சந்திப்பாக இருந்து வருகிறது . ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில், சிந்தாமணி, சாலைரோடு, தில்லைநகர், புத்தூர், உறையூர், வயலூர், கே.கே.நகர் மற்றும் திருவெறும்பூர் ரோடுகளில் அடுக்குமாடி கட்டிடங்கள் மற்றும் புதிய காலனிகள் தோன்றி வருவதால், மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

**1–4. <u>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லை விரிவாக்கம்</u>**

| | |
|---|---|
| 1. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசு ஆணை (நிலை) எண்.218, நாள்.28.09.20210. |
| 2. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசு ஆணை (நிலை) எண்.244, நாள்.15.10.2010ன்படி மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகள் 65 வார்டுகளாக எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| 3. | தமிழ்நாடு அரசிதழ் எண்.315, நாள்.15.10.2010. |
| 4. | தமிழ்நாடு அரசிதழ் எண்.4, நாள்.03.01.2011. |
| 5. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசு ஆணை (நிலை) எண்.89, நாள்.28.06.2011. |
| 6. | தமிழ்நாடு அரசிதழ் எண்.272, நாள்.19.08.2011. |
| 7. | மாவட்ட அரசிதழ் எண் .9 / 2018, நாள்.14.12.2018 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி (வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டது) |

**<u>2. மாநகராட்சி நிர்வாகம்</u>**

**<u>2–1. உள்ளாட்சி தேர்தல் 2011</u>**

01.04.1994 முதல் திருச்சிராப்பள்ளி மா நகராட்சி 60 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வந்தது . மாநகராட்சிகளில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட போது , திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கும் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு , அரசாணை எண்.218, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்கள்) துறை,

நாள்.28.09.2010ல் அருகிலுள்ள ஒரு பேரூராட்சியும் மற்றும் நான்கு ஊராட்சி பகுதிகள் இணைக்கப்பட்டு அதாவது திருவெறும்பூர் பேரூராட்சி , பாப்பாக்குறிச்சி ஊராட்சி , எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார் கோட்டை ஊராட்சி, ஆலத்தூர் ஊராட்சி பகுதிகள் இணைக்கப்பட்டு மொத்தம் 65 வார்டுகளாக அரசால் ஆணையிடப்பட்டு, அதன் அடிப்படையில் உள்ளாட்சி தேர்தல் அக்டோபர் 2011ல் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்டவாறு தேர்தல் நடத்துவதற்கு , தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் முதல் முறையாக , வாக்காளர் பட்டியல் புகைப்படத்துடன் கூடியதாக , இணையதளம் மூலம் வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அனைத்து வாக்காளர்களும் வாக்குப்பதிவு செய்ய , வாக்காளர் பட்டியலில் உள்ளபடியே புகைப்படத்துடன் கூடிய வாக்குச்சீட்டு தயாரிக்கப்பட்டு வாக்காளர்களுக்கு தனித்தனியாக வழங்கப்பட்டது.

## 2-2. உள்ளாட்சி தேர்தல் 2022

மாவட்ட அரசி தழ் எண் .9 / 2018, நாள்.14.12.2018ன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள 65 வார்டுகள் அரசு வழிகாட்டுதலின்படி , மறுவரையறை செய்யப்பட்டது. அதன்படி, 65 வார்டுகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 19.02.2022ம் நாளன்று நடைபெற்றது.

மேற்கண்ட 65 வார்டுகள் மறுவ ரையறை செய்யப்பட்டு நான்கு கோட்ட அலுவலகங்களாக செயல்பட்டு வந்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , அரசாணை (நிலை) எண்.126, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.14.12.2021ன்படி, ஐந்து வார்டுக்குழு அலுவலகங்களாக வகுக்கப்பட்டது. 26.01.2022ம் நாளைய தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் செய்தி வெளியீட்டின்படி, 04.03.2022ம் நாளன்று மேயர், துணை மேயர் மற்றும் வார்டுக்குழு தலைவர்களுக்கான மறைமுகத் தேர்தல் நடத்தப்பட்டு, ஐந்து வார்டுக்குழு அலுவலகங்களுக்கு வார்டுக்குழு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்றைய நாள் முதல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 65 வார்டுகளை உள்ளடக்கி ஐந்து வார்டுக்குழு அலுவலகங்களாக செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்று வருகிறது.

அறிக்கை ஆண்டில் மாண்புமிகு மேயர் மற்றும் துணை மேயர் அவர்களின் விவரம்.

| | |
|---|---|
| மாண்புமிகு மேயர் | திரு.மு.அன்பழகன் அவர்கள் |
| மாண்புமிகு துணை மேயர் | திருமதி.ஜி.திவ்யா அவர்கள் |

அறிக்கை ஆண்டில் (01.04.2023 முதல் 31.03.2024 வரை) மாமன்ற உறுப்பினர்களின் விவரம்.

## 3. மாமன்ற உறுப்பினர்கள்

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாகத்தில் நடைபெற்று வருகிறது.**

| வரிசை எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி. கா லெட்சுமி தேவி | 1 |
| 2 | திரு. வெ ஜவகர் | 2 |
| 3 | திருமதி. சு செல்வி | 3 |
| 4 | திருமதி. ஆண்டாள் ராம்குமார் | 4 |

| | | |
|---|---|---|
| 5 | திரு. சு முத்துக்குமார் | 5 |
| 6 | திருமதி. ச கலைமணி | 6 |
| 7 | திருமதி. ச ராதா | 7 |
| 8 | திருமதி. ந பங்கஜம் மதிவாணன் | 8 |
| 9 | திருமதி. அ நாகலெட்சுமி | 9 |
| 10 | திரு. ரா முத்துகுமார் | 10 |
| 11 | திருமதி. விஜயா ஜெயராஜ் | 11 |
| 12 | திரு. கு பன்னீர் செல்வன் | 12 |
| 13 | திருமதி. ரா மணிமேகலை | 13 |
| 14 | திரு. சி அரவிந்தன் | 14 |
| 15 | திருமதி. சி தங்கலெட்சுமி | 15 |
| 16 | திரு. மு மதிவாணன் | 16 |
| 17 | திரு. ந பிரபாகரன் | 17 |
| 18 | திருமதி. த சண்முகப்பிரியா | 18 |
| 19 | திரு. சை கா சாதிக் பாஷா | 19 |
| 20 | திரு. எல் ஐ சி க சங்கர் | 20 |
| 21 | திருமதி. ஹா மும்தாஜ் பேகம் | 21 |
| 22 | திருமதி. விஜயலெட்சுமி கண்ணன் | 22 |
| 23 | திரு. க சுரேஷ்குமார் | 23 |
| 24 | திருமதி. பே சோபியா விமலாராணி | 24 |
| 25 | திரு. கொ சா நாகராஜன் | 25 |
| 26 | திருமதி. விஜயலெட்சுமி | 26 |
| 27 | திரு. மு அன்பழகன் | 27 |
| 28 | திரு. பைஸ் அகமது | 28 |
| 29 | திரு. சி கமால் முஸ்தபா | 29 |
| 30 | திருமதி. ஜே கதிஜா | 30 |
| 31 | திருமதி. எஸ் சுஜாதா | 31 |
| 32 | திருமதி. பு ஜெயநிர்மலா | 32 |
| 33 | திருமதி. ஜி திவ்யா | 33 |
| 34 | திரு. கோ ராஜசேகர் | 34 |
| 35 | திரு. சு சுரேஷ் | 35 |
| 36 | திரு. கி கார்த்திகேயன் | 36 |
| 37 | திருமதி. அனுசுயா ரவிசங்கர் | 37 |
| 38 | திரு. மு தாஜீதீன் | 38 |
| 39 | திரு. லூ ரெக்ஸ் | 39 |
| 40 | திரு. சே சிவக்குமார் | 40 |
| 41 | திரு. பி கோவிந்தராஜன் | 41 |
| 42 | திரு. ஒ நீலமேகம் | 42 |
| 43 | திரு. ந செந்தில் | 43 |
| 44 | திருமதி. அ பியுலா மாணிக்கம் | 44 |
| 45 | திருமதி. மு சீத்தாலெட்சுமி | 45 |
| 46 | திரு. கோ ரமேஷ் | 46 |
| 47 | திரு. ப செந்தில்நாதன் | 47 |
| 48 | திரு. இ எம் தர்மராஜ் | 48 |
| 49 | திருமதி. வ லீலா | 49 |
| 50 | திருமதி. அ ரிஸ்வாணா பானு | 50 |
| 51 | திருமதி. க கலைச்செல்வி | 51 |
| 52 | திருமதி. த துர்காதேவி | 52 |

| | | |
|---|---|---|
| 53 | திருமதி. ஜெ கலைச்செல்வி | 53 |
| 54 | திரு. புஷ்பராஜ் | 54 |
| 55 | திரு. வெ ராமதாஸ் | 55 |
| 56 | திருமதி. பா மஞ்சுளாதேவி | 56 |
| 57 | திரு. தி முத்துசெல்வம் | 57 |
| 58 | திருமதி. செ கவிதா | 58 |
| 59 | திருமதி. பா கீதா | 59 |
| 60 | திரு. காஜாமலை விஜய் | 60 |
| 61 | திரு. பி ஜாபர் அலி | 61 |
| 62 | திருமதி. க சுபா | 62 |
| 63 | திருமதி. வே பொற்கொடி | 63 |
| 64 | திருமதி. ரா மலர்விழி | 64 |
| 65 | திரு. கு அம்பிகாபதி | 65 |

அறிக்கையாண்டில் மாமன்ற சாதாரண கூட்டங்கள் 14 முறையும், அவசரங்கூட்டங்கள் 2 முறையும், சிறப்புக் கூட்டங்கள் 1 முறையும், மற்றும் வரவு செலவு விவாதக் கூட்டம் 2 முறையும் மாண்புமி கு மேயர், துணை மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்டுள்ளது.

**<u>3–1. வார்டுக் குழுக்களின் விவரம் (65 – வார்டுகளை உள்ளடக்கியது)</u>**

| **வ. எண்** | **வார்டு குழுக்கள்** | **வார்டுகள்** |
|---|---|---|
| 1 | வார்டுக்குழு எண். 1 | 1,2,3,4,5,6,7,12,13,14,15,19,21<br>**(13 வார்டுகள்)** |
| 2 | வார்டுக்குழு எண்.2 | 17,18,20,30,31,32,33,34,47,48,49,50,59<br>**(13 வார்டுகள்)** |
| 3 | வார்டுக்குழு எண்.3 | 16,35,36,37,38,39,40,41,42,43,44,45,46<br>**(13 வார்டுகள்)** |
| 4 | வார்டுக்குழு எண்.4 | 51,52,53,54,56,57,58,60,61,62,63,64,65<br>**(13 வார்டுகள்)** |
| 5 | வார்டுக்குழு எண்.5 | 8,9,10,11,22,23,24,25,26,27,28,29,55<br>**(13 வார்டுகள்)** |

**<u>3–2. இடஒதுக்கீடு விவரம்</u>**

| வரிசை எண் | ஒதுக்கீட்டின் விவரம் | வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெண்களுக்கு பொதுவானது – ஒதுக்கப்பட்டது | 29 |
| 2 | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு – ஒதுக்கப்பட்டது | 4 |
| 3 | தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொது – ஒதுக்கப்பட்டது | 3 |
| 4 | பொதுவானவை – (ஒதுக்கப்படாதது) | 29 |

அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் .17.01.2022ன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மேயர் பதவி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

## 4. குழுக்கள்

**வார்டுக்குழு அலுவலகம் எண்.1**

ஒதுக்கப்பட்ட மொத்த வார்டுகள் = 13

வார்டுகளின் விவரம் = 1, 2, 3, 4, 5, 6, 7, 12, 13, 14, 15, 19 மற்றும் 21

வார்டுக்குழுத் தலைவர் = திருமதி.ஆண்டாள் ராம்குமார், வார்டு எண்.4

**உறுப்பினர்கள் விபரம் (01.04.2023 முதல் 31.03.2024 வரை)**

| வ.எண் | பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி. கா. லெட்சுமி தேவி | 1 |
| 2 | திரு. வெ. ஜவகர் | 2 |
| 3 | திருமதி. சு. செல்வி | 3 |
| 4 | திரு. சு. முத்துக்குமார் | 5 |
| 5 | திருமதி. ச. கலைமணி | 6 |
| 6 | திருமதி. ச. ராதா | 7 |
| 7 | திரு. கு. பன்னீர் செல்வன் | 12 |
| 8 | திருமதி. ரா. மணிமேகலை | 13 |
| 9 | திரு. சி. அரவிந்தன் | 14 |
| 10 | திருமதி. சி. தங்கலெட்சுமி | 15 |
| 11 | திரு. சை. கா. சாதிக் பாஷா | 19 |
| 12 | திருமதி. ஹா. மும்தாஜ் பேகம் | 21 |

**வார்டுக்குழு அலுவலகம் எண்.2**

ஒதுக்கப்பட்ட மொத்த வார்டுகள் = 13

வார்டுகளின் விவரம் = 17, 18, 20, 30, 31, 32, 33, 34, 47, 48, 49, 50 மற்றும் 59

வார்டுக்குழுத் தலைவர் = திருமதி.பு.ஜெயநிர்மலா, வார்டு எண்.32

**உறுப்பினர்கள் விபரம் (01.04.2023 முதல் 31.03.2024 வரை)**

| வ.எண் | பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு. ந. பிரபாகரன் | 17 |
| 2 | திருமதி. த. சண்முகப்பிரியா | 18 |
| 3 | திரு. எல். ஐ. சி. க. சங்கர் | 20 |
| 4 | திருமதி. ஜே. கதிஜா | 30 |
| 5 | திருமதி. எஸ். சுஜாதா | 31 |
| 6 | திருமதி. ஜி. திவ்யா | 33 |
| 7 | திரு. கோ. ராஜசேகர் | 34 |
| 8 | திரு. ப. செந்தில்நாதன் | 47 |
| 9 | திரு. இ. எம். தர்மராஜ் | 48 |
| 10 | திருமதி. வ. லீலா | 49 |
| 11 | திருமதி. அ. ரிஸ்வாணா பானு | 50 |
| 12 | திருமதி. பா. கீதா | 59 |

**வார்டுக்குழு அலுவலகம் எண்.3**

ஒதுக்கப்பட்ட மொத்த வார்டுகள் = 13

வார்டுகளின் விவரம் = 16, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45 மற்றும் 46

வார்டுக்குழுத் தலைவர் = திரு.மு.மதிவாணன், வார்டு எண்.16

**உறுப்பினர்கள் விபரம் (01.04.2023 முதல் 31.03.2024 வரை)**

| வ.எண் | பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு சு சுரேஷ் | 35 |
| 2 | திரு கி கார்த்திகேயன் | 36 |
| 3 | திருமதி அனுசுயா ரவிசங்கர் | 37 |
| 4 | திரு மு தாஜீதீன் | 38 |
| 5 | திரு லூா ரெக்ஸ் | 39 |
| 6 | திரு சே சிவக்குமார் | 40 |
| 7 | திரு பி கோவிந்தராஜன் | 41 |
| 8 | திரு ஒ நீலமேகம் | 42 |
| 9 | திரு ந செந்தில் | 43 |
| 10 | திருமதி அ பியுலா மாணிக்கம் | 44 |
| 11 | திருமதி மு சீத்தாலெட்சுமி | 45 |
| 12 | திரு கோ ரமேஷ் | 46 |

**வார்டுக்குழு அலுவலகம் எண்.4**

ஒதுக்கப்பட்ட மொத்த வார்டுகள் = 13

வார்டுகளின் விவரம் = 51, 52, 53, 54, 56, 57, 58, 60, 61, 62, 63, 64 மற்றும் 65

வார்டுக்குழுத் தலைவர் = திருமதி.த.துர்கா தேவி, வார்டு எண்.52

**உறுப்பினர்கள் விபரம் (01.04.2023 முதல் 31.03.2024 வரை)**

| வ.எண் | பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி க கலைச்செல்வி | 51 |
| 2 | திருமதி ஜெ கலைச்செல்வி | 53 |
| 3 | திரு புஷ்பராஜ் | 54 |
| 4 | திருமதி பா மஞ்சுளாதேவி | 56 |
| 5 | திரு தி முத்துசெல்வம் | 57 |
| 6 | திருமதி செ கவிதா | 58 |
| 7 | திரு காஜாமலை விஜய் | 60 |
| 8 | திரு பி ஜாபர் அலி | 61 |
| 9 | திருமதி க சுபா | 62 |
| 10 | திருமதி வே பொற்கொடி | 63 |
| 11 | திருமதி ரா மலர்விழி | 64 |
| 12 | திரு கு அம்பிகாபதி | 65 |

**வார்டுக்குழு அலுவலகம் எண்.5**

ஒதுக்கப்பட்ட மொத்த வார்டுகள் = 13

வார்டுகளின் விவரம் = 8, 9, 10, 11, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 மற்றும் 55

வார்டுக்குழுத் தலைவர் = திருமதி.விஜயலெட்சுமி கண்ணன், வார்டு எண்.22

**உறுப்பினர்கள் விபரம் (01.04.2023 முதல் 31.03.2024 வரை)**

| வ.எண் | பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி ந பங்கஜம் மதிவாணன் | 8 |
| 2 | திருமதி அ நாகலெட்சுமி | 9 |
| 3 | திரு ரா முத்துகுமார் | 10 |
| 4 | திருமதி விஜயா ஜெயராஜ் | 11 |
| 5 | திரு க சுரேஷ்குமார் | 23 |
| 6 | திருமதி பே சோபியா விமலாராணி | 24 |
| 7 | திரு கொ சா நாகராஜன் | 25 |
| 8 | திருமதி விஜயலெட்சுமி | 26 |
| 9 | திரு மு அன்பழகன் | 27 |
| 10 | திரு பைஸ் அகமது | 28 |
| 11 | திரு சி கமால் முஸ்தபா | 29 |
| 12 | திரு வெ ராமதாஸ் | 55 |

அறிக்கையாண்டில் நியமனக்குழு உறுப்பினராக திரு.கொ.சா.நாகராஜன், வார்டு எண்.25 அவர்கள் பதவி வகித்துள்ளார். (01.04.2023 முதல் 31.03.2024 வரை)

## 4.1 நிலைக்குழுக்களின் விபரங்கள்

**1. கணக்குக்குழு**

| **தலைவர்** | **உறுப்பினர்கள்** | **வார்டு எண்.** |
|---|---|---|
| திருமதி.வ.லீலா வார்டு எண். 49 | திரு எல் ஜ சி க சங்கர் | 20 |
| | திருமதி ஜே கதிஜா | 30 |
| | திரு ந பிரபாகரன் | 17 |
| | திரு மு தாஜீதீன் | 38 |
| | திருமதி கா லெட்சுமி தேவி | 1 |
| | திருமதி ந பங்கஜம் மதிவாணன் | 8 |
| | திருமதி பே சோபியா விமலாராணி | 24 |
| | திரு லூ ரெக்ஸ் | 39 |

**2. கல்விக்குழு**

| **தலைவர்** | **உறுப்பினர்கள்** | **வார்டு எண்.** |
|---|---|---|
| திருமதி.வே.பொற்கொடி வார்டு எண்.63 | திருமதி அ பியுலா மாணிக்கம் | 44 |
| | திருமதி அ ரிஸ்வாணா பானு | 50 |
| | திரு சு சுரேஷ் | 35 |
| | திரு சே சிவக்குமார் | 40 |
| | திருமதி ச ராதா | 7 |
| | திருமதி விஜயலெட்சுமி | 26 |
| | திரு பி கோவிந்தராஜன் | 41 |
| | திரு ரா முத்துகுமார் | 10 |

### 3. பொது சுகாதாரக்குழு

| தலைவர் | உறுப்பினர்கள் | வார்டு எண். |
|---|---|---|
| திரு. ஒ. நீலமேகம் வார்டு எண்.42 | திருமதி பா மஞ்சுளாதேவி | 56 |
| | திரு வெ ராமதாஸ் | 55 |
| | திரு சை கா சாதிக் பாஷா | 19 |
| | திருமதி ரா மலர்விழி | 64 |
| | திருமதி அ நாகலெட்சுமி | 9 |
| | திரு சு முத்துக்குமார் | 5 |
| | திருமதி சு செல்வி | 3 |
| | திருமதி சி தங்கலெட்சுமி | 15 |

### 4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு

| தலைவர் | உறுப்பினர்கள் | வார்டு எண். |
|---|---|---|
| திரு. தி. முத்துசெல்வம் வார்டு எண்.57 | திரு பி ஜாபர் அலி | 61 |
| | திரு கோ ராஜசேகர் | 34 |
| | திரு க சுரேஷ்குமார் | 23 |
| | திருமதி விஜயா ஜெயராஜ் | 11 |
| | திருமதி த சண்முகப்பிரியா | 18 |
| | திருமதி பா கீதா | 59 |
| | திருமதி சி தங்கலெட்சுமி | 15 |
| | திருமதி ச கலைமணி | 6 |

### 5. நகரமைப்புக்குழு

| தலைவர் | உறுப்பினர்கள் | வார்டு எண். |
|---|---|---|
| திரு. இ. எம். தர்மராஜ் வார்டு எண்.48 | திரு கி கார்த்திகேயன் | 36 |
| | திரு கு பன்னீர் செல்வன் | 12 |
| | திருமதி விஜயலெட்சுமி | 26 |
| | திருமதி க சுபா | 62 |
| | திருமதி ஹா மும்தாஜ் பேகம் | 21 |
| | திரு அ பைஸ் அகமது | 28 |
| | திருமதி மு சீத்தாலெட்சுமி | 45 |
| | திருமதி ஜெ கலைச்செல்வி | 53 |

### 6. பணிகள் குழு

| தலைவர் | உறுப்பினர்கள் | வார்டு எண். |
|---|---|---|
| திருமதி. செ. கவிதா வார்டு எண்.58 | திருமதி க கலைச்செல்வி | 51 |
| | திருமதி ச கலைமணி | 6 |
| | திரு புஷ்பராஜ் | 54 |
| | திருமதி ஜெ கலைச்செல்வி | 53 |
| | திரு ந செந்தில் | 43 |
| | திரு கோ ரமேஷ் | 46 |
| | திருமதி ரா மணிமேகலை | 13 |
| | திரு சி கமால் முஸ்தபா | 29 |

## 5. அறிக்கை ஆண்டில் பணியாற்றிய அலுவலர்கள் விபரம்

## (01.04.2023 முதல் 31.03.2024 முடிய)

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | | காலம் |
|---|---|---|---|
| 1 | மரு.இரா.வைத்திநாதன், I.A.S<br>வே.சரவணன், I.A.S | ஆணையர்<br>ஆணையர் | 01.04.2023 முதல் 13.02.2024<br>15.02.2024 முதல் 31.03.2024 |
| 2 | த.நாராயணன்,B.Sc., MBA., | துணை ஆணையர் | 01.04.2023 முதல் 03.05.2023<br>04.05.2023 முதல் 31.03.2024 |
| 3 | பி.சிவபாதம் | நகரப்பொறியாளர் (பொ) | 01.04.2023 முதல் 31.03.2024 |
| 4 | மரு.டி.மணிவண்ணன் MBBS., DPH | நகர சுகாதார அலுவலர் | 01.04.2023 முதல் 31.03.2024 |
| 5 | செ.பிரபாகரன்<br>ச.செல்வபாலாஜி | உதவி ஆணையர் (பணிகள்) (பொ)<br>துணை ஆணையர் (பணிகள்) | 01.04.2023 முதல் 28.03.2024<br>29.03.2024 முதல் 31.03.2024 |
| 6 | எஸ்.மீனாட்சி | கணக்கு அலுவலர் மற்றும் உதவி ஆணையர் (கணக்குகள்) (பொ) | 01.04.2023 முதல் 31.03.2024 |
| 7 | செ.பிரபாகரன் | உதவி ஆணையர் (வருவாய்) | 01.04.2023 முதல் 31.03.2024 |
| 8 | பி.சிவபாதம் | செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் நிர்வாகப் பொறியாளர் (பொ) | 01.04.2023 முதல் 31.03.2024 |
| 9 | காலியிடம் | மக்கள் தொடர்பு அலுவலர் | 01.04.2023 முதல் 31.03.2024 |

### 5–1. உதவி ஆணையர், வார்டுக்குழு அலுவலகம் – 1

| வ.எண் | பெயர் மற்றும் பதவி(திருவாளர்கள்) | காலம் |
|---|---|---|
| 1 | ப. ரவி, உதவி ஆணையர் | 01.04.2023 முதல் 04.07.2023 வரை |
| 2 | எஸ். வைத்திநாதன் | 05.07.2023 முதல் 27.02.2024 வரை |
| 3 | மெ.த. சாலை தவவளன் | 28.02.2024 முதல் 15.03.2024 வரை |
| 4 | கா. ஜெயபாரதி | 16.03.2024 முதல் 31.03.2024 வரை |

### 5–2. உதவி ஆணையர், வார்டுக்குழு அலுவலகம் – 2

| வ.எண் | பெயர் மற்றும் பதவி(திருவாளர்கள்) | காலம் |
|---|---|---|
| 1 | அ.அக்பர்அலி, உதவி ஆணையர் | 01.04.2023 முதல் 05.07.2023 வரை |
| 2 | ப.ரவி, உதவி ஆணையர் | 06.07.2023 முதல் 19.10.2023 வரை |
| 3. | ஆ.லோகநாதன், செயற்பொறியாளர் உதவி ஆணையர் (பொ) | 20.10.2023 முதல் 25.10.2023 வரை |
| 4. | மெ.த.சாலை தவவளன், உதவி ஆணையர் | 26.10.2023 முதல் 31.03.2024 வரை |

### 5–3. உதவி ஆணையர், வார்டுக்குழு அலுவலகம் – 3

| வ.எண் | பெயர் மற்றும் பதவி(திருவாளர்கள்) | காலம் |
|---|---|---|
| 1 | ஆர்.ரமேஷ்குமார் (பொ) | 01.04.2023 முதல் 05.11.2023 வரை |
| 2 | வீ.சரவணன் | 06.11.2023 முதல் 31.03.2024 வரை |

## 5–4. உதவி ஆணையர், வார்டுக்குழு அலுவலகம் – 4

| வ.எண் | பெயர் மற்றும் பதவி(திருவாளர்கள்) | காலம் |
|---|---|---|
| 1 | ச.நா. சண்முகம் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |

## 5–5. உதவி ஆணையர், வார்டுக்குழு அலுவலகம் – 5

| வ.எண் | பெயர் மற்றும் பதவி(திருவாளர்கள்) | காலம் |
|---|---|---|
| 1 | இரா. சதீஸ்குமார், உதவி ஆணையர் (பொ) | 01.04.2023 முதல் 15.11.2023 |
| 2 | லெ. வெங்கட்ராமன் | 16.11.2023 முதல் 31.03.2024 |

## 6. பொது நிர்வாகப்பிரிவு செயல்பாடுகள்

### 6–1. மைய அலுவலகம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மைய அலுவலகக்கட்டிடத்தில் பொது நிர்வாகப்பிரிவு இயங்கி வருகிறது.

### 6–2 வார்டு அலுவலங்கள்

**பொதுப்பிரிவு**

| வ. எண் | அலுவலர்கள் | மைய அலுவலகம் | வார்டுக்குழு எண் – 1 | வார்டுக்குழு எண் – 2 | வார்டுக்குழு எண் – 3 | வார்டுக்குழு எண் – 4 | வார்டுக்குழு எண் – 5 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கணக்கு அலுவலர் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | நிர்வாக அலுவலர் | 1 | 1 | 0 | 1 | 1 | 1 |
| 3 | வருவாய் அலுவலர் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | கண்காணிப்பாளர் | 7 | 2 | 3 | 2 | 1 | 1 |
| 5 | உதவியாளர் | 9 | 3 | 1 | 2 | 4 | 1 |
| 6 | இளநிலை உதவியாளர் | 13 | 2 | 7 | 1 | 6 | 5 |
| 7 | பதிவுறை எழுத்தர் | 2 | 1 | 1 | 2 | 5 | 1 |
| 8 | அலுவலக உதவியாளர்கள் | 11 | 4 | 3 | 2 | 3 | 6 |
| 9 | காவலர் | 5 | 0 | 2 | 0 | 1 | 0 |
| 10 | தட்டச்சர் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **50** | **13** | **18** | **10** | **21** | **15** |

### 6–3. வருவாய் பிரிவு

| வ. எண் | அலுவலர்கள் | வார்டுக்குழு எண் – 1 | வார்டுக்குழு எண் – 2 | வார்டுக்குழு எண் – 3 | வார்டுக்குழு எண் – 4 | வார்டுக்குழு எண் – 5 |
|---|---|---|---|---|---|---|
| 1 | உதவி வருவாய் அலுவலர் | 0 | 1 | 0 | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர்கள் | 1 | 1 + 9 (பொ) | 2 | 0 | 0 |
| 3 | வருவாய் ஆய்வர் (சிறப்பு) | 0 | 1 | 1 | 0 | 1 |
| | **மொத்தம்** | **1** | **3** | **3** | **1** | **2** |

**6–4. பொறியியல் பிரிவு**

| வ. எண் | அலுவலர்கள் | மைய அலுவலகம் | வார்டுக்குழு எண் – 1 | வார்டுக்குழு எண் – 2 | வார்டுக்குழு எண் – 3 | வார்டுக்குழு எண் – 4 | வார்டுக்குழு எண் – 5 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 2 | உதவி செயற்பொறியாளர் | 1 | 1 | 1 | 1 | 0 | 1 |
| 3 | உதவி நகரதிட்டமிடுநர் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | உதவி பொறியாளர் | 2 | 1 | 0 | 1 | 1 | 0 |
| 5 | இளநிலை பொறியாளர் | 3 | 0 | 3 | 1 | 3 | 1 |
| 6 | தொழில் நுட்ப உதவியாளர் | 4 | 2 | 2 | 2 | 3 | 0 |
| 7 | வரைவாளர் | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 8 | பூங்கா கண்காணிப்பாளர் | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 9 | செயல்திறன் பணியாளர் நிலை II | 6 | 6 | 2 | 1 | 2 | 1 |
| 10 | மின்பணியாளர் | 0 | 2 | 1 | 1 | 1 | 0 |
| 11 | மின்பணி உதவியாளர் | 0 | 0 | 2 | 0 | 1 | 0 |
| 12 | செயல்திறனற்ற பணியாளர் | 7 | 20 | 25 | 12 | 49 | 28 |
| | **மொத்தம்** | **24** | **32** | **38** | **19** | **61** | **32** |

**6–5. பொது சுகாதாரம்**

| வ. எண் | அலுவலர்கள் | மைய அலுவலகம் | வார்டுக்குழு எண் – 1 | வார்டுக்குழு எண் – 2 | வார்டுக்குழு எண் – 3 | வார்டுக்குழு எண் – 4 | வார்டுக்குழு எண் – 5 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | 2 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | நகர சுகாதார செவிலியர் | 14 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | பகுதி சுகாதார செவிலியர் | 2 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | மருந்தாளுநர் | 4 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 5 | களப்பணியாளர் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | சுகாதார அலுவலர் | 5 Establishment | 1 | 0 | 1 | 0 | 1 |
| 7 | சுகாதார ஆய்வர் | 8 Establishment | 1 | 0 | 1 | 0 | 2 |
| 8 | துப்புரவு ஆய்வர் | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 9 | தூய்மை பணி மேற்பார்வையாளர் | 2 | 18 | 5 | 7 | 6 | 8 |
| 10 | ஓட்டுநர் | 26 | 9 | 11 | 2 | 5 | 7 |
| 11 | பெண் கட்டு கட்டுபவர் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 12 | அலுவலக உதவியாளர்(பெண்) | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13 | தூய்மை பணியாளர்கள் | 97 | 164 | 188 | 102 | 173 | 213 |
| | **மொத்தம்** | **163** | **193** | **204** | **114** | **184** | **231** |

## 7. பொது நிர்வாகத்தின் பணிகள்

பணி நியமனங்கள் , பணி மாறுதல்கள் , பணி உயர்வு வழங்குதல் , ஊதிய நிர்ணயம் , ஊதிய உயர்வு வழங்குதல், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தல், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், ஊதியம் பட்டுவாடா செய்தல் , மாநகராட்சிக்கு வரும் அனைத்து தபால்களுக்கும் பொதுப்பிரிவில் பகிர்மான எண்ணிடப்பட்டு, மைய அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் மற்றும் ஐந்து வார்டுக்குழு அலுவலகங்களுக்கும் அனுப்புதல் , முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலிரு ந்து பெறப்படும் மனுக்கள் , மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து பெறப்படும் மக்கள் குறைத்தீர்க்கும் விண்ணப்பங்கள், மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் பெறப்படும் குறை தீர்க்கும் விண்ணப்பங்களை பெற்று , அவற்றிற்கு எண்ணிட்டு பதில் அளித்தல் , சத்துணவு மையங்கள் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

உதவி ஆணையர் (பணியாளர்) அவர்களின் நிர்வாகத்தின் கீழ் நிர்வாகப்பிரிவு , கணினிபடுத்துதல், பதிவு வைப்பறை , நகர்ப்புற உள்ளாட்சி தேர்த ல்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பு, மாநகராட்சி எல்லை விரிவாக்கம் , வார்டு மறு வரையறை ஆகிய பணிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

"பொது மக்கள் குறைத்தீர்க்கும் " நாளில் மனுக்கள் மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் நேரில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வார்டு அலுவல கங்களுக்குரிய மனுக்களும், உடனடியாக வார்டுக்குழு அலுவலகங்களுக்கு உதவி ஆணையர்களின் மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. முக்கியமான அடிப்படை வசதி கோரி குடிநீர், வடிகால், மின்விளக்கு, சாலை வசதிகள் கோரி , தபால் மூலமாக பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றிற்கும் உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது . பொது மக்கள் குறைத்தீர்க்கும் மனுக்களை பிற துறைகளுக்கு அனுப்பப்பட்டதில் அனைத்து அலுவலர்களும் அம்மனுக்கள் மீது தீர்வு கண்டு மனுதாரர்களுக்கு பதில் அனுப்பியும் , இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்தியும் குறைத்தீர்க்கும் பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடிதங்கள் முறையாக கணினி மூலம் தயார் செய்து , தலைமை அலுவலர்களிடம் ஒப்பம் பெற்ற பின்பு , தபால் மூலம் அவ்வப்போது சம்பந்தப்பட்ட தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது . மேலும் அரசிற்கு அனுப்பப்படும் தபால்களும், கணினி மூலம் த யார் செய்யப்பட்டு முறையாக அனுப்பி வைக்கப்படுகிறது . தபால் அனுப்புகை பணி கொரியர் சர்வீஸ் மூலமும் , அஞ்சல் மூலமும் , அவசரமாக இருப்பின் தொலையச்சு மற்றும் மின் அஞ்சல் மூலமும் , மற்ற ஏனைய உள்ளூர் தபால்களை அலுவலக உதவியாளர்கள் மூலமும் காலதாமதமின்றி அனுப்பும் பணி இப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் உரிய பதிவேடுகளில் முறையாக பதிவு செய்து , பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு , உதவி ஆணையர் (பணியாளர்) அவர்களால் மேற்பார்வையிடப்பட்டு வருகிறது.

மேலும், அரசு கடிதங்கள் மற்றும் ஆணையரால் "சிறப்பு", இன்றே என குறிப்பிடப்படும் கடிதங்கள் , தனித்தனி பதிவேட்டில் பதிந்து உடனுக்குடன் பதில் அனுப்பட்டு வருவது உறுதி செய்யப்படுகிறது.

மேற்கண்ட தபால் பிரிவில் பொது மக்களிடமிருந்தும் , இதர துறைகளிடமிருந்தும் பெறப்படும் கடிதங்கள் மற்றும் மனுக்கள் அனைத்தும் , அலுவலக முத்திரையிடப்பட்டு நடப்பு எண்கள் கொடுக்கப்பட்டு , ஒருங்கிணைக்கப்பட்ட பகிர்மான பதிவேட்டில் பதிந்த பின்னர், ஒவ்வொரு பிரிவிற்கும் பராமரிக்கப்படும் பகிர்மானப் பதிவேட்டில் பதிந்து ,

அனைத்து பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி ஆவண அறையில், அனைத்து பிரிவுகளிலிருந்தும் நடவடிக்கை முடிக்கப்பட்ட கோப்புகளை பெற்று, முடிவின் தன்மைக்கேற்ப பிரித்து, ஆண்டு மற்றும் வரிசை கிரமமாக அடுக்கி, அட்டவணை தொங்கவிட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது . பதிவறையிலிருந்து கோரப்படும் கோப்புகள் சம்பந்தப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்து, அவ்வப்போது தணிக்கைக்காகவோ அல்லது பின்னேற்பு நடவடிக்கைக்காகவோ , பராமரிப்பிலிருக்கும் முடிவுற்ற கோப்புகள் வழங்கும் பணியும் இப்பிரிவில் நடைபெற்று வருகிறது . முடிவுற்ற கோப்புகளை குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் , கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி கோப்புகள் அழிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . எழுதுப்பொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இருப்பு வைத்து வழங்கும் பணிகளும் இப்பிரிவில் நடைபெற்று வருகின்றன. இதே போன்று 5 வார்டுக்குழு அலுவலகங்களிலும் பதிவு வைப்பு அறைகள் செயல்பட்டு வருகிறது.

கருவூலப்பிரிவில் மைய அலுவலகம் மற்றும் 5 வார்டுக்குழு அலுவலகங்களிலும் கருவூல காப்பாளர் ஒருவர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் வீதம் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பிரிவில் பொது மக்களால் செலுத்தப்படும் கட்டணங்கள் , வரியினங்கள் மற்றும் அபராதங்கள் கணினி மூலம் பெற்று கணினி ரசீது வழங்கப்படுகிறது . தினந்தோறும் ரொக்கமாக பெறப்படும் தொகைகளையும், காசோலை மூலம் பெறப்படும் தொகைகளையும் அன்றைய தினமே சம்பந்தப்பட்ட வங்கிகளில் செலுத்தப்பட்டு வருகிறது.

## 8. அலுவலகக்கட்டிடம்

மாநகராட்சி மைய அலுவலகக்கட்டிடம் மற்றும் வார்டுக்குழு அலுவலகங்கள் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகிறது.

## 9. அச்சடித்தல் மற்றும் படிவங்கள்

மாநகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள் எழுதுப்பொருட்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் கூட்டுறவு அச்சகங்கள் மூலமாகவும் , தமிழ்நாடு ஒளிவமரைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் 2000ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் அச்சடித்து பெறப்படுகிறது . இத்தலைப்பின் கீழ் ரூ.2.33 கோடி அறிக்கை ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

## 10. பொறியியல் பிரிவு

### 10–1 சாலைகள்:

மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்ட நிதியுதவிகளின் கீழும் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் கீழும் இவ்வறிக்கை ஆண்டில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2666.94 இலட்சம் செலவில் 35.97 கி.மீ நீளத்திற்கு மண் சாலைகளை தார் சாலைகளாகவும், ரூ.50.55 இலட்சம் செலவில் 0.61 கி.மீ நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகளாகவும் ரூ.9257.33 இலட்சம் செலவில் 112.01 கி.மீ நீளத்திற்கு பழுதடைந்த பழைய தார் தளம் மேம்படுத்தப்பட்டும், பழைய தார் தளத்தில் பேட்ச் பணிகள் மூலம் மேம்படுத்தும் பணி ரூ.1376.68 இலட்சம் செலவில் 107.14 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ரூ.977.97 இலட்சம் செலவில் 9.92 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைக்கப்பட்டும், ரூ.1151.28 இலட்சம் செலவில் 27.43 கி.மீ

நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரிட் தளம் மேம்படுத்தப்பட்டும், கருங்கல் தளம் திரும்ப பாவும் பணி ரூ.24.95 இலட்சம் செலவில் 0.95 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டும் உள்ளது.

**மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகள் பற்றிய விவரம்**

| வ.எண் | சாலைகளின் விவரம் | அறிக்கை ஆண்டில் உள்ள சாலைகளின் நீளம் (கி.மீ.ல்) |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 896.169 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 311.891 |
| 3 | மண் சாலைகள் | 144.751 |
| | **மொத்தம்** | **1352.811** |

## 11. மழைநீர் வடிகால்

இவ்வறிக்கை ஆண்டில் மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்ட நிதியுதவிகளின் கீழும் மற்றும் மாநகராட்சி பொது நிதியின் கீழும் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.579.38 இலட்சம் செலவில் 21.86 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டும், ரூ.518.50 இலட்சம் செலவில் 20.46 கி.மீ நீளத்திற்கு பழைய மழைநீர் வடிகால்களில் மராமத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி மூலம் இவ்வறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பற்றிய விவரம்.

| வ.எண் | மழைநீர் வடிகால் கட்டமைப்பு விவரம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | இரு பக்கமும் ப்ளெயன் சிமெண்ட் கான்கிரீட் கட்டிடம் (கம்பி இல்லாமல்) | 777.29 |

## 12. குடிநீர் விநியோகம்

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், இவ்வறிக்கை ஆண்டில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 135 விட்டர் வீதம், மொத்தம் 155.00 மில்லியன் லிட்டர் / நாள், கீழ்கண்ட 11 நீரேற்று நிலையங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 12–1. மாநகராட்சியால் பராமரிப்பு செய்து இயக்கப்படும் நீரேற்று நிலையங்கள்

1. தலைமை நீரேற்று நிலையம், கம்பரசம்பேட்டை
2. டர்பைன் நிலையம், கம்பரசம்பேட்டை
3. நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம், பெரியார் நகர், கம்பரசம்பேட்டை
4. நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம், அய்யாளம்மன் படித்துறை
5. நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம், ஆளவந்தான் படித்துறை, ஸ்ரீரங்கம்
6. நீர்சேகரிப்பு கிணறு எண்.1, மேலூர், ஸ்ரீரங்கம்
7. நீர்சேகரிப்பு கிணறு எண்.2, மேலூர், ஸ்ரீரங்கம்
8. நீர்சேகரிப்பு கிணறு எண்.3, மேலூர், ஸ்ரீரங்கம்

**12–2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிப்பு செய்து இயக்கப்படும் நீரேற்று நிலையங்கள்**

1. பிராட்டியூர் கூட்டுக்குடிநீர் திட்ட நீரேற்று நிலையம், ஜீயபுரம்
2. திருவெறும்பூர் கூட்டுக்குடிநீர் திட்ட நீரேற்று நிலையம், பஞ்சக்கரை, ஸ்ரீரங்கம்
3. புத்தாபுரம் நீர்ப்பணி நிலையம், புத்தாபுரம், சர்கார் பாளையம்

மேற்கண்ட நீர்ப்பணி நிலையங்கள் மூலம் உந்தப்பட்ட குடிநீரினை, முதல் நிலையில் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் 2868725 லிட்டர் கொண்டு கிருமிநாசனி செய்யப்பட்டும், மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் வால்வு தொட்டிகளை இரண்டாம் நிலையில் 27 மெட்ரிக் டன் பீளிச்சிங் பவுடர் (தரம் – I) கொண்டு சுத்தம் செய்யப்பட்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள நீரேற்று நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றிகள், பல தரப்பட்ட குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்பு செட்டுகள், 250 மி.மீ விட்டமுன்ன நீர் ஆதார ஆழ்குழாய் கிணறுகளில் நிறுவப்பட்டுள்ள நீர்மூழ்கி மோட்டார் பம்பு செட்டுகள், இயக்கிக் கருவிகள் மற்றும் இதர உபகரணங்கள் ஆகியவற்றின் இயக்க பராமரிப்பிற்குத் தேவையான தளவாடங்கள், உபஉறுப்புகள், மாற்று கருவிகள் வாங்கப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்கு தடையின்றி சீராக குடிநீர் உந்தப்பட்டு பொது மக்கள் பயன்பெறும் வகையில் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிகளுக்காக கீழ் குறிப்பிட்டுள்ளவாறு செலவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிகள் விவரம்** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | சோடியம் ஹைப்போ குயோரைடு திரவம், பிளிச்சிங் பவுடர் வாங்கும் பணிகள் | 434.49 |
| 2 | குடிநீர் உந்து, விநியோகக்குழாய்கள் பதிக்கும் பணிகள் | 277.16 |
| 3 | தலைமை நீர்ப்பணி நிலைய அபிவிருத்திப் பணிகள், குடிநீர் விநியோகப் பணிகளுக்குத் தேவையான குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் விநியோகம் செய்தல் | 632.80 |
| 4 | ஒரு எண்ணிக்கை கைபம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல், மராமத்து செய்யும் பணி மேற்கொள்ளுதல், கைபம்பு உதிரி பாகங்கள் வாங்குதல் | 66.95 |
| 5 | PVC தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தருதல் | 115.46 |
| 6 | SCADA அமைப்பு பராமரித்தல், மராமத்து செய்யும் பணி மேற்கொள்ளுதல் | 282.99 |
| 7 | இதர குடிநீர் பணிகள்(Aeartor and OHT Maintenance & Repairs) | 517.99 |
| | **மொத்தம்** | **2268.84** |

**12–3. தலைமை நீர்ப்பணி நிலையம், கம்பரசம்பேட்டை – (Main Pumping Station)**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு காவேரி ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டுள்ள 20 ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள 15 ஆழ்துளைகிணறுகளில் ஒவ்வொரு கிணற்றிலும் 25 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பம்பு செட்டுகள் நிறுவப்பட்டு, அதன் மூலம் குடிநீர் உந்தப்பட்டு, இத்தலைமை நீர்ப்பணி நிலையத்தில் சேகரிக்கப்பட்டு, இந்நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள 335 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார்

பம்புசெட்டின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 14.00 மில்லியன் லிட்டர் குடிநீர் உந்தப்பட்டு, இந்நீர்ப்பணி நிலையத்தின் கீழ் அடங்கும் 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு, அவைகள் மூலம் மாநகரின் பழைய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**<u>12–4. டர்பைன் நிலையம், கம்பரசம்பேட்டை</u>**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு காவேரி ஆற்று கரை மற்றும் ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் ஒவ்வொரு கிணற்றிலும் 25 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்சி மோட்டார் பம்புசெட்டுகள் நிறுவப்பட்டு அதன் மூலம் குடிநீர் உந்தப்பட்டு இந்நீரேற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்டு, இந்நீரேற்று நிலையத்திலிருந்து 120 / 150 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்பு செட்டுகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 13.00 மில்லியன் லிட்டர் குடிநீர் உந்தப்பட்டு, இந்நீரேற்று நிலையத்தின் கீழ் அடங்கும் 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு மாநகரின் பழைய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**<u>12–5. நீர் சேகரிப்புக் கிணற்றுடன் கூடிய தலைமை நீர்ப்பணி நிலையம் (கம்பரசம்பேட்டை பேரியார் நகர் – கலெக்டர் வெல்)</u>**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இந்நீரேற்று நிலையத்தில், 680 குதிரைத்திறன் கொண்ட உயர்மின்னழுத்த மின்மோட்டார் பம்பு செட்டின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 33.00 மில்லியன் லிட்டர் குடிநீர் உந்தப்பட்டு, இந்நீரேற்று நிலையத்தின் கீழ் அடங்கும் மொத்தம் 14 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு மாநகரின் மையப்பகுதிக்கு தங்குதடையின்றி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**<u>12–6. ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்ட தலைமை நீர்ப்பணி நிலையம், ஆளவந்தான் படித்துறை (கொள்ளிடம்)</u>**

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இத்தலைமை நீரேற்று நிலையத்தில், 75 குதிரை திறன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் 3 எண்ணிக்கைகள் நிறுவப்பட்டுள்ளது. இரண்டு எண்ணிக்கை 75 குதிரை திறன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் இணையாக இயக்கப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 11.00 மில்லியன் குடிநீர் உந்தப்பட்டு இந்நீரேற்று நிலையத்தில் அடங்கும் மொத்தம் 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு, ஸ்ரீரங்கம் பகுதி முழுவதற்கும் குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது.

**<u>12–7. ஸ்ரீரங்கம், மேலூர் நீர் சேகரிப்பு கிணறு எண்.1 உடன் கூடிய நீரேற்று நிலையம், (கொள்ளிடம்)</u>**

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீரேற்று நிலையத்தில், 75 குதிரை திறன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் 3 எண்ணிக்கைகள் நிறுவப்பட்டு, அவைகளில் இரண்டு எண்ணிக்கை 75 குதிரைத்திறன் மின்மோட்டார் பம்புசெட்டுகள் இணையாக இயக்கப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 18.25 மில்லியன் லிட்டர் குடிநீர் ஸ்ரீரங்கம் ஆண்டவர் ஆசிரமம், பொது தரைமட்ட நீர் தொட்டிக்கு உந்தப்படுகிறது.

**<u>12–8. ஸ்ரீரங்கம், மேலூர் நீர் சேகரிப்பு கிணறு எண்.2 உடன் கூடிய நீரேற்று நிலையம், (கொள்ளிடம்)</u>**

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீரேற்று நிலையத்தில், 100 குதிரை திறன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் 3 எண்ணிக்கைகள் நிறுவப்பட்டு, அவைகளில் இரண்டு எண்ணிக்கை 100 குதிரைத்திறன் மின்மோட்டார் பம்புசெட்டுகள் இணையாக இயக்கப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 19.75 மில்லியன் லிட்டர் குடிநீர் ஸ்ரீரங்கம் ஆண்டவர் ஆசிரமம், பொது தரைமட்ட நீர் தொட்டிக்கு உந்தப்படுகிறது.

**12–9. ஸ்ரீரங்கம், ஆண்டவர் ஆசிரமம், தரைமட்ட நீர்த்தொட்டி, நீரேற்று நிலையம் (கொள்ளிடம்)**

நீர்சேகரிப்பு கிணறுகள் I மற்றும் IIன் வாயிலாக உந்தப்படும் குடிநீரானது இந்நீரேற்று நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள 270 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்பு செட்டுகள் 3 எண்களில், இரண்டு 270 குதிரைத்திறன் மின்மோட்டார் பம்புசெட்டுகள் மூலம் இணையாக இயக்கப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 37.50 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு, இந்நீரேற்று நிலையம் தொடர்புடைய மொத்தம் 55 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நிரப்பி குடிநீர் விநியோகம் செய்யும் பணி நடைபெறுகின்றது.

**12–10. ஸ்ரீரங்கம், மேலூர் நீர் சேகரிப்பு கிணறு எண்.3 தலைமை நீரேற்று நிலையம், (கொள்ளிடம்)**

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீரேற்று நிலையத்தில், 120 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்பு செட்டுகள் 3 எண்கள் நிறுவப்பட்டு, அவைகளில் இரண்டு எண்ணிக்கை 120 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் பம்புசெட்டுகள் இணையாக இயக்கப்பட்டு, சராசரியாக நாளொன்றுக்கு 21.00 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு, இந்நீரேற்று நிலையத்தின் தொடர்டைய பகுதி வாழ் பொது மக்களுக்கு உறையூர், புத்தூர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பி, குடிநீர் விநியோகம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.

**12–11. பிராட்டியூர் கூட்டுக்குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையம் (ஜீயபுரம்)**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீர்ப்பணி நிலையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தலைமை நீர்ப்பணி நிலையத்திலிருந்து 50 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் பம்புசெட்டுகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 4.00 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் உந்தப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட 6 மேல்நிலை தீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான தண்ணீர் கட்டணம் நிலுவையின்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாதாமாதம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நீர்ப்பணி நிலையத்திலிருந்து மாநகராட்சி பகுதிகளுக்கு மட்டுமல்லாது வழித்தடங்களில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**12–12. திருவெறும்பூர் கூட்டுக்குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையம், (கொள்ளிடம்)**

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீர்ப்பணி நிலையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தலைமை நீர்ப்பணி நிலையத்திலிருந்து 75 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் பம்புசெட்டுகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 3.75 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் உந்தப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட 22 மேல்நிலை தீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான தண்ணீர் கட்டணம் நிலுவையின்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அவ்வப்போது செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நீர்ப்பணி நிலையத்திலிருந்து மாநகராட்சி பகுதிகளுக்கு மட்டுமல்லாது வழித்தடங்களில் உள்ள சில கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**12–13. புத்தாபுரம் தலைமை நீர் பணி நிலையம் (காவேரி ஆறு)**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இத்தலைமை நீர்ப்பணி நிலையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தலைமை நீர்ப்பணி நிலையத்திலிருந்து 25 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் பம்புசெட்டுகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 0.80 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் உந்தப்பட்டு

மாநகராட்சிக்குட்பட்ட 18 மேல்நிலை தீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான தண்ணீர் கட்டணம் நிலுவையின்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அவ்வப்போது செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நீர்ப்பணி நிலையத்திலிருந்து மாநகராட்சி பகுதிகளுக்கு மட்டுமல்லாது வழித்தடங்களில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**12–14. நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம் – அய்யாளம்மன் படித்துறை**

காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய இந்நீரேற்று நிலையத்தில் 400 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்புசெட்டு, காவிரி ஆற்றுப்படுகை மற்றும் ஆற்றின் கரையில் மொத்தம் 17 எண்ணிக்கையிலான 250 மி.மீ விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவைகள் ஒவ்வொன்றிலும் 25 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டும், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக 12 எண்கள் நீள் சுற்றுக்குழாய்கள் (Radial Arms) அமைக்கப்பட்டு இத்தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் குடிநீர் விநியோகம் புதிதாக இணைக்கப்பட்ட புதிய வார்டு எண்.38,39,40,41,42,43 ( பழைய வார்டு 61 முதல் 65 வரை) உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 20 MLD குடிநீர் உந்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும் வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் விவரம்.

| வ.எண் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைந்துள்ள இடம் | கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) | மொத்த கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) |
|---|---|---|---|
| **அ) தலைமை நீரேற்று நிலையம் (கம்பரசம்பேட்டை)** | | | |
| 1 | மரக்கடை | 30.00 | 55.00 |
| 2 | விறகுப்பேட்டை | 25.00 | |
| **ஆ) டர்பைன் நீரேற்று நிலையம் (கம்பரசம்பேட்டை)** | | | |
| 3 | மலைக்கோட்டை | 20.00 | 47.00 |
| 4 | சிந்தாமணி | 27.00 | |
| **இ) பிரதான நீர் சேகரிப்பு கிணறு தலைமை நீரேற்று நிலையம் (பெரியார் நகர்)** | | | |
| 5 | புத்தூர் (பழையது) | 4.50 | 139.50 |
| 6 | தில்லைநகர் | 20.00 | |
| 7 | அண்ணா நகர் | 10.00 | |
| 8 | காஜாபேட்டை (பழையது) | 10.00 | |
| 9 | காஜாபேட்டை (புதியது) | 25.00 | |
| 10 | கண்டோன்மென்ட் (பழையது) | 9.00 | |
| 11 | கண்டோன்மென்ட் (புதியது) | 20.00 | |
| 12 | உய்யக்கொண்டான் திருமலை (பழையது) சண்முகா நகர் | 1.50 | |
| 13 | உய்யக்கொண்டான் திருமலை (பழையது) எம்.எம்.நகர் | 2.50 | |
| 14 | ஜங்சன்(பழையது) | 20.00 | |
| 15 | ஜங்சன்(பொன்னகர்) | 5.00 | |
| 16 | கல்லாங்காடு(பழையது) | 1.00 | |

| | | | |
|---|---|---|---|
| 17 | கருமண்டபம் | 5.00 | |
| 18 | தெற்கு ராமலிங்க நகர் | 5.00 | |
| 19 | பெரிய மிளகு பாறை (Physiotherapy College) | 5.00 | |
| **ஈ) நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம் (அய்யாளம்மன் படித்துறை)** | | | |
| 20 | பழைய எல்லக்குடி | 1.00 | 51.00 |
| 21 | ஆலத்தூர் | 2.00 | |
| 22 | புகழ் நகர் | 5.00 | |
| 23 | காவேரி நகர் | 5.00 | |
| 24 | பாரி நகர் | 8.00 | |
| 25 | சந்தோஷ் நகர் | 8.00 | |
| 26 | கணேஷ் நகர் | 8.00 | |
| 27 | திருவெறும்பூர் o காலனி | 14.00 | |
| **உ) பிராட்டியூர் கூட்டுக்குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையம் (ஜீயபுரம்)** | | | |
| 28 | ராம்ஜி நகர் | 1.50 | 19.50 |
| 29 | பிராட்டியூர் | 1.00 | |
| 30 | எடமலைப்பட்டிபுதூர் | 7.00 | |
| 31 | விஸ்வாஸ் நகர் | 3.00 | |
| 32 | பிராட்டியூர் காவேரி நகர் (புதியது) | 3.00 | |
| 33 | ஜெய நகர் (புதியது) | 4.00 | |
| **ஊ) காவேரி – புத்தாபுரம் (விக்னேஷ்நகர் தரைமட்ட தொட்டி) (வார்டு எண்.63)** | | | |
| 34 | எல் ஐ சி நகர் | 0.60 | |
| 35 | கோகுல் நகர் | 0.60 | |
| 36 | சந்தோஷ் நகர் | 0.30 | |
| 37 | பிரியங்கா நகர் | 0.30 | |
| 38 | ஸ்ரீராம் நகர் | 0.30 | |
| 39 | அம்மன் நகர் தெற்கு விஸ்தரிப்பு | 0.10 | |
| 40 | ஏ ஆர் என் அவென்யூ | 0.10 | |
| 41 | அத்திக்குடி | 0.10 | |
| 42 | கீதாபுரம் | 0.10 | |
| **எ) பிரதான நீர் சேகரிப்பு கிணறு (குடிநீர் அபிவிருத்தி திட்டம் III – WSIS)** | | | |
| 43 | உறையூர் (பழையது) | 10.00 | 98.00 |
| 44 | உறையூர் (புதியது) | 18.00 | |
| 45 | மேலபாண்டமங்கலம் மங்களா நகர் | 5.00 | |
| 46 | பாத்திமா நகர் | 6.00 | |
| 47 | சிவ நகர் | 5.00 | |
| 48 | ரெயின்போ நகர் | 6.00 | |
| 49 | செல்வ நகர் | 6.00 | |
| 50 | ஆனந்தம் நகர் | 12.00 | |
| 51 | பாரதி நகர் | 10.00 | |
| 52 | புத்தூர் (புதியது) | 20.00 | |
| **ஏ) ஸ்ரீரங்கம் குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையம் (ஆளவந்தார் படித்துறை)** | | | |
| | அம்மாமண்டபம் (புதியது) | 12.00 | 53.50 |
| 53 | தேவி பள்ளி | 5.00 | |
| 54 | மேலூர் ரோடு | 10.00 | |
| 55 | டி வி கோயில் | 6.50 | |
| 56 | பெரியார் நகர் (மாம்பல சாலை) | 10.00 | |

| | | | |
|---|---|---|---|
| 57 | AIBEA நகர் ( பேங்கர்ஸ் காலனி) | 5.00 | |
| 58 | பாலாஜி அவென்யூ | 5.00 | |
| ஐ) பிரதான நீர் சேகரிப்பு கிணறு (குடிநீர் அபிவிருத்தி திட்டம் I, II - WSIS) | | | |
| 59 | அரியமங்கலம் உக்கடை | 1.00 | 98.60 |
| 60 | அரியமங்கலம் கிராமம் | 1.00 | |
| 61 | உக்கடை அரியமங்கலம் தெற்கு | 4.00 | |
| 62 | மலைப்பா நகர் | 4.00 | |
| 63 | மலைப்பா நகர்(WSIS) | 4.00 | |
| 64 | ரெயில் நகர் (பழையது) | 3.00 | |
| 65 | ரெயில் நகர் கம்போஸ்ட் யார்டு அருகில் | 4.00 | |
| 66 | ஜெகநாதபுரம் (Sec Office) | 3.00 | |
| 67 | ஜெகநாதபுரம் (WSIS) | 4.00 | |
| 68 | மாஜி ராணுவ காலனி | 1.00 | |
| 69 | மாஜி ராணுவ காலனி(WSIS) | 4.00 | |
| 70 | மேலகல்கண்டார் கோட்டை ஆபிஸ் | 3.00 | |
| 71 | மேலகல்கண்டார் கோட்டைNM வீதி | 4.00 | |
| 72 | மேலகல்கண்டார் கோட்டை நூலகம் | 2.00 | |
| 73 | பொன்னேரிபுரம் | 1.00 | |
| 74 | பொன்னேரிபுரம்(WSIS) | 2.00 | |
| 75 | கங்கிலியாண்டபுரம் | 7.00 | |
| 76 | கங்கிலியாண்டபுரம்(WSIS) | 10.00 | |
| 77 | கல்லுகுழி | 5.00 | |
| 78 | விவேகானந்தா நகர் | 1.00 | |
| 79 | தேவதானம் (WSIS) | 4.00 | |
| 80 | மகாலெட்சுமி நகர் (WSIS) | 4.00 | |
| 81 | கல்லுகுழி (WSIS) | 4.00 | |
| 82 | விறகுப்பேட்டை (WSIS) | 15.00 | |
| 83 | அம்பேத்கார் நகர் (WSIS) | 1.00 | |
| 84 | கீழகல்கண்டார் கோட்டை மெயின் ரோடு | 0.60 | |
| 85 | இ பி காலனி | 2.00 | |
| ஒ) ஸ்ரீரங்கம் கலெக்டர் வெல் (ஆண்டவன் ஆசிரமம்) | | | |
| 86 | பொன்மலைப்பட்டி | 6.00 | 110.30 |
| 87 | பொன்மலைப்பட்டி ஐஸ்வர்யா நகர் | 3.00 | |
| 88 | மத்திய ஜெயில் | 7.00 | |
| 89 | சுந்தர்ராஜ் நகர் | 8.00 | |
| 90 | சுந்தர்ராஜ் நகர்(WSIS) | 4.00 | |
| 91 | ஜே கே நகர் (WSIS) | 7.00 | |
| 92 | செம்பட்டு (WSIS) | 8.00 | |
| 93 | காஜாமலை இபி காலனி | 2.00 | |
| 94 | காஜாமலை (பழையது) | 5.00 | |
| 95 | காஜாமலை (WSIS) | 3.00 | |
| 96 | ரெங்கநகர் (WSIS) | 5.00 | |
| 97 | சுப்ரமணிய நகர் (அசாத் நகர்) | 4.00 | |
| 98 | வி என் நகர் (WSIS) | 5.00 | |
| 99 | தென்றல் நகர் (WSIS) | 4.00 | |
| 100 | கவிபாரதி நகர் (WSIS) | 3.00 | |
| 101 | காமராஜ் நகர் (ஏர்போர்டு) | 7.00 | |
| 102 | கிராப்பட்டி (பழையது) | 1.50 | |

| | | | |
|---|---|---|---|
| 103 | கிராப்பட்டி (WSIS) | 4.00 | |
| 104 | அன்பு நகர் | 2.00 | |
| 105 | அன்பு நகர் (WSIS) | 4.00 | |
| 106 | எ.புதூர் எம்.ஜிஆர் நகர் (WSIS) | 4.00 | |
| 107 | பஞ்சப்பூர் (WSIS) | 2.00 | |
| 108 | அம்மன் நகர் | 1.00 | |
| 109 | எல் ஐ சி பழையது | 0.30 | |
| 110 | இ.பி.காலனி(புதியது) | 2.00 | |
| 111 | எல் ஐ சி புதியது | 1.50 | |
| 112 | விஸ்வநாதபுரம் | 2.00 | |
| 113 | கே.சாத்தனூர் | 1.00 | |
| 114 | தென்றல் நகர் | 1.00 | |
| 115 | ஆனந்தம் நகர் | 2.00 | |
| 116 | சத்தியவாணி முத்து கே.கே.நகர் | 1.50 | |
| 117 | சுப்ரமணியநகர் | 2.00 | |
| **ஓ) கொள்ளிடம் – திருவெறும்பூர் கூட்டுக்குடிநீர் திட்டம் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரைமட்ட தொட்டி வார்டு எண்.64, 65)** | | | |
| 118 | வள்ளுவர் நகர் | 14.00 | |
| 119 | விக்னேஷ் நகர் | 1.00 | |
| 120 | வைத்தியலிங்கம் நகர் | 1.00 | |
| 121 | கணேஷ் நகர் (கொள்ளிடம்) | 0.60 | |
| 122 | மஞ்சதிடல் (அகரம்) | 0.60 | |
| 123 | சக்தி நகர் | 0.60 | |
| 124 | ஸ்ரீபாலாஜி நகர் | 0.30 | |
| 125 | கொக்கரசம்பேட்டை | 0.30 | |
| 126 | எல்லக்குடி | 0.30 | |
| 127 | ஆலத்தூர் | 1.00 | 27.40 |
| 128 | ஆலத்தூர் புதுத்தெரு | 0.30 | |
| 129 | காவேரி நகர் (ரேஷன் கடை) | 0.60 | |
| 130 | காந்தி நகர் | 1.00 | |
| 131 | பாத்திமா புரம் | 1.00 | |
| 132 | முருகன் கோயில் தெரு | 0.60 | |
| 133 | அழகு மாரியம்மன் கோயில் தெரு | 1.00 | |
| 134 | பர்மா காலனி | 0.60 | |
| 135 | வேணுகோபால் நகர் | 0.60 | |
| 136 | திருநகர் | 1.00 | |
| | | **706.40** | |

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை மொத்தம் 117722 வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகளும், குடியிருப்பில்லாத 2831 இணைப்புகளும், மற்றும் தொழிற்சாலைகளுக்கு 22 இணைப்புகளும் மொத்தம் 120575 இணைப்புகள் கொடுக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாநகராட்சிக்குட்பட்ட மிகவும் பின் தங்கியுள்ள பகுதிகளில் வீட்டுக்குழாய் இணைப்பு கொடுக்க பொருளாதார வசதியில்லாத பகுதிகளில் மொத்தம் 2587 பொதுக் குழாய்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

குடிநீர் உபயோகத்திற்கு அல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்துவதற்காக, மின்மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளின் மூலம் தண்ணீர் உந்தப்பட்டு 271 எண்ணிக்கை பொதுக்குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1949 எண்ணிக்கை கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் மூலமாகவும், குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்காகவும் தண்ணீர் வழங்கப்பட்டு நடப்பு ஆண்டு வரை சிறந்த துறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிக்குள் சட்ட விரோதமாக குடிநீர் விநியோகக் குழாயில் மின்மோட்டார் இணைத்து, குடிநீர் உறிஞ்சுபவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் நடப்பு ஆண்டில் 5 எண்ணிக்கை மோட்டார் பம்பு செட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (வார்டு எண்.61 முதல் 65 வரை) குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 61 முதல் 65 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு ரூபாய்.63.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.08.2015ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் 3 தொகுப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு 2 & 3 தொகுப்புகளுக்கான பணிகள் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டம் முடிவடைந்து ஆளவந்தான் படித்துறை நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தொகுப்பு எண்.1ல் அடங்கும் பணிகள் 90% முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை இத்திட்டத்திற்க்கு ரூ.6140.88 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**14. புதைவடிகால்**

இம்மாநகராட்சியில் கீழ்கண்டவாறு புதைவடிகால் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | திட்டம் | பயன்பெறும் பகுதிகள் |
|---|---|---|
| 1 | பழைய புதைவடிகால் திட்டம் – 1997 | பழைய திருச்சி நகராட்சி பகுதி |
| 2 | திருச்சி – ஸ்ரீரங்கம் புதைவடிகால் திட்டம் (தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம்) – 2000 | பழைய திருச்சி நகராட்சி விடுபட்ட பகுதிகள், பொன்மலை, ஸ்ரீரங்கம் நகராட்சி பகுதிகள் |
| 3 | ஸ்ரீரங்கம் விடுபட்ட பகுதிகள் 2018 | ஸ்ரீரங்கம் விடுபட்ட பகுதிகள் |

நடப்பு ஆண்டில் ரூ.253.99 இலட்சம் செலவில் உயர் மின் அழுத்தம், குறைந்த மின் அழுத்தம் மற்றும் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்கள் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**14–1. இம்மாநகராட்சியில் கழிவு நீரேற்று நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் விவரம்**

| வ.எண் | கழிவு நீர் உந்து நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் விவரம் | கழிவு நீர் உந்து நிலையம் பற்றிய விவரம் |
|---|---|---|
| 1 | வெனிஸ் நகர் (பிளாக் – I) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 2 | வாசுதேவன் நகர் (SPS – III) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 3 | தஞ்சாவூர் ரோடு (பிளாக் – II) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 4 | மணல்வாரித்துறை (GRPS – I) | உயர் மின்னழுத்தம் (HT) |

| | | |
|---|---|---|
| 5 | ஒத்தக்கடை (MPS – 1) (மெயின்) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 6 | பீமநகர் (பிளாக் – V) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 7 | அண்ணா ஸ்டேடியம் (MPS – II) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 8 | வயலூர் ரோடு (பிளாக் – VI) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 9 | மேல சிந்தாமணி (NRAP) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 10 | சாஸ்திரி ரோடு (பிளாக் – IV) | உயர் மின்னழுத்தம் (HT) |
| 11 | மேலூர் ரோடு (பழையது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 12 | மேலூர் ரோடு (SPS – I) (புதியது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 13 | அம்மாம்ண்டபம் ரோடு (SPS – IA) (புதியது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 14 | ரயில்வே கேட் (SPS – II) (புதியது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 15 | வாழை தோப்பு பைபாஸ் ரோடு (திருவானைக்கோவில்) (SPS – III A) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 16 | கொண்டையம்பேட்டை (SPS – III B2) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 17 | வரகனேரி பெரியார் நகர் (பிளாக் – II A) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 18 | G – கார்னர் மாடு வதை கூடம் அருகில் (GRPS – II) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 19 | ராஜா காலனி (பழையது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 20 | பெரிய மிளகுபாறை | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 21 | கல்லுக்குழி (பிளாக் – VII) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 22 | உறையூர் பனிக்கன் தெரு (பிளாக் – III) (பழையது) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 23 | பனிக்கன் தெரு (NARP) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 24 | கோணக்கரை (NRAP) | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 25 | லெட்சுமி நாராயணன் நகர் | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 26 | பெரியார் நகர் | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 27 | ஸ்ரீராம் நகர் | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 28 | திம்முராய சமுத்திரம் | குறைந்த மின்னழுத்தம் (LT) |
| 29 | வெனிஸ் நகர் | (சாலையோரம் கழிவு நீர் உந்து நிலையம்) |
| 30 | அம்மாமண்டபம் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 31 | ராஜாஜி தெரு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 32 | ஸ்ரீரங்கம் வடக்கு வாசல் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 33 | திருவானைக்கோவில் வடக்கு வாசல் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 34 | வீரேஸ்வரம் அணுகு சாலை | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 35 | கொள்ளிடம் ஆற்றுக்கரை | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 36 | டிரங்க் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 37 | ஸ்ரீநகர் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 38 | கந்தன் நகர் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 39 | ஓத்தத்தெரு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 40 | பேங்கர்ஸ் காலனி | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 41 | நெல்சன் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 42 | சிங்கபெருமாள் கோயில் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 43 | மேலூர் ரோடு (மூலைகொல்லை தெரு) | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 44 | மார்க்கெட் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 45 | பெரியார் நகர் (ஸ்ரீரங்கம்) | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 46 | ஆண்டவன் கல்லூரி (ஸ்ரீரங்கம்) | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 47 | பர்மா காலனி | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 48 | அடையவளஞ்சான் (ஸ்ரீரங்கம்) | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 49 | வசந்தநகர் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 50 | அண்ணா ஸ்டேடியம் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |

| | | |
|---|---|---|
| 51 | ஸ்டேட் பாபங்க் காலனி | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 52 | ஆழ்வார் தோப்பு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 53 | அம்மையப்பநகர், உய்யக்கொண்டான் வாய்க்கால் அருகில் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 54 | வயலூர் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 55 | கணபதி தோட்டம் | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 56 | மேலூர் ரோடு (புதியது) | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 57 | நைட் சாயில் ரோடு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |
| 58 | தாகூர் தெரு | (சாலையோரம் லிப்டிங் ஸ்டேஷன்) |

| வ.எண் | கழிவு நீர் உந்து நிலையங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைமை கழிவு நீர் உந்து நிலையம் | 2 எண்கள் |
| 2 | துணை கழிவு நீர் உந்து நிலையம் | 26 எண்கள் |
| 3 | சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் | 30 எண்கள் |
| | **மொத்தம்** | 58 எண்கள் |

**. புதைவடிகால் திட்டம் – பகுதி 2 (Phase–2)**

**பாதாள சாக்கடை திட்டம் பகுதி – 2 (அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி )**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் மற்றும் விடுப்பட்ட பகுதிகளான வார்டு எண். 8,9,10,11,12,15,16,17.18,21,24,25,26, 35,40,41**,** 42,45,54, **– பகுதியாகவும் வார்டு எண்.**36,37,38,43,44 **– முழுவதுமாகவும் ஆக மொத்தம் 24 வார்டு மக்கள் பயன்பெறும் வகையில்** அம்ரூத் திட்டம் 2016–17ன் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பகுதி 2 – ரூ. 377.29 கோடி மதிப்பீட்டில் 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, தொகுப்பு 2 மற்றும் தொகுப்பு எண்.3ல் அனைத்து பணிகள் முடிவுற்றது. தொகுப்பு எண்.1 மட்டும் முடிவடையும் நிலையில் உள்ளது.

**15** (ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் /திட்ட எண் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு | | |
| | | | | மாநகராட்சி நிதி | ஆசிய வங்கி நிதி | |
| | | | | | மான்யம் | கடன் |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் வழங்குதல் (பகுதி II) | 377.29 | 172.00 | 68.80 | 43.11 | 55.54 | 37.84 |

இத்திட்டத்தில்

- 287.900 கி.மீ நீளம் கழிவுநீர் குழாய்களில் 287.~~572~~ கி.மீ கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளன,
- 23.832 கி,மீ கழிவுநீர் உந்துகுழாய்களில் 28.499 கி.மீ கழிவுநீர் உந்துக்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

- 11261 எண்கள் ஆழ்நுழைவுத் தொட்டிகளில் 11254 எண்கள் ஆழ்நுழைவுத் தொட்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 6 எண்கள் கழிவு உந்து நிலையங்களில் 6 எண்கள் முடிக்கப்பட்டுள்ளது. மின்மோட்டார் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- 28 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்களில் 28 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளன மின்மோட்டார் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- 36469 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்புகளில் முழுவதும் பாதாள சாக்கடை இணைப்கள் வழங்கப்பட்டுள்ளன,
- இதுநாள் வரை 97.4 சதவீதப் பணிகள் முடிவடைந்தள்ளன.
- இத்திட்ட பணியானது மார்ச் 2025க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

**16. <u>பாதாள சாக்கடை திட்டம் பகுதி – 3 (அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி )</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளான வார்டு எண். 25,26,40,41,42,45,46,55,58,60,61,63 பகுதியாகவும் வார்டு எண். 57,59,62,65– முழுவதுமாகவும் ஆக மொத்தம் – 16 வார்டு மக்கள் **பயன்பெறும் வகையில்** அம்ரூத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பகுதி 3, தொகை ரூ. 330.31 கோடி மதிப்பீட்டில் 1 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பாதாள சாக்கடை திட்ட பணியினை மெசர்ஸ். லார்சன் & டர்போ கம்பெனி லிட் சென்னை நிறுவனம் மூலம் 90.57 % பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், பிறதுறைகளிடமிருந்து கழிவுநீர் குழாய் பதிக்க அனுமதி, சேவை வரி ( GST), Price Variation, ஆகியவைகளில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளதால் திட்ட பணியினை குறிப்பிட்ட காலத்திற்கு முடிக்க வேண்டிய காரணத்தினால் கூடுதல் மதிப்பீடு தொகை ரூ.425.72 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதிக்கான **அரசாணை (நிலை) எண்.195 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.10.2024ல்** அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் பின்வருமாறு.

**ரூபாய் கோடியில்**

**அட்டவணை எண்.3**

| **திட்டம் பெயர்** | **இந்திய அரசு மான்யம்** | **மாநில அரசு மான்யம்** | மாநகராட்சி பங்களிப்பு | **ஆசிய வளர்ச்சி வங்கி கடன் ( ADB)** | **ஆசிய வளர்ச்சி வங்கி மான்யம்** | **TUFIDCO (கடன்)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் ( பகுதி–3) | 132.06 | 52.82 | 66.19 (40.78+25.41) | 49.96 | 54.69 | 70.00 | 425.72 |

இத்திட்டத்தில்,

- 292.900 கி.மீ நீளம் கழிவுநீர் குழாய்களில் 290.335 கி.மீ கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளன,
- 28.207 கி,மீ கழிவுநீர் உந்துகுழாய்களில் 20.409 கி.மீ கழிவுநீர் உந்துக்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.
- 11890 எண்கள் ஆழ்நுழைவுத் தொட்டிகளில் 11665 எண்கள் ஆழ்நுழைவுத் தொட்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 6 எண்கள் கழிவு உந்து நிலையங்களில் 6 எண்கள் முடிக்கப்பட்டுள்ளது. மின்மோட்டார் பொருத்தும் பணி நடைபெற உள்ளது.
- 24 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்களில் 24 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளன மின்மோட்டார் பொருத்தும் பணி நடைபெற உள்ளது
- 36120 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்புகளில் 35290 எண்கள் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- இத்தொகுப்பில் 90.57 சதவீதப் பணிகள் முடிவடைந்தள்ளன.
- இத்திட்ட பணியானது மார்ச் 2025க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

<u>17. விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் ( Phase IV) –அம்ரூத் 2.0</u>

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை வசதி விடுபட்ட பகுதிகளுக்கு சுமார் 143.662 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு (Phase IV) அம்ரூத் 2.0 (2023–24) திட்டத்தின் கீழ், அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.09.2023ல் ரூ.221.39 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

| **திட்டத்தின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** | **திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்** | | |
|---|---|---|---|---|
| | | **ஒன்றிய அரசு மான்யம்** | **தமிழக அரசு மான்யம்** | **உள்ளாட்சி / பிற நிறுவன நிதி ஆதார பகிர்வு** |
| விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV) | 221.39 | 73.06 | 66.42 | 81.91 |

AMRUT 2.0 திட்ட நெறிமுறைகளின் படி செயல்படுத்திடவும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, சென்னை அவர்களின் கடிதம் எண். TNUDF/Projects/SMIF–TN–III/Trichy UGSS – Phase IV, நாள். 30.11.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் படி, ரூ.230.61 கோடிக்கு கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களின்படி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மானியம் | தமிழக அரசு மானியம் | ஜெர்மானிய வங்கி நிதி (Kfw) | |
| | | | | மானியம் | கடன் |
| விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV) | 230.61 | 73.06 | 66.42 | 45.56 | 45.57 |

- மேற்படி, திட்ட பணிக்கு 30.05.2024அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு. மெசர்ஸ். M/s. N.S.Patel & co, Ahmedabad in JV with M/s. SVD Infracon Ltd, Chennai நிறுவனத்திற்கு ரூ.235.06 கோடி ( Including 5 Years of O&M) 26.10.2024 அன்று பணி உத்திரவு கடிதம் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

- இத்திட்டத்தில், அடங்கும் பணிகள் விவரம் பின்வருமாறு.
  - கழிவுநீர் குழாய் – 143. 662 கி.மீ
  - பாதாள சாக்கடை வீட்டிணைப்புகள் – 16500
  - கழிவுநீர் உந்து நிலையம் – 09 எண்ணிக்கை
  - கழிவுநீர் சாலையோர உந்துநிலையம் – 14 எண்ணிக்கை
  - நுழைவுத் தொட்டிகள் (Machine Hole) – 5872 எண்ணிக்கை
  - கழிவுநீர் பிரதான குழாய் – 35.61 கி.மீ

இத்திட்டத்தில் அடங்கும் வார்டு எண்.8,25,46,55,56,63,64 மற்றும் 65. (லிங்க நகர், உய்யகொண்டான் திருமலை, பிராட்டியூர், ஓலையூர் மற்றும் பசுமை நகர் ஆகிய பகுதிகள்). இப்பணியானது ஆகஸ்ட், 2027 க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**18.பஞ்சப்பூரில் (100 MLD) நவீன முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் – SBR Technology (100 MLD)**

**மதிப்பீடு ரூ.233.87 கோடி**

- திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூரில் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 574.38 ஏக்கர் நிலப்பரப்பில், 247.50 ஏக்கரில். தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (NRCP) 58.64 MLD கொள்ளளவில் Waste Stabilization Pond முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்களை ஆய்வு செய்த போது, Waste Stabilisation Pond முறையில் சுத்திகரிப்பு செய்வதால், அதிகளவு இடம் பயன்படுத்த வேண்டியுள்ளதாலும், எதிர்வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு, புதிய நவீன தொழில்நுட்ப முறையில் (SBR Technology) 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை அரசாணை எண். 54 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.05.2023ல் ரூ.216.20 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

- இப்பணிக்கு கடன் மற்றும் மான்யம் பெறுவதற்கு திருத்தம் செய்து திருத்திய நிர்வாக அரசாணை எண். 36 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 06.03.2024ல் ரூ.233.87 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- (ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | ஜெர்மானிய வங்கி நிதி (Kfw) | |
| | | | | மான்யம் | கடன் |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பஞ்சப்பூரில் 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 233.87 | 71.35 | 64.86 | 48.83 | 48.83 |

- மேற்படி, இப்பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிப்ந்தனைகளின் படி M/s. Prathima Infrastructure Ltd, Hyderabad in JV with GSJ Envo Ltd, New Delhi, நிறுவனத்திற்கு 05.03.2024 அன்று வேலை ஏற்பு உத்திரவு வழங்கப்பட்டது.

- இத்திட்டத்தில் 18 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதுநாள் வரை ரூ.32.70 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தின் மூலம் வார்டு எண்.1,2,3,4,5,6,7,8,9,10,11,12, 13,14,15,16,17,18,19, 20,21,22,23,24,25,26,27,28,29,30,31,32,33,34,35,36,37,38,39,42,43,44,48, 49,50, 51,52,53, 54,59 ஆக மொத்தம் 50 வார்டு மக்கள் பயன் பெறுவாகள் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.
- இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**19. பொது கழிப்பிடம் (Public Toilet)**

இம்மாநகராட்சியின் ஐந்து கோட்டப்பகுதிகளில் உள்ள கீழ்கண்ட கழிப்பிடங்களில் பொது மக்கள் பணிபுரிவர், வெளியூர்களிலிருந்து வந்து செல்வோர், பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்வோர், மார்க்கெட் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் உள்ள மக்கள் பயன்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| வ.எண் | கழிப்பிட வகை | கழிப்பிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது கழிப்பிடம் | 28 |
| 2 | ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 1 |
| 3 | நம்ம கழிப்பிடம் | 5 |
| 4 | நவீன கட்டண கழிப்பிடம் | 5 |
| 5 | மாற்றுத்திறனாளிகள் கழிப்பறை | 5 |
| 6 | ஸ்மார்ட் கழிவறை | 2 |
| | **மொத்தம்** | **48** |

நடப்பாண்டில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.52.48 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**17–1. சமுதாய கழிப்பிடம் (Community Toilet)**

இம்மாநகராட்சியின் ஐந்து கோட்டப்பகுதியில் உள்ள கீழ்கண்ட கழிப்பிடங்களில் குறிப்பிட்ட தெரு மக்கள், சமுதாய மக்கள் பயன்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| வ.எண் | கழிப்பிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது கழிப்பிடம் | 280 |
| 2 | ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 57 |
| 3 | நம்ம கழிப்பிடம் | 13 |
| 4 | மாற்றுத்திறனாளிகள் கழிப்பிடம் | 8 |
| | **மொத்தம்** | **358** |

நடப்பாண்டில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.191.18 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**17–2. நவீன பொதுக்கழிப்பிடம்**

இப்பொது கழிப்பிடத்தில் ஏழை மற்றும் பொது மக்களின் நலன் கருதி மொத்தம் 308 நவீன கழிப்பிடங்கள், சுய உதவிக்குழு, சேவை, ஸ்கோபப, கிராமலாயா போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநகராட்சியின் மூலம் 24 மணி நேரமும் தண்ணீர் வசதியுடன் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**17–3. ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்**

ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தில் ஆண், பெண் மற்றும் சிறுவர்களுக்கான தனித்தனி கழிவறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் வசதி, இவ்வளாகங்களில் பயன்படுத்த தேவைப்படும் சிறு ஒப்பனைப் பொருட்கள் வாங்குவதற்கென ஒரு சிறிய கடை, இதற்கென ஆழ்குழாய் கிணறு, நீர்த்தேக்கத் தொட்டியுடன் 24 மணி நேரமும் தண்ணீர் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

மொத்தம் 58 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், சுய உதவிக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநகராட்சி மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**17–4. நவீன கட்டணக்கழிப்பிடம்**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சத்திரம் பேருந்து நிலையம் அருகில் மற்றும் பொது மக்கள் அதிக அளவில் வந்து போகும் இடங்களான அம்மாமண்டபம், சன்னதி வீதி, தென்னூர் உழவர் சந்தை மற்றும் சத்திரம் பேருந்து நிலையம் போன்ற பகுதிகளில் நீர்த்தேக்க தொட்டி வளாகம் போன்ற பகுதிகளில் மொத்தம் 5 நவீன கட்டண கழிப்பிடங்கள் 24 மணி நேர தண்ணீர் வசதியுடன் தனியார் நிறுவனத்திடம் ஏலத்திற்கு விடப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**17–5 மாற்றுத்திறனாளிகள் கழிப்பிடம்**

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ரேம்ப் வசதி Stainless Steel கைபிடியுடன் கூடிய ஆண் பெண் பயன்படுத்தும் நவீன கழிப்பிடம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**17–6. சீர்மிகு கழிப்பறைகள் (Smart Toilet)**

கோ–அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.52 க்குட்பட்ட அல்லித்துறை சாலையில், அரசு மருத்துவமனை அருகில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக சிமெண்ட் கான்கிரீட் மூலம் மோல்ட் செய்யப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறைகள் ஒரே நாளில் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**18. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி TURIP – 2021 – 2022**

இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.19089 / 2021 / இ2, நாள்.12.11.2021 அன்று ரூ.2000.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. இதற்கான மான்யம் ரூ.2000.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| வ. எண் | பணிகள் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சாலை அமைத்தல் / மேம்படுத்துதல் 24.267கி.மீ | 23 தொகுப்பு (140 பணிகள்) | 2000.00 |

தற்போது அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. இதற்காக ரூ.1927.19 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**19. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020 – 2021 (SRP)**

இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.20557 / 2020 / இ3–1, நாள்.23.12.2020 அன்று பெறப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடன் ரூ.2700.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.300.00 லட்சம் சேர்த்து மொத்தம் ரூ.3000.00 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகள் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சாலை அமைத்தல் / மேம்படுத்துதல் 50.62கி.மீ | 9 தொகுப்பு (156 பணிகள்) | 3000.00 |

தற்போது அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகளுக்காக ரூ.2812.83 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**20. 15–வது நிதிக்குழு திட்டம் 2020 – 2021**

இத்திட்டத்திற்கான அரசாணை G.O (D) No.384 MAWS (FC) பிரிவு நாள்.12.11.2020, நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.20452 / 2020 / LA3E3–1, நாள்.12.11.2020 அன்று பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.4200.00 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் காற்று மாசு ஏற்படுவதை தடுக்க கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>தலைப்பு</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>மானியம்</th><th>மாநகராட்சி பங்களிப்பு</th><th>முடிக்கப்பட்ட பணிகள்</th><th>மீதமுள்ள பணிகள்</th><th>செலவு</th><th>தற்போதைய நிலை</th><th></th></tr>
<tr><td rowspan="6">1</td><td rowspan="6">திடக்கழிவு மேலாண்மை 33 பணிகள்</td><td rowspan="6">1719.65</td><td rowspan="6">2100.00</td><td rowspan="6">0.00</td><td rowspan="6">21</td><td rowspan="6">12</td><td rowspan="6">1287.76</td><td>முடிவுற்றது</td><td>21</td></tr>
<tr><td>நடைபெற்று வருபவை</td><td>2</td></tr>
<tr><td>இடப்பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டவை</td><td>5</td></tr>
<tr><td>ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டவை</td><td>1</td></tr>
<tr><td>நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியவை</td><td>4</td></tr>
<tr><td>உப மொத்தம்</td><td>33</td></tr>
<tr><td rowspan="5">2</td><td rowspan="5">காற்று மாசுபடுவதை தடுக்கும் பணிகள் 33 பணிகள்</td><td rowspan="5">1721.95</td><td rowspan="5">2100.00</td><td rowspan="5">0.00</td><td rowspan="5">20</td><td rowspan="5">13</td><td rowspan="5">1393.67</td><td>முடிவுற்றது</td><td>20</td></tr>
<tr><td>நடைபெற்று வருபவை</td><td>12</td></tr>
<tr><td>கைவிடப்பட்டவை</td><td>1</td></tr>
<tr><td>உப மொத்தம்</td><td>33</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>66</td></tr>
</table>

## 20-1. திடக்கழிவு மேலாண்மை விவரம்

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | மின்கல வாகனங்கள் | 88 | பணி முடிவுற்றது |
| 2 | டிசில்ட் சிறியரக வாகனங்கள் | 8 | பணி முடிவுற்றது |
| 3 | டிராக்டர் டோசர் | 3 | பணி முடிவுற்றது |
| 4 | பாப்காட் | 3 | பணி முடிவுற்றது |
| 5 | JCB | 1 | பணி முடிவுற்றது |
| 6 | 12.க மீ டம்பர் பிளாசர் வாகனங்களை கனரக டிப்பர் வாகனங்களாக மாற்றும் கட்டுமான பணி | 8 | பணி முடிவுற்றது |
| 7 | HDPE பக்கெட் – 50Litre | 2000 | பணி முடிவுற்றது |
| 8 | 3.5 க.மீ சிறியரக டிப்பர் LCV வாகனங்கள் | 56 | பணி முடிவுற்றது |
| 9-12 | 3.5 க.மீ சிறியரக டிப்பர் LCV வாகனங்களில் SS தகடு கட்டுமான பணி | 53 | பணி முடிவுற்றது |

| | | | |
|---|---|---|---|
| 13 | மாடுகள் பிடிக்கும் வாகனங்கள் | 2 | பணி முடிவுற்றது |
| 14–15 | கொள்ளிடம் பஞ்சக்கரையில் STP அமைத்தல் | 1 | பணி நடைபெற்று வருகிறது |
| 16–24 | நுண்உர கிடங்கு கட்டுதல் | 9 | 8 முடிந்தது, 1 கைவிடப்பட்டது. |
| 25–33 | நுண்உரக்கிடங்கிற்க்கான அரவை இயந்திரம் பொறுத்துதல் | 9 | 6 – முடிவுற்றது 3 – கைவிடப்பட்டது |

**20– 2. காற்று மாசுபடுவதை தடுக்கும் பணி**

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | ஜேசிபி வாகனம் | 1 | முடிவுற்றது |
| 2 | டிசில்ட் கனரக வாகனம் | 1 | முடிவுற்றது |
| 3 | 9000 Liter டேங்கர் கொள்ளவுள்ள தண்ணீர் தெளிப்பான் வாகனம் | 4 | முடிவுற்றது |
| 4 | Source Apportionment & Carrying Capacity assessment study (IIT – Madras) | 1 | முடிவுற்றது |
| 6–18 | சாலை அமைக்கும் பணி | 13 | 2 பணி முடிவுற்றது மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது |
| 19–33 | சாலை அமைக்கும் பணி | 15 | முடிவுற்றது |

## 21. 15வது நிதிக்குழு திட்டம் 2021 – 2022

### 21–1. திடக்கழிவு மேலாண்மை

இத்திட்டத்தின் கீழ் ரூ.2540.00 லட்சம் மதிப்பீட்டில் அரியமங்கலம் குப்பை கிடங்கில் குப்பைகள் பயோமைனிங் செயல்முறை மூலம் இடத்தை மீட்டு கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக ரூ.1601.85 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**21–2. காற்று மாசுபடுவதை தடுக்கும் பணிகள்**

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | JCB வாகனம் | 2 | பணி முடிவுற்றது |
| 2 | 10.50 க.மீ கனரக டிப்பர் வாகனங்கள் | 4 | பணி முடிவுற்றது |
| 3 | Training and Skill Development & IEC Activity | 1 | பணி முடிவுற்றது |
| 4–9 | சாலை பணிகள் | 6 | முடிவுற்றது |
| 10–29 | பேட்டரி வாகனம் சார்ஜ் செய்யும் கூடம் கட்டுதல் | 20 | முடிவுற்றது |
| 30 | JCB வாகனம் | 1 | பணி முடிவுற்றது |
| 31 | சிறியரக ஜெட்ராடர் 3000 Liter கொள்ளளவுள்ள வாகனங்கள் | 5 | பணி முடிவுற்றது |
| 32 | சில்ட் ரிமுவல் கனரக வாகனங்கள் (Open Drain) | 3 | பணி முடிவுற்றது |

**22. உறையூர் காசிவிளங்கி பகுதியில் நவீன மீன் சந்தை அமைத்தல்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ–அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.60, காசிவிளங்கி பகுதியில் நவீன மீன்சந்தை கட்டப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நடப்பாண்டில் கூடுதல் அறை கட்டும் பணி 1 பணி எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிவுற்று ரூ.9.60 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**23. தூய்மை இந்தியா திட்டம் – நுண்உரக்கிடங்கு**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 167.23 சதுர கி.மீ ஆகும். மாநகராட்சி பகுதியில் சேகரமாகும் திடக்கழிவுகள், அரியமங்கலம் பகுதியிலுள்ள குப்பை கிடங்கில் சேகரிக்கப்பட்டு வருகிறது. பிளாஸ்டிக் உபயோகம் அதிகரித்த பின்னர் 20 மைக்ரான் அளவிற்கு கீழுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் திடக்கழிவுகளுடன் கலந்து சேகரிக்கப்படுவதால், 40 ஏக்கர் பரப்பளவிற்கும் 40 அடி உயரத்திற்கும் மேலாக திடக்கழிவுகள் குப்பை கிடங்கில் குவிக்கப்பட்டது.

மேலும், நகரில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து, மக்கும் குப்பைகளை உரமாக மாற்றவும், மக்காத குப்பைகளை மறு சுழற்சி செய்ய வேண்டியவைகளை பிரித்து, விற்பனை செய்து விட்டு இறுதியாக உள்ள கழிவுகளை (Inert Waste) விஞ்ஞான முறையில் மேலாண்மை செய்து நிலத்தில் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, நான்கு கோட்டங்களிலும் கடந்த நிதியாண்டு வரை 39 திடக்கழிவு Micro Compost செயலாக்க மையங்கள் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

இதன் காரணமாக அரியமங்கலம் குப்பைக்கிடங்கிற்கு செல்லும் குப்பையின் அளவு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

## 24-1. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் (NUHM) 2020 - 2021

இத்திட்டத்தின் கீழ் 3 இடங்களில் (வார்டு எண்.22 இருதயபுரம், வார்டு எண்.35 ஏர்போர்ட் காமராஜ் நகர், வார்டு எண்.53 கொடாப்பு) நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்ட செயல்முறை கடிதம் எண்.1869 / NUHM / SHS / 2015 - 1. நாள்.31.03.2021 அன்று ரூ.292.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.120.00 லட்சம் மான்யமும், மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.172.50 லட்சம் செலவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து பணிகளும் முடிவுற்றது. இதுவரை ரூ.287.56 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 24-2. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் (NUHM) 2021 - 2022

இத்திட்டத்தின் கீழ் 36 இடங்களில் (வார்டு எண்.3 ஸ்ரீ நிவாசசாரி தெரு, வார்டு எண்.1 மலையப்ப நகர், வார்டு எண்.6 அய்யன்வெட்டி தெரு, வார்டு எண்.4 அம்பேத்கார் நகர் எரிவாயு தகன மேடை வளாகம், வார்டு எண்.10 வாணப்பட்டரை, வார்டு எண்.9 பழைய கரூர் சாலை, வார்டு எண்.18 மேலபுலிவார்டு ரோடு, வார்டு எண.8 சஞ்சீவி நகர், வார்டு எண்.14 விறகுபேட்டை வளாகம், வார்டு எண்.15 வசந்த நகர் வார்டு எண்.50 அண்ணா நகர் 1வது குறுக்கு தெரு, வார்டு எண்.51 பாபு செட்டித்தெரு, வார்டு எண்.20 வரகனேரி மேட்டு தெரு, வார்டு எண்.27, செந்தண்ணீர்புரம் வார்டு எண்.62 பாப்பாக்குறிச்சி மெயின் ரோடு, வார்டு எண்.61, அம்பேத்கார் நகர் வடக்கு காட்டூர், வார்டு எண்.64 பகவதிபுரம், வார்டு எண்.63 அம்மன் நகர் பூங்கா, வார்டு எண்.30 மேலகல்கண்டார் கோட்டை, வார்டு எண்.30 விவேகானந்தா நகர், வார்டு எண்.33 சங்கிலியாண்டபுரம், வார்டு எண்.34 சுந்தர்ராஜ் நகர், வார்டு எண்.35 அந்தோணியார் கோவில் தெரு, வார்டு எண்.37 ஸ்டார் நகர், வார்டு எண்.46 பெரியமிளகு பாறை புதுத்தெரு, வார்டு எண்.45, கருமண்டபம் தெற்கு தெரு, வார்டு எண்.23 செங்குளம், வார்டு எண்.26 குட்செட் ரோடு, வார்டு எண்.40 ராஜிவ் காந்தி நகர், வார்டு எண்.41 கிராப்பட்டி இளநிலை பொறியாளர் அலுவலகம், வார்டு எண்.54 ராம் நகர், வார்டு எண்.53 கொடாப்பு, வார்டு எண்.55 உறையூர் குறத்தெரு, வார்டு எண்.57 சோழராஜபுரம், வார்டு எண்.60 பாண்டமங்கலம் மற்றும் வார்டு எண்.60 அரவானூர்) ஆரோக்கிய நலமையம் கட்ட மற்றும் 2 இடங்களில் வார்டு எண்.14, கீழபுலிவார்டு ரோடு, வார்டு எண்.59 உறையூர் ஆஸ்பத்திரி) பொது சுகாதார ஆய்வகம் கட்ட செயல்முறை எண்.32454 / 2021 / AMRUT - 2 நாள்.17.12.2021 அன்று ரூ.944.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முழு மான்யம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அனைத்து பணிகளும் முடிவுற்றது. இதுவரை ரூ.942.99 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 24-3 தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் (NUHM) 2023-2024

இத்திட்டத்தின் கீழ் 16 இடங்களில் (4 பணிகள் நகர்புர சுகாதார கட்டிடங்கள், 2 பணிகள் கூடுதல் சுகாதா மையங்கள் மற்றும் 10 இடங்களில் துணை மையங்கள்) ரூ.900.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 5 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.471.00 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

24-4 தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் (NUHM) 2024-2025

இத்திட்டத்தின் கீழ் 4 இடங்களில் (2 பணிகள் நகர்புர சுகாதார கட்டிடங்கள் மற்றும் 2 பணிகள் கூடுதல் சுகாதா) ரூ.420.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

**25. இயக்குதல் மற்றும் காத்தல் 2021 – 2022**

இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்கள் அனுமதி அளித்தன்பேரில் 6 சமுதாய கழிப்பிடங்கள் (வார்டு எண்.8 பதுவை நகர், வார்டு எண்.9 ஓடத்தெரு, வார்டு எண்.22 இருதயபுரம் தோப்பு தெரு, வார்டு எண்.50 இனாம்தார் தோப்பு, வார்டு எண்.51 பென்சனர் தெரு, வார்டு எண்.51 சங்கீதபுரம் மற்றும் வார்டு எண்.53 பூக்கொல்லை தெரு) மற்றும் 7 பொது கழிப்பிடங்களுக்கு (வார்டு எண்.14 காந்தி மார்க்கெட் தெற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதி, வார்டு எண்.19 வெல்லமண்டி சாலை, வார்டு எண்.43 செங்குளம் மார்க்கெட், வார்டு எண்.44 மத்திய பேருந்து நிலையம் (தஞ்சாவூர், கரூர் நிறுத்தம்) வார்டு எண்.38 கே.கே.நகர் பேருந்து நிலையம் மற்றும் வார்டு எண்.58 டாக்கர் ரோடு) மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.152.88 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதற்கு முழு மான்யம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 13 பணிகளும்முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதுவரை ரூ.143.28 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**26. மாநில நிதிக்குழுத் திட்டம் 2021 – 2022 (குடிநீர் பணிகள்)**

இத்திட்டத்தின் கீழ் பிராட்டியூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாநகராட்சி பகுதிகளில், கொள்ளிடம் ஆற்றில் புதிதாக அமைக்கப்பட்ட நீரேற்று நிலையங்களிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு அதற்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் புதிதாக குடிநீர் உந்து குழாய்கள் பதிக்கவும், மேலும் கொள்ளிடம் ஆற்றில் பெறப்படும் குடிநீரில் உள்ள இரும்பு தாது அளவை சீர் செய்ய ஏரேட்டர் அமைக்கும் பணி போன்ற 6 பணிகள் ரூ.950.00 லட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு 3 பணிகள் முடிவுற்று மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிகளுக்காக ரூ.563.95 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை கடிதம் எண்.11222-1 / 2021 / Ws-2, நாள்.01.07.2021 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கு முழு மான்யம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**27. மூலதன மான்ய நிதி (Capital Grant Fund)**

இத்திட்டத்தில் 2 இடங்களில் (பஞ்சப்பூர், தஞ்சாவூர் மெயின் ரோடு – SIT அருகில்) எரிவாயு தகன மேடை (LPG முறையில்) கட்ட செயல்முறை கடிதம் எண்.19089 / 21 / இ2, நாள்.12.11.2021 அன்று ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.இவ்விரண்டு பணிகளும் முடிவுற்றது. இதற்கு ரூ.138.04 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பஞ்சப்பூர் STP (Online Continous Effluent Monitoring System) அமைக்க ரூ.53.00லட்சம் மதிப்பீட்டில் பணி துவங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.44.63 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மூன்று பணிகளுக்கும் முழு மான்யம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**27–1. <u>மூலதன மான்ய நிதி 2021–2022ம் ஆண்டு</u>**

இவ்வாண்டில் பேட்மின்டன் விளையாட்டரங்கம், தெருக்களில் CCTV கேமரா பொருத்தும் பணி, சென்டர் மீடியன் பணி, 3 பூங்கா அபிவிருத்தி பணிகள், சாலை ஓரத்தில் பிளாட்வார்ம் அமைத்தல், வாய்க்கால் தாங்கு சுவர் கட்டுதல், 7 சாலை பணிகள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல், பள்ளியில் படிப்பகம் அபிவிருத்தி பணி, தெரு விளக்கு பணி, மழைநீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்துதல், 3 புதைவடிகால் மெயின் பதித்தல், உந்து நிலையம் கட்டுதல் மற்றும் குடிநீர் விநியோகக் குழாய் பதித்தல் போன்ற 26 பணிகள் ரூ.532.88 லட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 23 பணிகள் முடிவுற்று 3 பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.391.71 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

27–2. **<u>மூலதன மான்ய நிதி 2022–2023 ம் ஆண்டு</u>**

இவ்வாண்டில் 5 பொது இடங்களை அழகுப்படுத்தும் பணிகள், CCTV கேமரா பொருத்தும் பணி, மைய தடுப்பு சுவர், குறுக்கு பாலம் மராமத்து பணி, சுகாதார மருத்துவமனை உபகரணங்கள் வாங்குதல், பூங்கா மராமத்து, வாய்க்காலில் தாங்குசுவர் கட்டுதல், சாலை பணி, ரவுண்டானா அழகுபடுத்துதல், ஷட்டில் கோர்ட் விளையாட்டரங்கம் கட்டுதல், புதைவடிகால் மெயின் பதிக்கம் பணி, புதைவடிகால் உந்து நிலையம் கட்டுதல், வாலிபால் விளையாட்டரங்கம் மராமத்து பணி, நடைபாதை அபிவிருத்தி, குடிநீர் விநியோ குழாய் பதிக்கும் பணி போன்ற 21 பணிகள் ரூ.617.55 லட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 2 பணிகள் முடிவுற்று இதர பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளது.

27–3. **<u>மூலதன மான்ய நிதி 2023–2024 ம் ஆண்டு</u>**

இவ்வாண்டில் 4 இடங்களில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல், **<u>உயர்மட்ட பாலம் கட்டுதல்,</u>** CCTV கேமரா பொருத்தும் பணி, மைய தடுப்பு சுவர், குறுக்கு பாலம் மராமத்து பணி, சுகாதார மருத்துவமனை உபகரணங்கள் வாங்குதல், பூங்கா மராமத்து, வாய்க்காலில் தாங்குசுவர் கட்டுதல், சாலை பணி, ரவுண்டானா அழகுபடுத்துதல், ஷட்டில் கோர்ட் விளையாட்டரங்கம் கட்டுதல், புதைவடிகால் மெயின் பதிக்கம் பணி, புதைவடிகால் உந்து நிலையம் கட்டுதல், வாலிபால் விளையாட்டரங்கம் மராமத்து பணி, நடைபாதை அபிவிருத்தி, குடிநீர் விநியோ குழாய் பதிக்கும் பணி போன்ற 21 பணிகள் ரூ.811.00 லட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 2 பணிகள் முடிவுற்று இதர பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளது.

**<u>28. நமக்கு நாமே திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகையில் பொது மக்கள் பங்களிப்பாக மூன்றில் ஒரு பங்குத் தொகையை செலுத்தினால் மீதமுள்ள தொகையை அரசு வழங்கி பணியை மேற்கொள்ள அரசு வழிவகை செய்துள்ளது.

## 29.மத்திய பேருந்து நிலைய அபிவிருத்திப்பணிகள்

மத்திய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இலகுவாக பயன்படுத்தும் வகையில் குளியலறையுடன் கூடிய நவீன கழிப்பாறை, பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் முக்கிய பிரமுகர்கள் காத்திருப்பதற்காக, குளிர்சாதன வசதியுடன் கூடிய அறை, பேருந்து பயணிகள் அமருவதற்கான இருக்கைகள், பயணிகள் தங்கும் விடுதி, மழைநீர் வடிகால் வசதி, மின்விளக்கு வசதி போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட ஐ.எஸ்.ஓ. (I.S.O) தரச்சான்றிதழ் "A Grade" பெற்ற பேருந்து நிலையமாக திகழ்கிறது.

நடப்பாண்டில் LED பெயர் பலகை மராமத்து, கழிப்பிடங்களுக்கு மினி இணைப்பு கொடுக்க தேவையான பணிகள், சிறுநீர் கழிப்பிட மராமத்து மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் ரூ.45.70 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 30. சத்திரம் பேருந்து நிலையம் அபிவிருத்திப்பணிகள்

சத்திரம் பேருந்து நிலையத்தில் Smart City திட்டத்தின் கீழ், கீழ்கண்ட வசதிகளுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

1. அடித்தளம் – 350 எண்ணிக்கை இரு சக்கர வாகன நிறுத்துமிடம்
2. தரைத்தளம் – 30 பேருந்து நிற்கும் வசதி, 11 கடைகள், பாலூட்டும் அறை, பொருட்கள் பாதுகாக்கும் அறை, ஓய்வறை மற்றும் கழிப்பிடம் வசதி
3. முதல் தளம் – 22 கடைகள், காவல் உதவி மையம் மற்றும் கழிப்பிட வசதி

மேலும், பொது நிதியின் கீழ் நுழைவாயிலில் அல்கோ பேனல் அமைக்கும் 2 பணி, கூடுதல் கடைகள் கட்டும் பணி, தெரு விளக்குகள் அமைத்தல், 16மீ உயர் கோபுர மின்விளக்கு அமைக்கம் பணி போன்ற 6 பணிகள் 297.86 லட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்பொழுது அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகளுக்காக ரூ.248.54 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 31. பயணியர் நிழற்குடை / சென்டர் மீடியன் கிரில் / போக்குவரத்து திட்டுகள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேருந்து பயணியர் நிழற்குடைகள் 168 எண்ணிக்கைகள் மற்றும் 4 எண்ணிக்கை சாலை மையத்தடுப்பு கிரில்களும் மாநகராட்சி மூலம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் கீழ்கண்ட விபரப்படி பயணியர் நிழற்குடைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | தலைப்பு | பணிகளின் எண்ணிக்கை | செலவு தொகை (ரூ / லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிழற்குடை அமைத்தல் | 6 | 59.60 |
| 2 | பொது நிதியின் கீழ் மராமத்து பணி | 1 | 5.00 |
| | மொத்தம் | 7 | 64.60 |

## 32. தெரு விளக்குகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் (IUDM) கீழ் ரூ.30.29 கோடி செலவினத்தில் 27915 எண்கள் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் அகற்றப்பட்டு 20 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் சீர்மிகு திட்டத்தின் கீழ் ரூ.23.40 கோடி செலவினத்தில் 8264 எண்கள் சோடியம் / மெட்டல் ஹலாய்டு / சி.எப்.எல் மின் விளக்குகள் LED மின்விளக்குகளாக மாற்றப்பட்டு புதிதாக 816 எண்கள் LED மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாநில நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு (SUIDF) நிதியின் கீழ் விடுபட்டஇடங்களில் புதிதாக 6264 எண்கள் LED மின்விளக்குகள் பொறுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து தெரு விளக்குகளும் மின்சக்தி சேமிப்பு திறன் கொண்ட LED மின்விளக்குளாக மாற்றப்பட்டு மொத்தம் 43284 எண்கள் தெருவிளக்குகள் உள்ளன.

நடப்பு 2023 – 2024 ஆம் ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் தெரு மின்விளக்குகள் பற்றிய விபரம்.

| வ.எண் | தெரு விளக்கு விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 29787 |
| 2 | 40 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 926 |
| 3 | 72 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 21 |
| 4 | 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 8880 |
| 5 | 120 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 3545 |
| 6 | 200 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் | 38 |
| 7 | 10 மீ உயர் மின் கோபுர விளக்குகள் | 17 |
| 8 | 16 மீ உயர் மின் கோபுர விளக்குகள் | 62 |
| 9 | 30 மீ உயர் மின் கோபுர விளக்குகள் | 3 |
| | மொத்தம் | 43284 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி பழுதாகும் தெரு விளக்குகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யப்பட்டு இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 33. குப்பை கிடங்கு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் பல ஆண்டுகளாக தேக்கமடைந்திருந்த திடக்கழிவுகளை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.49.00 கோடி மதிப்பீட்டில் பயோ மைனிங் (தொகுப்பு–I) பணியில் 7.55 இலட்சம் க.மீ திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டு பணி முடிவடைந்துவிட்டது.

2021–2022ம் ஆண்டு, 15வது நிதிக்குழு நிதியில் திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் கீழ் ரூ.25.40 கோடி மதிப்பீட்டில் பயோ மைனிங் (தொகுப்பு–II) பணியில் 3.49 இலட்சம் க.மீ திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டு பணி முடிவடைந்துவிட்டது.

மேலும், தற்போது மீதமுள்ள மற்றும் தரைமட்டத்திற்கு கீழ் தேக்கமடைந்துள்ள (617716.00 மெ.டன்) திடக்கழிவுகளை அகற்றுவதற்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்)–2.0 நிதியின் கீழ் ரூ.40.85 கோடி மதிப்பீட்டில் பயோ மைனிங் (தொகுப்பு–III) பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**34.திடக்கழிவு மேலாண்மை (குப்பையில்லா நகரம்)**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது நாள் ஒன்றுக்கு சராசரியாக 470 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. இவை கீழ்கண்டவாறு கையாளப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 39 திடக்கழிவு செயலாக்க மையத்தில் திடக்கழிவுகளை தரம் பிரித்து இயற்கை உரம் தயாரித்தல் | 195.00 மெட்ரிக் டன் |
| 2 | நுண்ணுயிர் எரிவாயு மையத்தில் எரிவாயு தயாரித்தல் | 10.00 மெட்ரிக் டன் |
| 3 | இல்லம் தோறும் உருவாகும் மக்கும் குப்பைகளை இல்லங்களிலேயே உரமாக்குதல் | 5.00 மெட்ரிக் டன் |
| 4 | அதிகப்படியான மக்கும் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே உரமாக்குதல் | 32.00 மெட்ரிக் டன் |
| 5 | திடக்கழிவுகளை தரம்பிரிக்கும் போது உலர் கழிவுகள் பிரிக்கப்படும் அளவு | 174.00 மெட்ரிக் டன் |
| 6 | அடுக்குமாடி குடியிருப்புகள், மருத்துவமனைகளில் மக்கும் குப்பைகளை உருவாகும் இடங்களிலேயே உரமாக்குதல் ( Bulk Waste Generated) | 4.00 மெட்ரிக் டன் |
| 7 | மண் மற்றும் சாக்கடை மண் அப்புறப்படுத்துதல் | 40.00 மெட்ரிக் டன் |
| 8 | மருத்துவமனை கழிவுகள் | 6.00 மெட்ரிக் டன் |
| 9 | இன்சினிரேட்டர் கழிவுகள் | 4.00 மெட்ரிக் டன் |
| | மொத்தம் | 470.00 மெட்ரிக் டன் |

நடப்பு 2021 – 2022ம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மை பணியில் இல்லங்களில் சேகரமாகும் குப்பைகளை இல்லம்தோறும் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து சேகரிக்கும் நுண்ணுயிர் செயலாக்க மையங்கள் கட்டுதல், கூடுதல் பணிகள் செய்தல், துகளாக்கும் இயந்திரம் வழங்கும் பணிகள் ரூ.298.73 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**35.வாகனங்கள்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கப்படாத இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை பணிக்கான வாகனங்கள், தெருவிளக்கு பராமரிப்பிற்கான ஏணி பொருத்தப்பட்ட வாகனங்கள், புதைவடிகால் பராமரிப்புக்கான ஜெட்ராடர் இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்கள், பொது சுகாதார பணிகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பணிகளை ஆய்வு செய்வதற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் விவரம்.

| வ.எண் | வாகனங்கள் பற்றிய விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கார் | 5 |
| 2 | ஜீப் | 17 |
| | **மொத்தம்** | **22** |
| 3 | கனரக குடிநீர் வாகனங்கள் (9000KL) | 5 |
| 4 | கனரக குடிநீர் வாகனங்கள் (6000KL) | 4 |
| | **மொத்தம்** | **09** |
| 5 | சிறியரக டிப்பர் வாகனங்கள் | 239 |
| 6 | கனரக டிப்பர் வாகனங்கள் | 17 |

| | | |
|---|---|---|
| 7 | மின்கல வாகனங்கள் (BOV) | 188 |
| | **மொத்தம்** | **444** |
| 8 | கழிவு நீர் உறிஞ்சும் வாகனங்கள் | 02 |
| 9 | ஜெட்ராடர் கனரக வாகனங்கள் | 08 |
| 10 | ஜெட்ராடர் சிறியரக வாகனங்கள் | 05 |
| 11 | டிசில்ட்டிங் சிறியரக வாகனங்கள் | 13 |
| 12 | சில்ட் ரிமுவல் கனரக வாகனங்கள் (Open Drain) | 04 |
| | **மொத்தம்** | **32** |
| 13 | சாலை சுத்தம் செய்யும் கனரக வாகனங்கள் | 02 |
| 14 | சாலை சுத்தம் செய்யும் சிறியரக வாகனம் | 01 |
| 15 | மாடுகள் பிடிக்கும் வாகனங்கள் | 02 |
| 16 | மினி லோடர் (பாப்காட்) வாகனங்கள் | 04 |
| 17 | டிராக்டர் டோசர் வாகனங்கள் | 03 |
| 18 | ஜேசிபி வாகனங்கள் | 09 |
| 19 | செயின் பொக்லின் | 03 |
| 20 | செயின் டோசர் | 01 |
| 21 | நாய்கள் பயணிக்கும் வாகனங்கள் | 05 |
| 22 | குடிநீர் கசிவு கண்டறியும் வாகனம் (Blue Brigade) | 01 |
| 23 | டிராக்டர் ஜீப் – டிரெய்லர் வாகனம் | 01 |
| 24 | டெம்போ டிராவலர் வாகனம் (ICCC) | 01 |
| 25 | மின்கல வாகனங்கள் (BOV) | 06 |
| | **மொத்தம்** | **39** |
| | **கூடுதல்** | **546** |

**36. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் வசதியுள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வெளியேறும் கழிவு நீர் அந்தந்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 58 எண்ணிக்கைகள் கழிவு நீர் உந்து நிலையங்கள் மூலம் உந்தப்பட்டு, சுத்தரிப்பதற்காக பஞ்சப்பூரில் உள்ள 58 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு Waste Stabilization Pond முறையில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது.

இச்சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 2023 – 2024 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் ரூ.18.50 லட்சம் செலவில் ஆண்டு பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் குறுமணல் மற்றும் முள்காடுகள் (Jungles) சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**37. எரிவாயு தகனமேடை:**

ஸ்ரீரங்கம் கோட்டத்தில் ஓயாமரி மயானத்தில் இரண்டு எரிவாயு தகன மேடைகள், அம்பேத்கார் நகர் பகுதியிலும், கோ–அபிஷேகபுரம் கோட்டம் கருமண்டபம் பகுதியிலும் மற்றும் கோணக்கரை பகுதியிலும் எரிவாயு தகன மேடைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நடப்பாண்டில் பொது நிதியின் கீழ் ஓயாமரி எரிவாயு தகன மேடையில் மராமத்து பணிகள் ரூ.15.87 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**38. இடுகாடு / சுடுகாடு**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 43 இடங்களில் உள்ள இடுகாடு / சுடுகாடுகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் பொது நிதியின் கீழ் குவளை வாய்க்கால் கரையில் எரியூட்டு கொட்டகை மற்றும் காரியம் செய்யும் இடம் கட்டுதல், பாண்டமங்கலம் எரியூட்டு மயானத்தில் காம்பவுண்டு சுவர், காரியம் செய்யும் இடம் மராமத்து பழைய கருங்கல் தளம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற 2 பணிகள் ரூ.10.45 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**39. இறைச்சிக்கூடம்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட காந்தி சந்தையில் அமைந்துள்ள (சிறு விலங்கு) நவீன இறைச்சி கூடம் மற்றும் ஜீ கார்னர் பகுதியில் அமைந்துள்ள (பெரிய விலங்கு) இறைச்சி கூடம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நடப்பாண்டில் ஜீ கார்னர் இறைச்சி கூடம் பராமரிப்பு பணி ரூ.6.42 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**40. கிடங்கு கருவிகளும் தளவாடங்களும்**

மதுரை சாலையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான மத்திய மண்டி நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் மற்றும் மின் விளக்குகள் பராமரிக்க தேவையான அனைத்து உபகரணங்களும், ஆண்டு பராமரிப்பிற்காக மொத்தமாக வாங்கி மத்திய மண்டியில் இருப்பு வைக்கப்பட்டு தேவைக்கேற்ப அவ்வப்போது தேவைப்பட்டியல் பெறப்பட்டு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மத்திய மண்டி பராமரிப்பு பணியானது ஒரு உதவியாளர், ஒரு இளநிலைப்பொறியாளர், ஒரு உதவி நிர்வாகப்பொறியாளர் கண்காணிப்பிலும், நகரப்பொறியாளர் அவர்களின் மேற்பார்வையிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**41. தனிக்கல்வி நிலையங்கள்**

தனிக்கல்வி நிலையங்கள் ஏதும் இம்மாநகராட்சியில் நடத்தப்படவில்லை.

**41–1. படிப்பங்கள்**

கீழ்கண்ட 25 இடங்களில் உள்ள படிப்பகங்களுக்கு தினசரி செய்தித்தாள்கள் மாநகராட்சியால் வழங்கப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பதற்கு பணியாளர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

**படிப்பங்களின் பட்டியல்**

**வார்டுக்குழு அலுவலகம் – 1**

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடுத்தெரு | – | ஸ்ரீரங்கம் |
| 2. | திருவள்ளுவர் வாசக சாலை | – | திருவள்ளுவர்வீதி, ஸ்ரீரங்கம் |
| 3. | வாசுதேவமன்ற வாசக சாலை | – | வடக்கு தேவித்தெரு, ஸ்ரீரங்கம் |
| 4. | வாசக சாலை | – | வீரேஸ்வரம் மேலத்தெரு, ஸ்ரீரங்கம் |
| 5. | மாசிக்கோனார் வாசக சாலை | – | அரபிக்குளத்தெரு, திருச்சி |
| 6. | பூக்குளம் வாசக சாலை | – | பெரிய கடைவீதி, திருச்சி |
| 7. | பனகல் வாசக சாலை | – | தேவர்ஹால் அருகில் மேலரண்சாலை, திருச்சி |

**வார்டுக்குழு அலுவலகம் – 2**

1. மாநகராட்சி வாசக சாலை – உப்பிலியர் தெரு, தாராநல்லூர்
2. லூர்துசாமிப்பிள்ளை வாசக சாலை – பருப்புக்காரத்தெரு, பாலக்கரை
3. மாநகராட்சி வாசக சாலை – பாப்பாக்குறிச்சி, காட்டூர்

**வார்டுக்குழு அலுவலகம் – 4**

1. மேலகல்கண்டார் கோட்டை வாசக சாலை – நாகம்மை வீதி மேலகல்கண்டார் கோட்டை
2. பழைய சுற்றுலா மாளிகை காலனி – மன்னார்புரம், திருச்சி
3. மாநகராட்சி வாசக சாலை – வார்டு அலுவலகம், சுப்ரமணியபுரம்
4. மாநகராட்சி வாசக சாலை – விமானநிலையம்
5. மாநகராட்சி வாசக சாலை – வீட்டுவசதிவாரிய குடியிருப்பு காஜாமலை
6. மாநகராட்சி வாசக சாலை – எஸ்.எம்.இ.எஸ்.சி.காலனி
7. புதிய சுற்றுலா மாளிகை காலனி – மன்னார்புரம், திருச்சி
8. மாநகராட்சி வாசக சாலை – கல்லுக்குழி இழுப்பூர் சாலை
9. மாநகராட்சி வாசக சாலை – செங்குளம் காலனி
10. மாநகராட்சி வாசக சாலை – டி.வி.எஸ்.நகர்
11. ஐயன் திருவள்ளுவர் வாசக சாலை – பெரியார் தெரு, கீழகல்கண்டார் கோட்டை பிரிவு
12. வாசக சாலை – 'டி' நகர்

**வார்டுக்குழு அலுவலகம் – 5**

1. எடமலைப்பட்டிபுதூர் – அரசு காலனி
2. கருமண்டபம் – ஆர்.எம்.எஸ்.காலனி
3. மாணிக்கம்பிள்ளை வாசக சாலை – குறத்தெரு, உறையூர்

## 42. கல்விக்கூடங்கள்

மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள பகுதிகளில் இயங்கி வரும் மொத்தம் 74 பள்ளிகளில் உள்ள பள்ளிக்கட்டிடங்கள் மாநகராட்சியின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 42–1. துவக்கப்பள்ளிகள்

கீழ்கண்ட 43 துவக்கப்பள்ளிகளுக்கான பள்ளி கட்டிடங்கள் இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | பள்ளிகளின் பெயர் | பள்ளிகள் அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 1 | மாநகராட்சி அய்யனார் துவக்கப்பள்ளி | மேலூர், ஸ்ரீரங்கம் |
| 2 | 1 | தெற்கு சித்திரை வீதி மாநகராட்சி துவக்கப்பள்ளி | தெற்கு சித்திரை வீதி, ஸ்ரீரங்கம் |
| 3 | 1 | காஞ்சியம்மன் மாநகராட்சி துவக்கப்பள்ளி | 60/3 தெப்பகுளத்குளம், ஸ்ரீரங்கம் |
| 4 | 2 | ரெங்கா நகர் மாநகராட்சி துவக்கப்பள்ளி | ஜான்சி நகர், ஸ்ரீரங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 5 | 2 | பிரசன்னா மாநகராட்சி துவக்கப்பள்ளி | 21/17 வடக்கு அடையவளஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம் |
| 6 | 4 | தந்தை பெரியார் மாநகராட்சி துவக்கப்பள்ளி | 3வது குறுக்கு தெரு, அழகிரிபுரம், திருவானைக்கோவில் |
| 7 | 4 | சன்னதி வீதி மாநகராட்சி துவக்கப்பள்ளி | 64/54, சன்னதி வீதி, திருவானைக்கோவில் |
| 8 | 4 | மாநகராட்சி துவக்கப்பள்ளி காசி செட்டித்தெரு | திருவானைக்கோவில் |
| 9 | 6 | பாரதியார் நூற்றாண்டு மாநகராட்சி துவக்கப்பள்ளி | கீழ 5வது பிரகாரம், கீழகொண்டயம் பேட்டை, திருவானைக்கோவில் |
| 10 | 6 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | திருவளர்சோலை, திருவானைக்கோவில் |
| 11 | 15 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | கீழதேவதானம், திருச்சி – 2 |
| 12 | 12 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | கொசமேட்டுத் தெரு, சிந்தாமணி |
| 13 | 13 | பி.எஸ்.ஜி இந்து மாநகராட்சி துவக்கப்பள்ளி | 100/1 பட்டர்வர்த் ரோடு, திருச்சி – 2 |
| 14 | 20 | மாநகராட்சி மாதிரி துவக்கப்பள்ளி | மணியக்காரத்தெரு, திருச்சி–8 |
| 15 | 19 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | மதுரை ரோடு |
| 16 | 20 | மாநகராட்சி (முஸ்லிம் உருது) துவக்கப்பள்ளி | ஜின்னா தெரு, பெரியகடைவீதி, திருச்சி |
| 17 | 18 | டாக்டர்.மதுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி | கீழரண் சாலை |
| 18 | 30 | மஜ்லிசுல் உலமா மாநகராட்சி துவக்கப்பள்ளி | மதுரை ரோடு, ந.மு.தெரு, பாலக்கரை |
| 19 | 31 | மாநகராட்சி துவக்கப்பள்ளி (தெற்கு) | வரகனேரி முஸ்லீம் தெரு |
| 20 | 49 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | காஜாபேட்டை மெயின் ரோடு |
| 21 | 35 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | செந்தண்ணீர்புரம், திருச்சி |
| 22 | 37 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | நேருஜி நகர், மாரியம்மன் கோவில் அருகில், அரியமங்கலம், திருச்சி – 10 |
| 23 | 36 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | ரெயில் நகர், திருச்சி –4 |
| 24 | 38 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | பாப்பாக்குறிச்சி காட்டூர் |
| 25 | 45 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | மேலகல்கண்டார்கோட்டை, திருச்சி–11 |
| 26 | 61 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | காமராஜ் நகர், ஏர்போர்ட், திருச்சி–7 |
| 27 | 65 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | ராணி அண்ணாதுரை, கே.கே.நகர் |
| 28 | 59 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | செங்குளம் காலனி, கல்லுக்குழி |
| 29 | 42 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | எல்லக்குடி மஞ்சத்திடல் |
| 30 | 39 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | எல்லக்குடி கிராமம் |
| 31 | 41 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | மலைக்கோயில் திருவெறும்பூர் தெற்கு |
| 32 | 41 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | நொச்சி வயல் புதூர் |
| 33 | 56 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | கீழத்தெரு, கொத்தமங்கலம், ராம்ஜிநகர் |
| 34 | 57 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | காளியம்மன் கோவில் தெரு, எ.புதூர் |
| 35 | 55 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | திண்டுக்கல் பிரதான சாலை கருமண்டபம், திருச்சி |
| 36 | 28 | தென்னூர் கிழக்கு மாநகராட்சி துவக்கப்பள்ளி | தென்னூர் |
| 37 | 27 | தென்னூர் மேற்கு மாநகராட்சி துவக்கப்பள்ளி | மூலக்கொல்லை தெரு, தென்னூர் |
| 38 | 27 | மாநகராட்சி துவக்கப்பள்ளி (கோஷா) | ஜெனரல் பஜார், தென்னூர் |

| | | | |
|---|---|---|---|
| 39 | 26 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | வண்ணாரப்பேட்டை (செட்டிபாலம் அருகில்) புத்தூர் |
| 40 | 11 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | திருத்தாந்தோணிரோடு, வெள்ளாளத்தெரு, சோழராஜபுரம், உறையூர் |
| 41 | 9 | மாநகராட்சி துவக்கப்பள்ளி (உறையூர் தெற்கு) | மேட்டுத்தெரு, உறையூர் |
| 42 | 9 | மாநகராட்சி துவக்கப்பள்ளி (உறையூர் வெள்ளாளத்தெரு) | பாண்டமங்கலம் ரோடு, உறையூர் |
| 43 | 8 | மாநகராட்சி துவக்கப்பள்ளி | அரவானூர், மேல பாண்டமங்கலம் |

**42-2. நடுநிலைப்பள்ளிகள்**

கீழ்கண்ட 23 நடுநிலைப்பள்ளிகளுக்கான பள்ளி கட்டிடங்கள் இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | பள்ளிகளின் பெயர் | பள்ளிகள் அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | டாக்டர்.ராஜன் நினைவு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | 90, கீழ சித்திரை தெரு, ஸ்ரீரங்கம் |
| 2 | 3 | தேவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | மேல 5வது பிரகாரம், திருவானைக்கோவில் |
| 3 | 7 | ரெங்கநாதா மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | 2, புலிமண்டபம் சாலை (அம்மாம்ண்டபம் |
| 4 | 6 | நேருஜி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | மேலகொண்டயம் பேட்டை, திருவானைக்கோவில் |
| 5 | 19 | கோட்டை மாநகராட்சி பெண்கள் நடுநிலைப்பள்ளி | வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு, திருச்சி – 8 |
| 6 | 37 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | அரியமங்கலம் கிராமம், மந்தை அஞ்சல் அரியமங்கலம் |
| 7 | 35 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | மாரியம்மன் கோவில் தெரு, தெற்கு உக்கடை அரியமங்கலம் |
| 8 | 17 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | தாராநல்லூர் அக்ரஹாரம், திருச்சி – 8 |
| 9 | 31 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி (வடக்கு) | ஒருக்கட்டான் மலைரோடு, திருச்சி–8 |
| 10 | 50 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | செங்குளம் காலனி, பாலக்கரை |
| 11 | 37 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | அப்துல்லா தெரு, காமராஜ் நகர், அரியமங்கலம், திருச்சி – 10 |
| 12 | 40 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | மலைக்கோயில் திருவெறும்பூர் |
| 13 | 40 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | பகவதிபுரம், திருவெறும்பூர் |
| 14 | 44 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | தங்கேஸ்வரி நகர், ஆயில் மில் ரோடு, பொன்மலை, திருச்சி – 4 |
| 15 | 47 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை மெயின் ரோடு (ஏ.ஆர்.லைன் வளாகம்) திருச்சி–20 |
| 16 | 63 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | பொன்மலை வார்டு 3–வது பிரிவு அலுவலகம் எதிரில், கே.சாத்தனூர், திருச்சி – 21 |

| | | | |
|---|---|---|---|
| 17 | 62 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | கீழ பஞ்சப்பூர், திருச்சி – 12 |
| 18 | 52 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | மேட்டுத்தெரு, பீமநகர் |
| 19 | 42 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | கீழகல்கண்டார் கோட்டை |
| 20 | 57 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | பிராட்டியூர் மெயின் ரோடு |
| 21 | 28 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | குறத்தெரு, உறையூர், திருச்சி – 3 |
| 22 | 10 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | வாலாஜா தெரு, உறையூர், திருச்சி – 3 |
| 23 | 9 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | நாச்சியார் கோவில் தெரு, உறையூர் |

**42–3. உயர்நிலைப்பள்ளிகள்**

கீழ்கண்ட 7 உயர்நிலைப்பள்ளிகளுக்கான பள்ளி கட்டிடங்கள் இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | பள்ளிகளின் பெயர் | பள்ளிகள் அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 1 | அய்யனார் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | மேலூர் கீழத்தெரு, மேலூர், ஸ்ரீரங்கம் |
| 2 | 4 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி (காசிதோப்பு) | மேல 5வது பிரகாரம், திருவாணைக்கோவில், திருச்சி |
| 3 | 35 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | பாரிதெரு, செந்தண்ணீர்புரம், திருச்சி |
| 4 | 45 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | மேலகல்கண்டார் கோட்டை |
| 5 | 63 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | காமராஜ்நகர், விமான நிலையம் |
| 6 | 57 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | ராணி அண்ணாதுரை தெரு, கே.கே.நகர் திருச்சி – 21 |
| 7 | 57 | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி | காளியம்மன் கோவில் தெரு , எ.புதூர் |

**42–4. மேல்நிலைப்பள்ளி**

கீழ்கண்ட 1 மேல்நிலைப்பள்ளிக்கான பள்ளி கட்டிடம் இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | பள்ளிகளின் பெயர் | பள்ளிகள் அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 17 | டாக்டர். மதுரம் நினைவு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி | கீழரன்சாலை, திருச்சி – 8 |

**அ. பள்ளிகளுக்கு இடவசதிகளும் தளவாடங்களும்**

பள்ளிகளின் நிர்வாகம் கல்வித்துறையின் மூலம் மேற்கொண்டபோதிலும், மேற்கண்ட பள்ளிகள் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருவதால் இம்மாநகராட்சி மூலம் பள்ளிக்கட்டிடங்கள் மட்டும் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

**ஆ.பள்ளிக்கட்டிடங்கள் பராமரிப்பு**

மாநகராட்சி துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளில் கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி, மின்வசதி போன்ற அபிவிருத்திப்பணிகளும் மற்றும் அரசு வழிகாட்டுதலின்படி தேவையான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து புதிதாக பள்ளி கட்டிடம் கட்டுதல், கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் உட்பட மொத்தம் 13 பணிகள் ரூ.2002.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டு நிதி 2023–24 திட்டத்தின் கீழ் மொத்தம் 19 பணிகள் ரூ. 799.10 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும், பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல், திரும்பக்கட்டுதல் / கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டதில் நடப்பாண்டில் ரூ.333.15 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இ.பள்ளிகளில் இயங்கி வரும் நூலகங்கள்**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மாணவ மாணவியர்களின் கல்வித்தரத்தினை உயர்த்தும் நோக்கில் அனைத்து வசதிகளுடன் கொண்ட நூலகம் 4 கோட்டங்களிலும் கட்டப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**43. தினசரி சந்தை**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் 11 எண்ணிக்கை தினசரி சந்தைகளும், நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நடப்பாண்டில் காந்தி மார்க்கெட்டில் கடைகள் மராமத்து செய்யும் பணி ரூ.2.90 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**44. அம்மா உணவகம்**

திருச்சிராப்பள்ளி மாநகரில் வாழும் ஏழை எளிய கூலி வேலை செய்யும் கூலித் தொழிலாளர்கள் ஓட்டுநர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் தரமான உணவு கிடைக்கும் பொருட்டு, கீழ்கண்ட இடங்களில் 11 எண்ணிக்கை அம்மா உணவகங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

| வ.எண் | கோட்டம் | இடம் |
|---|---|---|
| 1 | வார்டுக்குழு அலுவலகம் – 1 | அம்மா மண்டபம் |
| | | ஜான்பஜார் |
| | | ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை அருகில் |
| 2 | வார்டுக்குழு அலுவலகம் – 2 | குப்பாங்குளம் |
| | | விறகுபேட்டை நீர்த்தேக்க தொட்டி |
| | | ஜெகநாதபுரம் |
| 3 | வார்டுக்குழு அலுவலகம் – 4 | ராக்கின்ஸ் ரோடு |
| | | மேலகல்கண்டார் கோட்டை |
| 4 | வார்டுக்குழு அலுவலகம் – 5 | புத்தூர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி |
| | | அண்ணாநகர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி |
| | | சாலை ரோடு வார்டு அலுவலகம் |

**45. அலுவலக மராமத்துப்பணிகள்**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து அலுவலக கட்டிடங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நடப்பாண்டில் மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற கூட்ட அறை, அலுவலர்கள் அறை, அரியமங்கலம் கோட்ட அலுவலகம், ஆணையர் அறை மற்றும் கூட்ட அறை, ஸ்ரீரங்கம் கூட்ட அறை ஆகியவற்றில் மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல், அரியங்கலம் கோட்டத்தில் LED மின் விளக்குகள் மாற்றுதல், பொன்மலை கோட்ட அலுவலக முதல் மாடியறை கட்டுதல், மதுரை ரோடு லாரி செட் கடைகளில் கூடுதல் பணிகள் செய்தல் போன்ற பணிகள் ரூ.360.76 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**46. தூர்வாரும் பணிகள்**

நடப்பாண்டில் கீழ்கண்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால் மற்றும் மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணிகள் | செலவு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.34,43 வழியாக செல்லும் வாய்க்கால் மனித மற்றும் இயந்திர ஆற்றல் கொண்டு தூர்வாருதல் | 8.84 |
| 2 | வார்டு எண்.54ல் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 8.62 |
| 3 | வார்டு எண்.44 தங்கேஸ்வரி நகர் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 3.89 |
| 4 | வார்டு எண்.45 காவேரி நகர் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 1.94 |
| 5 | நாட்டு வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 8.64 |
| 6 | 6 வாய்க்கால் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 9.17 |
| 7 | வார்டு எண்.63 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 2.95 |
| 8 | தாராநல்லூர் வாய்க்கால் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 4.73 |
| 9 | வார்டு எண்.62 ஆர்.எம்.எஸ்.காலனி வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 3.92 |
| 10 | வார்டு எண்.62 மழைநீர் வடிகால் மற்றும் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 4.91 |
| 11 | ரெட்டை வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 6.35 |
| 12 | வார்டு எண்.22 மற்றும் 28 வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 6.94 |
| 13 | வார்டு எண்.62 அன்பிலார் நகர் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 4.91 |
| 14 | வார்டு எண்.53 மழைநீர் வடிகால் மற்றும் வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 13.42 |
| 15 | வார்டு எண்.55 வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 5.97 |
| 16 | வார்டு எண்.52 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 3.72 |
| 17 | வார்டு எண்.32, 49 வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 7.79 |
| 18 | வார்டு எண்.56,57 வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 11.09 |

| | | |
|---|---|---|
| 19 | வார்டு எண்.21,12 கோட்டை வாய்க்கால் இயந்திரம் கொண்டு தூர்வாருதல் | 15.48 |
| 20 | வார்டு எண்.64 மகாலெட்சுமி நகர் மற்றும் பழனி நகர் வாய்க்கால் தூர்வாருதல் | 4.23 |
| 21 | வார்டு எண்.19 பில்லுக்கார தெரு வாய்க்கால் தூர்வாருதல் | 1.47 |
| 22 | வார்டு எண்.45,45 வாய்க்கால் தூர்வாருதல் | 8.78 |
| 23 | வார்டு எண்.40,41,42 வாய்க்கால் தூர்வாருதல் | 9.74 |
| 24 | வார்டு எண்.61,65 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 10.68 |
| 25 | வார்டு எண். 24,26 கத்திரிக்காய் வாய்க்கால் | 11.16 |
| 26 | வார்டு எண்.34,38 வாய்க்கால் தூர்வாருதல் | 5.95 |
| 27 | வார்டு எண்.51 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 5.01 |
| 28 | வார்டு எண்.15 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 6.33 |
| 29 | வார்டு எண்.2,11 வாய்க்கால் தூர்வாருதல் | 25.10 |
| 30 | வார்டு எண்.44,45,46 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 6.06 |
| 31 | வார்டு எண்.38,37,43 வாய்க்கால் தூர்வாருதல் | 9.11 |
| 32 | வார்டு எண்.30,31,33,50 மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 8.95 |
| 33 | வார்டு எண்.47 வாய்க்கால் மற்றும் மழைநீர் வடிகால் தூர்வாருதல் | 7.66 |
| 34 | வார்டு எண்.16,35,36,37 வாய்க்கால் தூர்வாருதல் | 9.06 |
| | **மொத்தம்** | **171.43** |

**<u>47. பூங்காக்கள்</u>**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பூங்காவிற்காக மொத்தம் 285 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கீழ்கண்ட 78 பூங்காக்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| **வ.எண்** | **வா.எண்** | **பூங்கா அமைந்துள்ள இடம்** |
|---|---|---|
| **வார்டுக்குழு அலுவலகம் – 1** | | |
| 1 | 1 | விஜய் நடேசன் பூங்கா |
| 2 | 1 | வரதகுரு பூங்கா |
| 3 | 1 | யோகலெட்சுமி நகர் பூங்கா |
| 4 | 2 | அலமேலு அவென்யூ பூங்கா |
| 5 | 3 | ஜி.ஆர்.சீனிவாசலு நினைவு பூங்கா |
| 6 | 4 | சீனிவாச நகர் வடக்கு விஸ்தரிப்பு பூங்கா |
| 7 | 4 | பாலாஜி அவென்யூ பூங்கா |
| 8 | 4 | சாரதி நகர் பூங்கா |
| 9 | 5 | அகிலாண்டேஸ்வரி பூங்கா |
| 10 | 5 | மங்கம்மா நகர் பூங்கா |
| 11 | 5 | கல்மேட்டு தெரு பூங்கா |
| 12 | 5 | மங்கம்மா நகர் விஸ்தரிப்பு பூங்கா |
| 13 | 6 | ஸ்ரீராம் நகர் பூங்கா |
| 14 | 6 | AIBEA நகர் பூங்கா |
| 15 | 15 | மூவேந்தர் நகர் பூங்கா |
| 16 | 15 | சஞ்சீவி நகர் பூங்கா |
| 17 | 13 | லூர்துசாமி பிள்ளை பூங்கா |

| | | |
|---|---|---|
| 18 | 14 | ராமசாமி தேவர் பூங்கா |
| 19 | 13 | புராதான பூங்கா |
| 20 | 19 | திரவியம் பிள்ளை பூங்கா |
| 21 | 19 | இப்ராஹிம் பூங்கா |
| 22 | 19 | டாக்டர்.ரெங்கநாதன் பூங்கா |
| **வார்டுக்குழு அலுவலகம் – 2** | | |
| 1 | 18 | ஆனந்த அவென்யூ |
| 2 | 17 | செக்கடி பஜார் ரோடு |
| 3 | 17 | வேத்தாதிரி நகர் |
| 4 | 49 | காஜாபேட்டை ரெங்கசாமி பூங்கா |
| 5 | 48 | சேதுராமன் பிள்ளை காலனி |
| 6 | 47 | சுந்தர்ராஜ் நகர் |
| **வார்டுக்குழு அலுவலகம் – 3** | | |
| 1 | 16 | விஸ்வாஸ் நகர் பூங்கா |
| 2 | 16 | லெட்சுமிபுரம் பூங்கா |
| 3 | 35 | மகாலெட்சுமி நகர் வடக்கு |
| 4 | 35 | மகாலெட்சுமி முதல் குறுக்கு தெரு கிழக்கு |
| 5 | 36 | ஆண்டாள் நகர் |
| 6 | 43 | பர்மா காலனி |
| 7 | 43 | பர்மா காலனி |
| 8 | 40 | சோழன் நகர் |
| 9 | 40 | பாலாஜி நகர் |
| 10 | 44 | ஸ்ரீ வெங்கடேஷ்வரா நகர் மே.க.கோட்டை |
| 11 | 46 | காந்தி தெரு, பொன்மலைப்பட்டி |
| **வார்டுக்குழு அலுவலகம் – 4** | | |
| 1 | 61 | காமராஜ் நகர் பார்க் |
| 2 | 61 | ஆர்.எஸ்.புரம் வடக்கு |
| 3 | 61 | சேஷாத்திரி நகர் |
| 4 | 61 | ஆர்.எஸ்.புரம் தெற்கு |
| 5 | 65 | அன்பில் நகர் |
| 6 | 65 | முல்லை நகர் |
| 7 | 64 | சத்தியவாணி முத்து தெரு |
| 8 | 63 | பாரதி பூங்கா |
| 9 | 64 | மகாத்மா காந்தி பூங்கா |
| 10 | 64 | சின்னசாமி பூங்கா |
| 11 | 64 | திருவள்ளுவர் பூங்கா |
| 12 | 64 | தங்கையா நகர் பூங்கா |
| 13 | 62 | பசுமை பூங்கா |
| 14 | 62 | விநாயக நகர், பஞ்சப்பூர் |
| 15 | 60 | அம்மன் நகர் |
| 16 | 53 | பரங்கிரி வேலுப்பிள்ளை பூங்கா |

| | | |
|---|---|---|
| 17 | 53 | நியூ ராஜா காலனி |
| 18 | 53 | ஸ்டெட் பேங்க் காலனி |
| 19 | 63 | கணேஷ் நகர் பூங்கா |
| 20 | 58 | அன்பு நகர் |
| 21 | 58 | பாரத வங்கி சுந்தர் நகர் டி.எஸ்.ஏ.நகர் பூங்கா |
| 22 | 58 | கிருஷ்ணமூர்த்தி நகர் பூங்கா |
| **வார்டுக்குழு அலுவலகம் – 5** | | |
| 1 | 25 | ஆனந்தம் நகர் பூங்கா |
| 2 | 25 | லாவண்யா கார்டன் |
| 3 | 25 | எம்.எம்.நகர் பூங்கா |
| 4 | 24 | சிவா நகர் |
| 5 | 55 | விஸ்ராந்தி உட்ஸ் பூங்கா |
| 6 | 55 | ராயல்ரோடு பூங்கா |
| 7 | 28 | அண்ணாநகர் பூங்கா |
| 8 | 28 | காந்தியடிகள் தெரு பூங்கா |
| 9 | 28 | அண்ணா நகர் அறிவியல் பூங்கா |
| 10 | 26 | தெற்கு ராமலிங்கநகர் பூங்கா |
| 11 | 26 | ராமலிங்க நகர் மேற்கு விஸ்தரிப்பு சிறுவர் பூங்கா |
| 12 | 26 | காந்தி அஸ்தி மண்டபம் |
| 13 | 22 | தில்லைநகர் விஸ்தரிப்பு பூங்கா |
| 14 | 11 | ஹவுசிங் யூனிட் பூங்கா |
| 15 | 9 | பி.டி.ராஜன் பூங்கா |
| 16 | 8 | தியாகராஜா நகர் பூங்கா |
| 17 | 8 | பெஸ்கி நகர் பூங்கா |

## 48. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 306 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அவைகளில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இச்சிகம்மாளப்பட்டி பகுதியில் உள்ள மையத்தில் புதிய வகுப்பறை கட்டும் பணி ரூ.12.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து காஜாப்பேட்டை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், சமயலறை, கழிப்பறை திரும்ப கட்டுதல், பிராட்டியூர் பகுதியில் புதிதாக வகுப்பறை கட்டுதல், பஞ்சவர்ண சாமி கோவில் தெரு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் ரூ.50.06 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 49. பள்ளி சத்துணவு மையங்கள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து பள்ளி சத்துணவு மையங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 50. நியாய விலைக்கடைகள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து நியாய விலைக்கடைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் எண்.62 பாத்திமாபுரம், நியாய விலை கடை திரும்ப கட்டுதல், வார்டு எண்.57 கூனிபஜார், வார்டு எண்.59 மன்னார்புரம் பகுதியல், வார்டு எண்.62 பாப்பாகுறிச்சி மந்தை பகுதியில், வார்டு எண்.64 சன்னதி தெரு மலைக்கோயில் தெருவில், வார்டு எண்.63 ஆனந்த நகர் வார்டு எண்.63 பாப்பாகுறிச்சி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாக பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் செம்பட்டு பகுதியிலும், பொது நிதியின் கீழ் வார்டு எண்.45ல் அசோக் நகர் 1வது தெரு பகுதியிலும் நியாய விலை கடை கட்டிடம் பணியும், வார்டு எண்.47ல் மாணிக்கப்புரம் மற்றும் தங்கேஸ்வரி நகர் நியாய விலை கடையிலும் கூடுதல் பணிகள் செய்யும் பணியும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதற்காக ரூ.128.29 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 51. நகர ஆரம்ப சுகாதார நிலையம்

வார்டு எண்.32 இருதயபுரம் நகர ஆரம்ப சுகாதார மையத்தில் இருப்பு அறை கட்டும் பணி, வார்டு எண்.19 மதுரை ரோடு நகர ஆரம்ப சுகாதாரத்தில் மராமத்து பணிகள், வார்டுஎண்.50 ஆழ்வார் தோப்பு நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி போன்ற பணிகள் ரூ.55.69 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 52. உடற்பயிற்சிக்கூடம்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து உடற்பயிற்சி கூடங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 53. சமுதாயக்கூடங்கள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சமுதாயக் கூடங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் வார்டு எண்.8 பூசாரி தெரு சமுதாயக் கூடத்தில் மராமத்து பணிகள், வார்டு எண்.6 திம்மராய சமுத்திரம் பகுதியில் ரூ.46.11 லட்சம் செலவில் சமுதாய கூடம் கட்டும் பணி, வார்டு எண்.6 தாகூர் தெரு சமுதாய கூடம் மராமத்து செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 54. படித்துறை

மாநகராட்சிக்குட்பட்ட ஸ்ரீரங்கம் பகுதியில் உள்ள காவேரி ஆறு மற்றும் வாய்க்கால்களில் அமையப்பெற்றுள்ள அனைத்து படித்துறைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 55. திறந்த வெளி உடற்பயிற்சி கூடம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளில் 41 இடங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கப்பட்டு மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**56. திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகரம் – (Smart City)**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சீர்மிகு நகரமாக மாற்றுவது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மத்திய அரசுக்கு 31.03.2017 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, மத்திய அரசு, அலுவலக ஆணை எண்.K–15016/157/2015–SC–1, நாள்.28.06.2017 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி **"சீர்மிகு நகரம்"** (Smart City) ஆக தேர்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, **"தனி நோக்கு அமைப்பு" (Special Purpose Vehicle)** அமைப்பதற்கு அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.10.17ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனி நோக்கு அமைப்பிற்கான நிறுவனம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, 22.12.2017 அன்று இந்திய நிறுவனங்களின் சட்டம் 2013ன் கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சீர்மிகு நிறுவனம் என்ற பெயருடன் கூடிய நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

**சீர்மிகு திட்டத்தின் கீழ் மொத்தம் 83 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 79 பணிகள் ரூ.732.38 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 பணிகள் ரூ.232.79 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு.**

**57. முடிவுற்றப் பணிகள்**

**57–1. பூங்கா அமைக்கும் பணி மற்றும் போக்குவரத்து திட்டுகள் அழகுபடுத்தும் பணி**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் லூர்துசாமி பிள்ளை பூங்கா, உறையூர் வீட்டுவசதி வாரிய பூங்கா, காந்தியடிகள் பூங்கா, திரவியம் பிள்ளை பூங்கா, ராமசாமி தேவர் பூங்கா, மூவேந்தர் நகர் பூங்கா, அகிலாண்டேஸ்வரி நகர் பூங்கா, கார்த்திகேயன் கார்டன் பூங்கா, வேதாத்திரி நகர் பூங்கா, மகாலெட்சுமி நகர் பூங்கா, ஆண்டாள் நகர் பூங்கா, பர்மா காலனி பூங்கா, சோழன் நகர் பூங்கா, பெரியார் நகர் (சேஷாத்திரி நகர்) பூங்கா, தங்கையா நகர் பூங்கா மற்றும் மேஜர் சரவணன் பூங்கா ஆகிய 16 பூங்காக்களின் பசுமை அமைப்புகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேலும், திருவானைகோவில் டிரங்க் ரோடு செக்போஸ்ட், சத்திரம் பேருந்து நிலையம் காமராஜ் சிலை, பாரதிதாசன் சாலை வில்லியம்ஸ் சாலை சந்திப்பு, மத்திய பேருந்து நிலையம் சங்கீதா ஹோட்டல் அருகில் மற்றும் லாசன்ஸ் சாலைகளில் அமைந்துள்ள 5 எண்ணிக்கை போக்குவரத்து திட்டுகளை அழகுபடுத்தும் பணி ஆக மொத்தம் ரூ.1568.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–2. போர் நினைவுச்சின்னம்**

காந்தி மார்க்கெட் அருகில் உள்ள போர் நினைவு கூண்டு மராமத்து செய்து மின்விளக்கு அலங்காரம் செய்யும் பணி ரூ.99.00 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–3. நீரூற்று அமைத்தல்**

மூவேந்தர் நகர் பூங்கா, லூர்துசாமி பூங்கா, பாபு ரோடு பூங்கா மற்றும் டா.ரெங்கநாதன் பூங்காவில் அழகிய வடிவுடன் கூடிய நிரூற்று அமைக்கும் பணி ரூ.56.00 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–4. தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் மற்றும் தடுப்புகள் சத்திரம் பேருந்து நிலையத்தை சுற்றி அமைத்தல்**

சத்திரம் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிக்காக இங்கு இயங்கி வந்த கடைகள் மற்றும் பேருந்துகளை சாலை ஓரங்களில் பாதுகாப்பாக நிறுத்தம் செய்வதற்கு போக்குவரத்து தடுப்புகள் மற்றும் பயணியர் தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் அமைக்கும் பணி ரூ.99.00 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

**57–5. மின் ஆற்றல் சேமிப்பு மின்விளக்குகள்**

சீர்மிகு நகர திட்டம் அபிவிருத்தி சார்ந்த மற்றும் மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள 8264 மின்விளக்குகளை அகற்றிவிட்டு 20W/90W/120W/200W மின் சேமிப்பு விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி மற்றும் 816 புதிய மின்கம்பங்கள் அமைத்து மின்சேமிப்பு விளக்குகள் அமைக்கும் பணி ரூ.2450.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–6. உறையூர் தினசரி சந்தை வளாகம் பகுதியில் தினசரி சந்தை கடைகள் கட்டும் பணி**

புத்தூர் சந்தை வளாகத்தில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், இச்சந்தை கடைகளின் உரிமதாரர்களுக்கு மாற்றிடம் உறையூர் தினசரி சந்தை பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, கூடுதலாக சந்தை கடைகள் அமைக்கும் பணி ரூ.47.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–7. சீர்மிகு மழைநீர் வடிகால், சிறுபாலங்கள், வாய்க்கால்களில் தாங்குசுவர் கட்டுதல் – (தொகுப்பு–II)**

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD areas) சீர்மிகு மழைநீர் வடிகால்கள், சிறுபாலங்கள் மற்றும் சீர்மிகு கால்வாய் தாங்கு சுவர் கட்டும் பணிகள் தொகுப்பு–II ல், மொத்தம் 22 எண்ணிக்கை பணிகள் ரூ.2041.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–8. திடக்கழிவு மேலாண்மை – இலகுரக வாகனங்கள் வாங்கும் பணி**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை சேகரம் செய்யும் பணிக்கு 3.3 கனமீட்டர் கொள்ளளவுள்ள இலகு ரக வாகனங்கள் 27 எண்ணிக்கைகள் விநியோகம் செய்யும் பணி ரூ.241.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–9. திடக்கழிவு மேலாண்மை – நுண்உர செயலாக்க மையங்கள் அமைக்கும் பணி**

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD areas) நுண்உர செயலாக்க மையங்கள் 4 இடங்களில் அமைக்கும் பணி மற்றும் நுண்உர செயலாக்க மையத்திற்கு தேவையான அரவை இயந்திரம் 6 எண்ணிக்கைகள் விநியோகம் செய்யும் பணியினை சேர்த்து மொத்தம் 10 பணிகள் ரூ.240.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–10. நடைபாதை அமைக்கும் பணி**

அண்ணாநகர் இணைப்பு சாலையின் கிழக்கு பகுதியில் எம்.ஜி.ஆர்.சிலை முதல் அண்ணாநகர் பாலம் வரையிலான மழைநீர் வடிகால் மீது நடைபாதை அமைக்கும் பணி ரூ.95.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–11. சூரியஒளி உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கும் பணி**

சீர்மிகு நகரத்திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த (ABD areas) பகுதிகளில் 10 மீட்டர் உயரமுள்ள சூரியஒளி உயர்கோபுர மின்விளக்குகள் மொத்தம் 14 இடங்களில் அமைக்கும் பணி ரூ.69.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–12. கால்வாய் தாங்கு சுவர் அமைக்கும் பணி**

பழைய வார்டு எண்.8 புதிய வார்டு எண்.15 இரட்டை வாய்க்கால் பகுதியில் தாங்கு சுவர் அமைக்கும் பணி (2 பணிகள்) மற்றும் பழைய வார்டு எண்.9 புதிய வார்டு எண்.12 கோட்டை வாய்க்கால் பகுதியில் தாங்கு சுவர் அமைக்கும் பணி (2 பணிகள்) மொத்தம் 4 பணிகள் ரூ.330.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–13. சீர்மிகு மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய் அமைக்கும் பணி (5 பணிகள்) பகுதி–III**

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD areas) மூடு தளத்துடன் கூடிய மழைநீர் வடிகால்கள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகள் தொகுப்பு–III ல் மொத்தம் 5 பணிகள் ரூ.407.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–14. உய்யக்கொண்டான் கால்வாய் கரை பகுதியில் பூங்கா அமைக்கும் பணி**

உய்யக்கொண்டான் கால்வாய் கரைப்பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கும் பணியில், Tiger பூங்கா, மயில் பூங்கா மற்றும் Rose பூங்கா ஆகிய மூன்று பூங்காக்கள் அமைக்கும் பணி ரூ.1832.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–15. உய்யக்கொண்டான் வாய்க்கால் கரை பகுதிகளில் வளர்ச்சித்திட்டப்பணி**

மாநகராட்சியில் உள்ள உய்யக்கொண்டான் வாய்க்கால் செட்டிப்பாலம் முதல் குழுமி பகுதி வரை 2கீ.மீ நீளத்திற்கு பசுமை அமைப்புகள், நடைபாதை அமைத்தல், நடைப்பயிற்சி, ஓடு பயிற்சிக்கு என சிறப்பு அம்சங்கள் அமைத்தல், திறந்த வெளி ஆம்பி தியேட்டர் அமைப்புகள் கட்டுதல், சிறுவர் விளையாட்டு அமைப்புகள் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.190.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–16. தில்லைநகர் வணிக வளாகம் கட்டுதல்**

தில்லைநகர் 7வது குறுக்கு தெரு பகுதியில் அடித்தளம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் வாகன நிறுத்தத்துடன் கூடிய 52 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்ட ரூ.1571.00 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–17. பஞ்சப்பூரில் தரைமட்டத்தில் சூரியஒளி மின் ஆற்றல் சேமிப்பு தகடுகள் அமைத்து மின்னாற்றல் உற்பத்தி செய்யும் மையம் அமைத்தல்**

பஞ்சப்பூர் பகுதியில் 24 MWP திறனுள்ள தரைமட்ட சூரியஒளி மின் சேகரிப்பு மையம் அமைத்தல், சாலை அமைத்தல், தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் இந்த இடத்தை சுற்றி முள் வேலி தடுப்பு அமைக்கும் பணி ரூ.1419.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

**57–18. உய்யக்கொண்டான் கால்வாய் கரை பகுதிகளில் சிற்பங்கள் மற்றும் சிலைகள் அமைக்கும் பணி**

உய்யக்கொண்டான் கால்வாய் கரை பூங்கா பகுதியில் கலைநயம் மிக்க கற்சிற்பங்கள் மற்றும் சிலைகள் அமைக்கும் பணி ரூ.98.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

**57–19. தில்லைநகர் வணிக வளாக பகுதியில் கூடுதல் பணி**

தில்லைநகர் வணிக வளாகம் கட்டப்பட்டு வருவதில், இத்திட்டப்பணி தளத்திற்குள் கூடுதல் பணியாக சாய்வுதளம் மற்றும் தீயணைப்பு கருவிகள் பொருத்தும் பணிகள் ரூ.190.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–20. மேரீஸ் மேம்பாலம் தாங்கு சுவர் அமைக்கும் பணி**

மேரீஸ் திரையங்கம் எதிரில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம் பகுதியில் தாங்கு சுவர் அமைக்கும் பணி (3 பணிகள்) ரூ.282.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–21. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஒளிரும் மின் விளக்குகளால் அழகுபடுத்தும் பணி**

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஒளிரும் மின் விளக்குகளால் அழகுபடுத்தும் பணி ரூ.1136.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–22. சத்திரம் பேருந்து நிலையத்திற்குள் கூடுதல் கடைகள் பணி மேற்கொள்தல்.**

சத்திரம் பேருந்து நிலைய வளாகத்திற்குள் கூடுதல் கடைகள் கட்டும் பணி ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–23. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையில், சாலையோர மண் துகள்களை சுத்தம் செய்யும் பணிக்கு 6 கனமீட்டர் கொள்ளளவுள்ள 2 எண்ணிக்கை**

திடக்கழிவு மேலாண்மையில், சாலையோர மண் துகள்களை சுத்தம் செய்யும் பணிக்கு 6 கனமீட்டர் கொள்ளளவுள்ள 2 எண்ணிக்கை Road Sweeper வாகனங்களை வழங்கி ஓராண்டிற்கு இயக்கி பராமரிப்பு செய்யும் பணி ரூ.173.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–24. கீழப்புலிவார்டு ரோடு பகுதியில் சாலை தடுப்புகள் அமைக்கும் பணி**

பழைய வார்டு எண்.14 புதிய வார்டு எண்.18ல் கீழப்புலிவார்டு ரோடு பகுதியில் சாலை தடுப்புகள் அமைக்கும் பணி (பகுதி–I) மற்றும் (பகுதி–II) ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–25. சாலை பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் அமைக்கும் பணி**

மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 (ஸ்ரீரங்கம் கோட்டம் மற்றும் கோ–அபிஷேகபுரம் கோட்டம்) க்குட்பட்ட சாலை பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் 150 இடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் அமைக்கும் பணி (2 பணிகள்) ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–26. மதுரை ரோடு பகுதியில் கடைகள் கட்டும் பணி**

மரக்கடை பகுதியில் புதிய வணிக வளாகம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிடம் கட்டுவதற்கு, இவ்வளாகத்தில் மாதவாடகைக்கு இருந்து வந்த கடைக்காரர்களை காலி செய்து, மதுரை ரோடு பகுதியில் கடைகளை மாற்றம் செய்வதற்காக, மதுரை ரோடு பகுதியில் கடைகள் கட்டும் பணி ரூ.95.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–27. பேட்டரி மூலம் இயங்கும் திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் விநியோகிக்கும் பணி**

திடக்கழிவு மேலாண்மையின் கீழ் சேகரமாகும் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் சேகரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு 100 எண்ணிக்கைகள் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் விநியோகிக்கும் பணி ரூ.220.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–28.ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு (ICCC) மைய அலுவலக பணிக்கான செயல்பாட்டு அறை மற்றும் கழிப்பிடம் கட்டும் பணி (2 பணிகள்)**

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு (ICCC) மைய அலுவலக செயல்பாட்டு அறை மற்றும் கழிப்பிடம் கட்டும் பணி (2 பணிகள்) ரூ.186.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–29. சத்திரம் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள்**

சத்திரம் பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் தரைத்தளத்தில் 30 பேருந்துகள் நிறுத்தும் வசதிகள், 33 கடைகள் (முதல் தளட் – 11 மற்றும் தரை தளம் – 22), 350 இரு சக்கர வாகன நிறுத்தம் (தரை மற்றும் முதல் தளம்) பேருந்து நிறுத்துமிடத்திற்கு தேவையான அனைத்து இதர வசதிகளுடன் ரூ.1883.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–30. சத்திரம் பேருந்து நிலையம் பேருந்து ஓடு தளப்பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம், தாங்கு சுவர் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்தல்.**

சத்திரம் பேருந்து நிலையம் பேருந்து ஓடு தளப்பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி, தாங்கு சுவர் அமைக்கும் பணி மற்றும் இதரப்பணிகள் ரூ.891.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–31. சத்துணவு மையம் மற்றும் சீர்மிகு கழிவறை கட்டும் பணி – பட்டவர்த்சாலை**

பட்டவர்த் சாலை பகுதியில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய சத்துணவு மையம் மற்றும் சீர்மிகு கிழிவறை கட்டிடம், சத்துணவு மையம், சமையலறை, பொருட்கள் இருப்பு அறை, குழந்தைகளுக்கான கழிவறை மற்றும் இதர வசதிகளுடன் கூடிய கட்டிடம் ரூ.90.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–32. மாநகராட்சி கட்டிடங்களின் மேற்கூரை பகுதிகளில் சூரிய ஒளி மின் சேமிப்பு தகடுகள் அமைக்கும் பணி**

மாநகராட்சிக்குட்பட்ட 206 எண்ணிக்கை கட்டிடங்களின் மேற்கூரைகளில் சூரிய ஒளி மின்சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தி மின் ஆற்றல் சேகரிப்பு அமைப்புகள் அமைக்கும் பணி ரூ.671.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–33. மாநகராட்சி அபிவிருத்தி பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் அமைத்தல்**

சீர்மிகு திட்டப்பகுதிகளான அபிவிருத்தி சார்ந்த பகுதிகள் மற்றும் முக்கிய இடங்களில் வழிகாட்டி பலகைகள், தெரு விபரம் அடங்கிய ஒளிரூட்டும் பெயர் பலகைகள் அமைக்கும் பணி ரூ.415.00 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**57–34. பயோ மைனிங் பணிகள்**

அரியமங்கலம் குப்பை கிடங்கில் 47.7 ஏக்கர் பரப்பளவில் கொட்டப்பட்டுள்ள 7.59 லட்சம் கி.மீ கொள்ளளவுள்ள கழிவுகளை விஞ்ஞான முறைப்படி தீர்வு கண்டு 40 ஏக்கர் பரப்பை மீட்டுக்கொள்ள ரூ.5234.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு, மதிப்புமிக்க இடம் மீட்டெடுக்கப்பட்டு வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**57–35. சீர்மிகு மழைநீர் வடிகால், சிறு பாலங்கள், வாய்க்கால்களில் தாங்குசுவர் கட்டுதல் – தொகுப்பு – I**

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Areas) மழைநீர் வடிகால், சிறு பாலங்கள் மற்றும் வாய்க்கால்களில் தாங்குசுவர் அமைத்தல் போன்ற (தொகுப்பு – I) 50 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.4669.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–36. முக்கியமான சாலை சந்திப்பு பகுதிகளில் 5 இடங்களில் சிலைகள் அமைக்கும் பணி**

முக்கியமான சாலை சந்திப்பு பகுதிகளில் 5 இடங்களில் சிலைகள் (தில்லைநகர் தெற்கு சந்திப்பு – மீன் கற்சிலை, சாஸ்திரி ரோடு தெற்கு சந்திப்பு – சிங்கம் கற்சிலை, சாஸ்திரி ரோடு வடக்கு சந்திப்பு – கரகாட்டம் சிலை, உய்யக்கொண்டான் ஆற்றுங்கரை செட்டிப்பாலம் அருகில் – குதிரைகள் சிலை மற்றும் அண்ணாநகர் உழவர் சந்தை பகுதியில் – யானை சிலையுடன் கூடிய காளை மாடு சிலை) அமைக்கும் பணிகள் ரூ.98.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–37. மலைக்கோட்டை தெப்பக்குளம் பகுதியில் ஒலி மற்றும் ஒளி காட்சிகள் அமைக்கும் பணி**

மலைக்கோட்டை தெப்பக்குளம் பகுதியில் ஒலி மற்றும் ஒளி காட்சிகள் அமைக்கும் பணியினை வடிவமைத்து, கட்டுமானம் செய்து, மாநகராட்சிக்கு வழங்கும் பணி ரூ.880.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவடைந்துள்ளது.

**57–38. காவேரி ஆற்றங்கரை மேம்படுத்தும் பணி (3 பணிகள்)**

தில்லைநாயகம் படித்துறை காவேரி ஆற்றங்கரையினை மேம்படுத்தும் பணி (3 பணிகள்) ரூ.294.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–39. நந்தி கோயில் தெருவில் தினசரி சந்தை அமைக்கும் பணி**

நந்தி கோயில் தெரு பகுதியில் மாநகராட்சி மருந்தகம் அருகில் தினசரி சந்தை வளாகம் கட்டும் பணி ரூ.98.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**57–40. சுற்றுலா வளர்ச்சி பணி புரதான பூங்கா மேம்படுத்தும் பணி**

பட்டவர்த்ரோடு பகுதியில் 50 நபர்கள் அமரக்கூடிய திறந்தவெளி அரங்கத்துடன் கூடிய புராதன பூங்கா அமைக்கும் பணி ரூ.404.00 லட்சத்தில் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**57–41. புராதான பூங்கா பகுதியில் 6 எண்ணிக்கை கற்சிலைகள் அமைக்கும் பணி**

பட்டவர்த்ரோடு புராதான பூங்கா பகுதியில் 6 எண்ணிக்கை கற்சிலைகள் – இராஜராஜ சோழன் சிலை, இராணி மங்கம்மாள் சிலை, திருமலைநாயக்கர் நிலை, குதிரைத்தூண், போதியாள், கற்தூண்கள் போன்ற சிலைகள் மற்றும் சுவரோவியங்கள் அமைக்கும் (2 பணிகள்) பணி ரூ.196.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**57–42. கீழரண் சாலை பகுதிகளில் நடைபாதையுடன் கூடிய தெரு கட்டமைப்பு அமைக்கும் பணி**

கீழரண் சாலை (கீழப்புலிவார்டு ரோடு) பகுதிகளில் நடைபாதையுடன் கூடிய தெரு கட்டமைப்பு அமைக்கும் பணி (பகுதி – I, II, III) மற்றும் வார்டு எண்.14, 19க்குட்பட்ட கீழப்புலிவார்டு ரோடு பகுதியில் குறுக்கு பாலம் கட்டும் பணி ரூ.1049.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–43. கீழரண் சாலை பகுதியில் சிறுசந்தை கடைகள் அமைக்கும் பணி**

கீழரண் சாலை (கீழப்புலிவார்டு ரோடு) பகுதியில் தரைக்கீழ் தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய சிறுசந்தை வணிக வளாகம் கட்டும் பணி ரூ.629.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–44. பஞ்சப்பூர் பகுதியில் 7.2 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் அமைக்கும் பணிக்கு தேவையான அபிவிருத்தி பணிகள், குறுக்கு பாலம், மைய சுடுகலவை பேவர் இயந்திரம் மூலம் புதிதாக தார் சாலை அமைக்கும் பணிகள், காவலர் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்கும் பணி (7 தொகுப்புகள்)**

பஞ்சப்பூர் பகுதியில் 7.2 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் அமைக்கும் பணிக்கு தேவையான அபிவிருத்தி பணிகள், குறுக்கு பாலம், மைய சுடுகலவை பேவர் இயந்திரம் மூலம் புதிதாக தார் சாலை அமைக்கும் பணிகள், காவலர் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்கும் பணி (7 தொகுப்புகள்) பணிகள் ரூ.600.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–45. பஞ்சப்பூர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட உள்ள 7.2 மெகாவாட் திறன் கொண்ட தரைமட்ட சூரிய ஒளி மின்நிலையத்தில் மின்விளக்குகள் மற்றும் CCTV கேமிரா புதிதாக விநியோகம் செய்து பொருத்தும் பணி.**

பஞ்சப்பூர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட உள்ள 7.2 மெகாவாட் திறன் கொண்ட தரைமட்ட சூரிய ஒளி மின்நிலையத்தில் மின்விளக்குகள் மற்றும் CCTV கேமிரா புதிதாக விநியோகம் செய்து பொருத்தும் பணி ரூ.659.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–46. மேலரண்சாலை (மெயின்கார்டு கேட் முதல் எம்.ஜி.ஆர். சிலை வரை) பகுதிகளில் தார்சாலை மறுசீரமைக்கும் பணி**

மெயின்கார்டுகேட் முதல் மரக்கடை எம்.ஜி.ஆர். சிலை வரையிலான தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.370.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–47. தென்னூர் பிரதான சாலை (புத்தூர் ரோடு முதல் தென்னூர் மேம்பாலம் வரை) பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

தென்னூர் பிரதான சாலை (புத்தூர் ரோடு முதல் தென்னூர் மேம்பாலம் வரை தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–48. புத்தூர் ஈ.வே.ரா சாலை (செட்டிப்பாலம் முதல் சி.எஸ்.ஐ. மருத்துவமனை சந்திப்பு வரை) பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

புத்தூர் ஈ.வே.ரா சாலை (செட்டிப்பாலம் முதல் சி.எஸ்.ஐ. மருத்துவமனை சந்திப்பு வரை) தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.820.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–49. சாலைரோடு (திருத்தாந்தோனி சாலை சந்திப்பு முதல் DCTC பணிமனை வரை) பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

சாலைரோடு (திருத்தாந்தோனி சாலை சந்திப்பு முதல் DCTC பணிமனை வரை) தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.415.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–50 உறையூர் மருத்துவமனை ரோடு (சி.எஸ்.சி.மருத்துவமனை முதல் திருத்தாந்தோனி சாலை வரை) பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

உறையூர் மருத்துவமனை ரோடு (சி.எஸ்.சி.மருத்துவமனை முதல் திருத்தாந்தோனி சாலை வரை) தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.310.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–51. வெல்லமண்டி பிரதான சாலை (காந்தி சந்தை முதல் மதுரை ரோடு வரை) பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

வெல்லமண்டி பிரதான சாலை (காந்தி சந்தை முதல் மதுரை ரோடு வரை) தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.225.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–52. தில்லைநகர் ஏ–1 குறுக்கு சாலை பகுதிகளில் தார்சாலை மறு சீரமைக்கும் பணி.**

தில்லைநகர் ஏ–1 குறுக்கு சாலை பகுதிகளில் தார் சாலையினை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் மறுசீரமைக்கும் பணி ரூ.160.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–53. மதுரைரோடு பாலக்கரை பகுதியில் அறிவுசார் மையம் மற்றும் படிப்பகம் கட்டும்பணி**

மதுரைரோடு, பாலக்கரை பகுதியில் போட்டித் (TNPSC, UPSC, NEET, JEE, Bank Exams) தேர்வுகளுக்கு தயார் ஆகும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அறிவு சார் மையம் மற்றும் படிப்பகம் கட்டும் பணி ரூ.257.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**57–54. குதுப்பா பள்ளம் பகுதியில் அறிவுசார் மையம் மற்றும் படிப்பகம் கட்டும்பணி**

கன்டோன்மென்ட் குதுப்பா பள்ளம் பகுதியில் போட்டித் (TNPSC, UPSC, NEET, JEE, Bank Exams) தேர்வுகளுக்கு தயார் ஆகும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அறிவுசார் மையம் மற்றும் படிப்பகம் கட்டும் பணி ரூ.257.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**57–55. பஞ்சக்கரை பகுதியில் திருச்சி சி.வி.ராமன் (STEM Park) பூங்கா அமைக்கும் பணி**

ஸ்ரீரங்கம் பஞ்சக்கரை பகுதியில் அறிவியல், தொழில்நுடபம், பொறியியல் மற்றும் கணித கோட்பாடுகளை மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அதற்கான உபகரணங்களை அமைத்தும், விண்ணுலக கோள்களின் செயல்பாடுகள் குறித்து திரையில் காணும் வகையில் நவீன டிஜிட்டல் கோளரங்கம், திறந்தவெளி அரங்கம் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய திருச்சி சர்.சி.வி.ராமன் பூங்கா அமைக்கும் பணி ரூ.1555.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ள பயன்பாட்டில் உள்ளது.

**57–56. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு (ICCC) மையம் அமைக்கும் பணி**

மாநகராட்சி மைய அலுவலக வளாகத்திற்குள் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கும் பணி ரூ.1292.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**57–57. அம்ரூத் – பாதாள சாக்கடை வழங்கும் திட்டம் – நிதி பங்களிப்பு**

சீர்மிகு நகர திட்டம் அபிவிருத்தி சார்ந்த பகுதியில் அம்ரூத் பகுதி – II திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளுக்காக ரூ.6561.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

**57–58. கீழரண் சாலை பகுதியில் லாரிகள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி**

கீழரண் சாலை (கீழப்புலிவார்டு ரோடு) பகுதியில் மொத்தம் 85 எண்ணிக்கை கனரக சரக்கு வாகனங்கள் / லாரிகள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி ரூ.1463.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**58–1. புத்தூர் வணிக வளாகம் கட்டும் பணி**

புத்தூர் சந்தை பகுதியில் தரைக்கீழ் தளம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் கூடிய முழுவதும் குளிரூட்டப்பட்ட வணிக வளாகம் கட்டும் பணி ரூ.2091.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–2. மரக்கடை பகுதியில் வணிக வளாக கடைகள் கட்டும் பணி**

மரக்கடை பகுதியில் தரைக்கீழ் தளம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளங்களுடன் கூடிய வணிக வளாகம் கட்டும் பணி ரூ.943.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–3. மரக்கடை பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி**

மரக்கடை பகுதியில் புதிதாக 30.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி ரூ.789.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–4. பஞ்சப்பூர் பகுதியில் 2.4 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் அமைக்கும் பணி (தொகுப்பு–I) (பகுதி–II)**

பஞ்சப்பூர் பகுதியில் 2.4 MWP திறனுள்ள தரைமட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி ரூ.1341.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–5. பஞ்சப்பூர் பகுதியில் 2.4 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் அமைக்கும் பணி (தொகுப்பு– II) (பகுதி–II)**

பஞ்சப்பூர் பகுதியில் 2.4 MWP திறனுள்ள தரைமட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி ரூ.1341.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–6. பஞ்சப்பூர் பகுதியில் 2.4 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் அமைக்கும் பணி (தொகுப்பு– III) (பகுதி–II)**

பஞ்சப்பூர் பகுதியில் 2.4 MWP திறனுள்ள தரைமட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி ரூ.1341.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–7. அண்ணாநகர் மற்றும் புத்தூர் பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– I)**

அண்ணா நகர் மற்றும் புத்தூர் பகுதியில் 13.811 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைத்தல் மற்றும் 7669 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.959.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–8. சிந்தாமணி பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– II)**

சிந்தாமணி பகுதியில் 11.785 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைக்கும் மற்றும் 7884 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.837.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–9. தில்லைநகர் பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– III)**

தில்லைநகர் பகுதியில் 21.923 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைக்கும் மற்றும் 6497 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.842.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–10. மரக்கடை பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– IV)**

மரக்கடை பகுதியில் 21.960 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைத்தல் மற்றும் 9273 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.1070.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–11. உறையூர் பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– VI)**

உறையூர் பகுதியில் 16.928 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைத்தல் மற்றும் 5957 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.736.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–12. மலைக்கோட்டை பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பினை புணரமைக்கும் பணி (தொகுப்பு– V)**

மலைக்கோட்டை பகுதியில் 17.018 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களை புணரமைத்தல் மற்றும் 5834 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகள் ரூ.1027.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–13. கம்பரசம்பேட்டை நீர்சேகரிப்பு கிணற்றில் புதிதாக நீள்சுற்று வட்டக்குழுய்கள் அமைத்தல், புதிதாக மோட்டார் பம்பு செட் மற்றும் டீசல் ஜெனரேட்டர் அமைத்தல் (தொகுப்பு எண்– 1)**

பெரியார் நகர் நீர்ப்பணி நிலையம், அய்யாளம்மன் படித்துறை தலைமை நீர்ப்பணி நிலையம் புணரமைத்தல், டர்பைன் நீர்ப்பணி நிலையம் – 2 எண்கள் புதிதாக மின்மோட்டார் அமைத்தல், புதிதாக 6 எண்ணிக்கை டீசல் ஜெனரேட்டர் வாங்குதல், பெரியார் நகர் மின்மோட்டார் மாற்றியமைத்தல் (HT motor) – 2 பணிகள் ஆகிய பணிகள் ரூ.933.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–14. புதிதாக முதன்மை சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், நீர் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல், நடைபாலம் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவைகளை மறுசீரமைத்தல் (தொகுப்பு எண்– 2)**

பெரியார் நகர் நீர்ப்பணி நிலைய நடைபாதை மேம்பாலம் புணரமைத்தல், புதிதாக 20.00 லட்சம் கொள்ளவுள்ள முதன்மை சமநிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், புதிதாக 6 எண்கள் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் SCADA அமைப்பு ஏற்படுத்துதல், ஆகிய பணிகள் ரூ.2035.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–16. மதுரைரோடு பகுதியில் மாநகராட்சி வாகன நிறுத்துமிடப்பகுதியில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தின் முதல் தளத்தில் சேவை மையம் மற்றும் ஆலோசனை மையம் கட்டும் பணி.**

மதுரைரோடு பகுதியில் மாநகராட்சி வாகன நிறுத்துமிடப்பகுதியில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தின் முதல் தளத்தில் சேவை மையம் மற்றும் ஆலோசனை மையம் கட்டும் பணி ரூ.1182.00 லட்சம் மதிப்பீட்டில் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**58–20. மலைக்கோட்டை, தில்லைநகர், அண்ணாநகர் மற்றும் சிந்தாமணி பகுதிகளில் உள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மேம்படுத்தும் பணி மற்றும் புணரமைக்கும் பணி (தொகுப்பு– VII)**

மலைக்கோட்டை, தில்லைநகர், அண்ணாநகர் மற்றும் சிந்தாமணி பகுதிகளில் உள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மேம்படுத்தும் மற்றும் புணரமைத்தல் பணிகள் ரூ.213.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

**58–21. காளியம்மன் கோவில் பகுதியில் பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல்**

காளியம்மன் கோவில் தெரு பகுதியில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் ரூ.619.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**58–22. 4.கமீ கொள்ளளவுள்ள சென்சார் பொருத்தப்பட்ட COVID – 19 proof Semi – under ground bins – 175 எண்ணிக்கைகள் மற்றும் இதனை கையாளத் தேவையான 5 எண்ணிக்கை GPS கருவி பொருத்தப்பட்ட நவீன வகை வாகனங்கள் வாங்கும் பணி.**

திடக்கழிவு மேலாண்மையின் கீழ், சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரிக்கும் பணிக்கு 40 எண்ணிக்கைகள் Semi Earth Bin மாநகர பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளது

**58–23. மதுரை ரோடு பகுதியில் மாநகராட்சி வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் அமைக்கும் பணி**

மதுரை ரோடு பகுதியில் மாநகராட்சி வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் அமைக்கும் பணி ரூ.1460.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**58–24. மேலப்புலிவார்டு சாலையில் பன்அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல்**

மேலரண் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் (மாவட்ட நூலகத்திற்கு அருகில்) 528 இருசக்கர வாகனம், 142 நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கான பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி ரூ.2118.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**58–25. கீழரண் சாலை பகுதியில் மீன்சந்தை அமைக்கும் பணி மற்றும் இதரப்பணிகள்**

கீழரண் சாலை (கீழப்புலிவார்டு ரோடு) பகுதியில் நவீன வசதிகளுடன் மீன்சந்தை அமைக்கும் பணி மற்றும் இதரப்பணிகள் ரூ.1349.00 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்.**

**58–15. கலெக்டர் வெல் பெரியார் நகர் கம்பரசம் பேட்டையிலிருந்து, அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக 17.50 கி.மீட்டருக்கு குடிநீர் உந்துக்குழாய் பதித்தல் (தொகுப்பு எண்– 3)**

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) 17.50 கி.மீ குடிநீர் உந்துக்குழாய் பதித்தல் பணியினை ரூ.2249.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**58–17. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் குழாய் மறுசீரமைக்கும் பணி பகுதி – 1அ (Block 1, Block 2 and Block 2A)**

அபிவிருத்தி சார்ந்த (ABD Areas) பகுதிகளில் 74.992 கி.மீ நீளத்தில் கழிவு நீர் குழாய் புணரமைத்தல் மற்றும் 22096 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு ரூ.7076.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

**58–18. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் குழாய் மறுசீரமைக்கும் பணி பகுதி – 1ஆ (Block 3, Block 4)**

அபிவிருத்தி சார்ந்த (ABD Areas) பகுதிகளில் 67.796 கி.மீ நீளத்தில் கழிவு நீர் குழாய் புணரமைத்தல் மற்றும் 18613 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு ரூ.6203.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

**58–19. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் குழாய் மறுசீரமைக்கும் பணி பகுதி – 1இ (Block 5, Block 6)**

அபிவிருத்தி சார்ந்த (ABD Areas) பகுதிகளில் 67.850 கி.மீ நீளத்தில் கழிவு நீர் குழாய் புணரமைத்தல் மற்றும் 14446 வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு ரூ.7751.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

**59. ஒருங்கிணைந்த பேருந்து முனையம்**

59.1 ஒருங்கிணைந்த பேருந்து முனையம்.

பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி (Integrated Bus Terminal) மற்றும் பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் (Multi Utility Facilities Centre) கட்டுமானப் பணி ரூ.243.78 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதில், 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

**59.2 கனரக சரக்கு வாகன முனையம்.**

பஞ்சப்பூரில் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி (Truck Terminal) மற்றும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (Roads, SWD and other Infrastructure facilities) அமைக்கும் பணி ரூ.106.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று நடைபெற்று வருவதில், 89 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

**61. பொது சுகாதாரம்:**

**61–1. துப்புரவு பணிகள்:**

பொது சுகாதாரப் பணிகளில், தீவிர கவனம் செலுத்தி, ஒட்டுமொத்த துப்புரவு பணி மேற்கொண்டு, நகரில் தேங்கி இருந்த கழிவுகள் மற்றும் சாக்கடை மண் அகற்றப்பட்டு நகரை தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

TATA ACE ஆட்டோ மூலம் வீடுவீடாக சென்று குப்பைகளை சேகரம் செய்யப்பட்டு தரம்பிரித்து அதாவது மக்கும் குப்பை மக்கா குப்பை பிரித்து அப்பகுதியில் உள்ள நுண் உர கிடங்கில் உரமாக்கப்படுகிறது. இதனை சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் மேற்பார்வை செய்து வருகிறார்கள் கிடங்கிற்கு கொண்டு சென்று ஈரக்கழிவுகள் உரமாக்கப்படுகிறது. உலர் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

TATA ACE வீடுவீடாக குப்பைகள்வாங்க "வழி விவரங்கள்" (Route Chart) தயார் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை துப்புரவு ஆய்வர்கள், நகர் நல அலுவலர், உதவி செயற்பொறியாளர் (இயந்திரம்) மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் கால முறையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆணையர் அவர்களாலும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**II. பொது சுகாதாரப்பிரிவில் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்த பணியாளர்கள் விவரம்:**

| | |
|---|---|
| 1. மாநகர்நல அலுவலர் | – 01 |
| 2. மருத்துவ அலுவலர்கள் | – 20 |
| 3. சுகாதார அலுவலர்கள் | – 03 |
| 4. சுகாதார ஆய்வாளர்கள் | – 11 |
| 5. மருந்தாளுநர் | – 16 |
| 6. நகர சுகாதார செவிலியர்கள் | – 91 |
| 7. பகுதி சுகாதார செவிலியர்கள் | – 04 |
| 8. துப்புரவு மேற்பார்வையாளர்கள் | – 65 |
| 9. தூய்மை பணியாளர்கள் | – 2792 |
| 10.அலுவலக உதவியாளர்கள் | – 02 |
| 11. காவலர்கள் | – 02 |
| 12. களப்பணி உதவியாளர் | – 01 |
| 13. ஆய்வக தொழில் நுட்ப வல்லுநர்கள் | – 18 |
| 14. செவிலியர்கள் | – 58 |
| 15. பெண் கட்டு கட்டுபவர் | – 01 |

| | |
|---|---|
| 1. மாநகரில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை | – 279471 |
| 2. மாநகரில் மல அறைகள் கூடிய வீடுகள் | – 275607 |
| 3. மாநகரில் மல அறைகள் இல்லாத வீடுகள் | – 3864 |
| 4. மாநகரில் அறிக்கை ஆண்டில் உள்ள பொது கழிவறைகள் | – 358 |
| 5. ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | – 82 |
| 6. கட்டணக் கழிப்பிடம் | – 19 |

திருச்சிராப்பள்ளி மாநகருக்கு தினந்தோறும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், பயணியர்கள் நகரின் முக்கிய பகுதியான திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயம், திருவானைக்கோவில் ஜெம்புகேஸ்வரர் ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம், வயலூர் முருகன் ஆலயம், காவேரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள முக்கொம்பு அணைக்கட்டு மற்றும் கல்லணை அணைக்கட்டு ஆகிய இடங்களை சுற்றிப்பார்க்க பார்வையிட அதிக அளவில் வருகை தருகின்றனர்.

மேலும், திருச்சிராப்பள்ளி ரயில்வே ஜங்ஷன் பகுதி, மத்திய பேருந்து நிலையப்பகுதி, மலைக்கோட்டைப்பகுதி, திருவானைக்கோவில் பகுதி, ஸ்ரீரங்கம் கோவில் பகுதி நகர பேருந்து வழித்தடங்கள் செல்லும் பகுதிகள், சிந்தாமணி பேருந்து நிலையம் மற்றும் இதர ரயில்வே நிலையங்கள் ஆகிய அனைத்து பகுதிகளிலும் பகல் மற்றும் இரவு நேரங்களில் தினந்தோறும் சிறப்பு துப்புரவுப் பணிகள் சுழற்சி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>62. பிறப்பு இறப்பு புள்ளி விபரம்:</u>

மாநகராட்சி எல்லைக்குள் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்யும் பணி சுகாதார ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தலைமையிடத்திலும் மற்ற நான்கு கோட்ட அலுவலகங்களிலும் உள்ள பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கைகளை பெற்று கொண்டு மற்றும் வீடுகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்புகளை வாரிசுதாரர்கள் மூலம் 21 நாட்களுக்குள் அறிக்கை பெற்று இலவசமாக பதிவு செய்யப்பட்டு வருகிறது.

<u>62-1. பிறப்பு இறப்பு சான்றுகள் பெற கட்டணங்கள் கீழ்கண்டவாறு வசூல் செய்யப்பட்டு வருகிறது:</u>

| | |
|---|---|
| பிறப்பு சான்று ஒன்றிற்கு | - ரூ.200/- |
| கூடுதல் நகல் பெறுதல் ஒவ்வொன்றிற்கும் | - ரூ.200/- |
| இறப்பு சான்று ஒன்றிற்கு | - ரூ.200/- |
| கூடுதல் நகல் பெறுதல் ஒவ்வொன்றிற்கும் | - ரூ.200/- |
| குழந்தை பெயர் பதிவு செய்தல் | - ரூ.200/- |
| ஒரு வருடத்திற்கு மேல (சுகாதாரம்) | - ரூ.200/- |

மேலும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் இலவசமாக பெற்று கொள்ள 31.12.2017க்கு முன் பதிவு செய்ததை http:\\tnurbanepay.tn.gov.in என்ற இணையதளத்திலும் மற்றும் 01.01.2018 முதல் பதிவு செய்த பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகளை http:\\crstn.org என்ற இணையதளத்திலும் பதிவு இறக்கம் செய்த கொள்ளலாம்.

<u>62-2. பிறப்பு சான்றின் அவசியம்:</u>

- ❖ குழந்தைகள் பள்ளியில் சேர்ப்பதற்கு
- ❖ அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு
- ❖ ஆயுள் காப்பீடு செய்வதற்கு
- ❖ வாரிசுதாரர்களின் உரிமைகள் நிரூபிப்பதற்கு.

<u>63. இறப்பு சான்றின் அவசியம்:</u>

- ❖ வாரிசு சான்று பெற
- ❖ குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு, விதவை ஓய்வூதியம் பெற
- ❖ சொத்து உரிமைக் கோருவதற்கு
- ❖ உயில் ஆவணம் செயல்படுத்த

<u>63-1. பிறப்பு இறப்பு பதியப்பட்ட விவரங்கள் 2023-2024:</u>

| | |
|---|---|
| ❖ பதியப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை | 13070 |
| ❖ பதிவு செய்யப்பட்ட இறப்புகள் | 7599 |
| பிறப்பு விகிதம் | 9.26/1000 |

| | |
|---|---|
| இறப்பு விகிதம் | 7.26/1000 |
| சிசுமரண விகிதம் | 9.4/1000 |
| தாய்மரண விகிதம் | 92.89/100000 |
| இறந்த பிறந்தவை விகிதம் | 1.134/1000 |

**64. பொது நலப்பணிகள்:**

மாநகராட்சி நகர்புற மருத்துவமனைப் பணியாளர்கள், குடும்ப நலப் பணியாளர்கள் மற்றும் மருத்துவப் பணி அலுவலர்கள் வாயிலாக குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கும், நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு, மருந்துகள் அளிக்கப்பட்டு நோய்கள் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் குறித்து பொது மக்களுக்கு திரைப்படங்கள் மற்றும் வீடியோ வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டது.

**65. தொற்று நோய்கள் 2023–2024:**

- **காலரா**
  அறிக்கை ஆண்டில் காலரா நோய் கண்டவர்கள் இருவர். இதில் இறப்பு ஏதும் இல்லை
- **சீதபேதி மற்றும் வயிற்றுபோக்கு**
  அறிக்கை ஆண்டில் 451 பேர்களுக்கு இந்நோய் தென்பட்டது. இதில் இறப்பு ஏதும் இல்லை.
- **என்ட்ரிக் காய்ச்சல்**
  அறிக்கை ஆண்டில் 608 பேர்களுக்கு இந்நோய் ஏற்பட்டுள்ளது. அனைவருக்கும் சிகிச்சை அளிப்பட்டுள்ளது.
- **தொழுநோய்**
  அறிக்கை ஆண்டில் தொழு நோய் ஏதும் பரவவில்லை.
- **பிளேக்**
  அறிக்கை ஆண்டில் இந்நோயில் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை.
- **மலேரியா**
  மத்திய அரசினரால், இம்மாநகராட்சியின் மலேரியா தடுப்புத் திட்டத்திற்காக ஒரு மையம் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. நோயாளிகளின் இரத்த தடவல் மூலமாக சேகரிக்கப்பட்டு இம்மையத்தில் ஆய்வு செய்யப்பட்டு, இந்நோய் கண்டுபிடிக்கப்படுகிறது. இங்குள்ள மலேரியா தடுப்பு மையத்தில் 3 ஆய்வக உதவியாளர், பணியாற்றி வருகிறார்கள். இம் மையம் மாநகராட்சி சுகாதார அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மலேரியா நோய் அறிக்கை ஆண்டில் 4 நபர்களுக்கு மலேரியா நோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமாக்கப்பட்டது. இந்நோயினால் அறிக்கை ஆண்டில் இறப்பு ஏதும் நிகழவில்லை.

**66. மக்களை தேடி மருத்துவம்:**

மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையம், தனியார் அல்லது அரசு சுகாதார நிலையத்திற்கு வர முடியாத வயதானவர்கள், நடக்க முடியாத நோயாளிகள் மற்றும் அனைத்து பயனாளிகளின் இல்லம் தேடி நேரில் சென்று சிகிச்சையும், அவர்களது மருந்து பெட்டகங்களும் அளிக்கப்படுகிறது. 44336 பயனாளிகளுக்கு சர்க்கரை நோய் பரிசோதனையும், 234187 நபர்களுக்கு கேன்சர் பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது. 827723 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாடு பயிற்சி பெற்ற பெண் சுகாதார தன்னார்வலர்கள், இடை நிலை சுகாதார சேவையாளர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோயாதரவு செவிலியர்கள் ஆகியோர் மூலம் சிகிச்சை வழங்கப்படுகிறது.

சர்க்கரை நோய், ரத்த அழுத்த நோய், கேன்சர் ஆகியவற்றிற்கு தனிகவனம் செலுத்தும் வகையில், 18 நகர் நல மையங்களில் மொத்தம் 18 செவிலியர்கள் பிரத்தியோகமாக மருத்துவம் மற்றும் NCD இயக்கம் மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**67. நுண்உரக்கிடங்கு:**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வீடுகளிலும் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்கா குப்பைகள் அனைத்தும் மாநகராட்சியின்செயல்பாட்டில் உள்ள 40 நுண் உரக்கிடங்கு மையத்திற்கு செல்லப்படுகிறது.

இம்மாநகராட்சியின் 40 நுண்உரக்கிடங்கு மையங்களிலும், சேகரிக்கப்பட்ட மக்கும் குப்பைகள் மூலம் உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகள் மறு சுழற்சி செய்யும் வகையில் ஒவ்வொரு புதன் கிழமையும் விற்பனை செய்து அத்தொகை தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மக்காத குப்பைகளில் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் போன்ற குப்பைகள் உள்ளூர் விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. விற்பனை செய்ய இயலாத குப்பைகள் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக பயன்படுத்த சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மாநகராட்சியில் புதை வடிகால் திட்டம் அமலாக்கத்தாலும், மலக்கழிவுகள் குப்பையுடன் சேர்த்து மாநகராட்சியில் கலப்புரம் தயாரிப்பு இல்லை என்ற நிலை உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், அரியமங்கலத்தில் சுமார் 47.7 ஏக்கர் பரப்பளவில், மாநகராட்சி நிர்வாகத்தினால் கலப்பு உரக்கிடங்கு நிர்வகிக்கப்படுகிறது.

அறிக்கை ஆண்டில் கலப்புர கிடங்கில் சேர்ந்த குப்பைகளின் அளவு 158420 மெட்ரிக்டன் ஆகும்.

**68. வணிக உரிமையாணை கட்டண இனங்கள் 2023-2024:**

ஐந்து வார்டுகுழு அலுவலகங்களிலும் Dangerous & offensive trades and industries Rules 1996 உரிமையைணை கட்டண இனங்கள் மூலம் அறிக்கை ஆண்டில் உரிமையாணை கோரிய எல்லா இடங்களும் துப்புரவு ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டது. உரிமையாணை பெறாதவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டில் 5 வார்டு குழு அலுவலகங்களிலும் உரிமையாணை கட்டண இனங்கள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| வார்டுகுழு எண்-1 | - | ரூ. 33,50,075 |
| வார்டுகுழு எண்-2 | - | ரூ. 6,71,450 |
| வார்டுகுழு எண்-3 | - | ரூ. 11,56,400 |
| வார்டுகுழு எண்-4 | - | ரூ. 20,13,950 |
| வார்டுகுழு எண்-5 | - | ரூ.42,33,650 |
| **கூடுதல்** | - | **ரூ.1,14,25,525** |

69. திருவிழாக்கள் விவரம்:

| வ. எண் | விழாவின் பெயர் | இடம் | கூடும் மக்களின் தோராய எண்ணிக்கை விவரம் |
|---|---|---|---|
| 1 | குழுமாயி அம்மன் கோவில் திருவிழா | புத்தூர் | 130000 |
| 2 | நாச்சியார் அம்மன் கோவில் திருவிழா | உறையூர் | 60000 |
| 3 | ஜெபமாலை மாதா திருவிழா | பாலக்கரை | 22000 |
| 4 | ஆரோக்கிய மாதா திருவிழா | மேலப்புதூர் | 21000 |
| 5 | தெப்பத் திருவிழா | மலைக்கோட்டை | 150000 |
| 6 | நத்தர்வலி தர்கா திருவிழா | நத்தர்ஷா பள்ளிவாசல் | 90000 |
| 7 | வைகுண்ட ஏகாதசி | ஸ்ரீரங்கம் | 500000 |

மேலும் இம்மாநகராட்சியின் ஸ்ரீரங்கம் கோட்டத்தில் "பிரசுரிக்கப்பட்ட திருவிழா" "ஸ்ரீரங்கநாதர்" ஆலயத்தில் பிரதி வருடம் முறையே டிசம்பர், ஜனவரி மாதங்களில் 22 நாட்கள் நடைபெறும் இத்திருவிழா **"வைகுண்ட ஏகாதசி"** என்றழைக்கப்படுகிறது. மேலும் ஏப்ரல், மே மாதங்களில் 11 நாட்கள் நடைபெறும் சித்திரைத்தேர் திருவிழாவும் குறிப்பிடத்தக்கதாகும்.

வைகுண்ட ஏகாதசியின் போது ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோவிலின் உட்புறத்தில் செய்ய வேண்டிய சுகாதார ஏற்பாடுகளை, சென்ற வருடங்களைப் போலவே மாநகராட்சியினரே செய்யலாமெனவும், அதற்குரிய ஈட்டுத் தொகை 50% வழங்குவதாகவும், அறநிலைய துறை ஒப்புக் கொண்டு அதன்படி, அறிக்கை ஆண்டில் மாநகராட்சியினரால் மேற்கண்ட திருவிழாவிற்கு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்த செலவினத்தில் 50% அரங்கநாதர் திருக்கோவிலிருந்து திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திருவிழா நடைபெறும் இடங்களுக்கு பொது சுகாதார வசதி மருத்துவ முகாம் மற்றும் குடிதண்ணீர் வசதி செய்தும் திருவிழாக்கள் நடைபெறும் போது எவ்வித தொற்றுநோயும் பரவாமல் சுகாதார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அறிக்கை ஆண்டில் நடைபெற்ற எல்லா திருவிழாக்களுக்கும், சிறப்பு சுகாதார ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டது. திருவிழாக் காலங்களில் நகரத்தில் தொற்று நோய்கள் ஏதும் இல்லாமல் திருப்திகரமாக இருந்தது.

70. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்:– 2023–2024:

இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்கு 2023–2024ம் ஆண்டிற்கு அரசிடமிருந்து வரப்பெற்ற ரூ.42871000/– தொகையின் மூலம் 15790 ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாவட்ட கருவூலம் வழியாக பயனாளிகளின் வங்கி கணக்கில் நிதி செலுத்தப்பட்டது.

71. ஜனனி சுரக்ஷா யோஜனாத் திட்டம்:

இத்திட்டத்தின் மூலம் 2023–2024ம் ஆண்டிற்கு 747 பயனாளிகளுக்கு ரூ.448200/– க்கு க்கு காசோலை வழங்கப்பட்டது.

72. தீவிர போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்து முகாம்:

இம்மாநகராட்சி பகுதியில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் மூலம் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், இலவசமாக போலியோ சொட்டு மருந்து ஒரு தவணைகளாக வழங்கப்பட்டது. இதன் மூலம் 2023–2024ம் ஆண்டில் 60613 குழந்தைகள் பலன் அடைந்தனர்.

**73. தேசிய குடற்புழு நீக்குதல் முகாம்:**

வருடத்திற்கு இரு முறை நடைபெற்று உள்ள 1 வயது முதல் 19 வயது வரை உள்ள அனைவருக்கும் 251924 நபர்களுக்கு அல்பெண்டசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**74. வைட்டமின் ஏ சிறப்பு முகாம்:**

வருடத்திற்கு ஒரு முறை ஆறு மாத குழந்தைகள் முதல் ஐந்து வயது குழந்தைகள் வரை அனைவருக்கும் 82806 நபருக்கு வைட்டமின் ஏ திரவம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**75. ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி திருவிழா:**

ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி திருவிழா 12.12.2023 முதல் 02.01.2024 முடிய நடைபெற்றமைக்கு இம்மாநகராட்சி சுகாதாரப் பிரிவு மைய அலுவலகம் மூலம் பக்தர்கள் வருகை முன்னிட்டு சுகாதாரப் பணிகள் மேற்கொண்ட வகையில் ரூ.4801410/- செலவினம் செய்யப்பட்டுள்ளது. இதில் 50% தொகையினை கோவில் நிர்வாகத்திடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**76. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM):**

**76-1. NULM Shelter**

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 3 நகர்புற வீடற்றோர் தங்கும் இல்லம் உள்ளது. இதில் மாநகராட்சி பகுதியில் வீடு இல்லாமல் சாலை ஓரத்தில் உள்ளவர்கள் தங்கி கொள்ளலாம்.

- ❖ ஜங்சன் (ரயில்வே நிலையம் எதிர்புரம்)
- ❖ E.B ரோடு (லாரி நிறுத்துமிடம் வளாகம்).
- ❖ தெப்பகுளம்.

**76-2. NULM Special Shelter**

2 சிறப்பு தங்கும் இல்லம் உள்ளது. இதில் அரசு பொது மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகளின் உடன் தங்கும் நபர்களின் இவ்விடுதியில் தங்கி கொள்ளலாம்.

- ❖ மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை (I)
- ❖ மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை (II)
- ❖ ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை

இவ்விடுதிகள் (NGO) தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்படுகிறது. இதில் தங்கும் வீடற்றோர் நபர் ஒன்றுக்கு ரூ.33.33/- வீதம் அரசு நிதி அளிக்கப்படுகிறது. மேலும் காந்தி ஜெயந்தி முதியோர் தினம் மற்றும் அனைத்து பண்டிகை காலங்களில் சிறப்பு விருந்து வழங்கப்படுகிறது.

## 77. வரி மற்றும் வரியில்லா இனங்கள் விபரம்

| வ. எண் | வருடம் | சொத்துவரி | காலி மனை வரி | தொழில் வரி | குடிநீர் இணைப்பு | புதைவடிகால் இணைப்பு | வரியில்லா இனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2015 – 2016 | 196704 | 7001 | 18226 | 100558 | 45080 | 2150 |
| 2 | 2016 – 2017 | 201361 | 7813 | 20520 | 103953 | 51324 | 2185 |
| 3 | 2017 – 2018 | 216764 | 8901 | 21610 | 113041 | 57409 | 2442 |
| 4 | 2018 – 2019 | 219196 | 11191 | 23471 | 115554 | 59550 | 2471 |
| 5 | 2019 – 2020 | 223929 | 13696 | 24670 | 117522 | 60880 | 2386 |
| 6 | 2020 – 2021 | 228057 | 15012 | 25346 | 119618 | 63244 | 2393 |
| 7 | 2021 – 2022 | 233051 | 16617 | 25693 | 121161 | 64005 | 2421 |
| 8 | 2022 – 2023 | 237044 | 18502 | 27132 | 123231 | 65457 | 2456 |
| 9 | 2023 – 2024 | 237328 | 18159 | 25318 | 120575 | 67033 | 2379 |

## 78. தணிக்கை தடைகள்

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டு தொடக்கத்தில் நிலுவை | 1069 |
| இவ்வாண்டு வரப்பெற்றவை | 405 |
| **மொத்தம்** | **1474** |
| நடப்பு வருடத்தில் முடியப்பட்டவை 31.03.2024 | 82 |
| அறிக்கை ஆண்டில் இறுதி நிலை 31.03.2024 | **1392** |

**வரவு – செலவு (ரூபாய் இலட்சத்தில்)**

| | |
|---|---|
| வரவு | **105826.00** |
| செலவு | **104940.00** |

**நிதிநிலை அறிக்கை , வருவாய் கணக்கு , வரவினம்**

**(ரூ. இலட்சத்தில்)**

| | |
|---|---|
| 1. சொத்துவரி மூலம் | 6810.00 |
| 2. பிற நிறுவனங்களில் வசூலாகும் வருவாய் | .00 |
| 3. மாநகராட்சி சொத்துக்களிலிருந்து வரும் வாடகை வருமானம் | 4751.00 |
| 4. சேவைக்கட்டணம் மற்றும் கட்டணங்கள் | 4094.00 |
| 5. விற்பனை மற்றும் வாடகை கட்டணங்கள் | 117.00 |
| 6. மான்யங்கள் மற்றும் பங்குத்தொகை | 12400.00 |
| 7. முதலீடுகள் மீதான வட்டி | 300.00 |
| 8. வங்கி கணக்குகள் மீதான வட்டி | 500.00 |
| 9. பிற வருமானம் | 510.00 |
| 10. முந்தைய ஆண்டு வரவினம் | 31782.00 |
| **கூடுதல்** | **61264.00** |

**செலவினம்**

| | |
|---|---|
| 1. பணியாளர்களுக்கு ஊதியம் | 18881.00 |
| 2. நிர்வாகச்செலவினங்கள் | 1236.10 |
| 3. பழுது மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் | 5106.00 |
| 4. நிதி செலவினங்கள் | 701.00 |
| 5. திட்ட செலவினங்கள் | 25.00 |
| 6. மான்யம் மற்றும் பங்குத்தொகைகள் | 430.00 |
| 7. முந்தைய ஆண்டு செலவினம் | 25.00 |
| **கூடுதல்** | **26404.10** |

**78–1. குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் கணக்கு நிதி**

**வரவினம்**

| | |
|---|---|
| 1. குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் வரி | 4900.00 |
| 2. சேவைக்கட்டணம் | 6030.00 |
| 3. முதலீடுகள் மீதான வட்டி | 50.00 |
| 4. வங்கி கணக்குகள் மீதான வட்டி | 25.00 |
| 5. இதர வருவாய் | 10.00 |
| 6. முந்தைய ஆண்டு வரவினம் | 10.00 |
| கூடுதல் | **11025.00** |

**செலவினம்**

| | |
|---|---|
| 1. பணியாளர்களுக்கு ஊதியம் | 773.00 |
| 2. நிர்வாகச்செலவினம் | 98.00 |
| 3. பழுது மற்றும் பராமரிப்புச் செலவினம் | 4814.00 |
| 4. நிதி செலவினம் | 1201.00 |
| 5. பங்களிப்பு | 7.00 |
| 6. முந்தைய ஆண்டு செலவினம் | 10.00 |
| **கூடுதல்** | **6903.00** |

**78–2. ஆரம்ப கல்வி நிதிக்கணக்கு (வரவினம்)**

| | |
|---|---|
| 1. கல்விவரி மூலம் | 2900.00 |
| 2. மூலதனம் மீதான வருவாய் | 250.00 |
| 3. வங்கி கணக்குகள் மீதான வட்டி | 5.00 |
| 4. இதர வருவாய் | 1.00 |
| **கூடுதல்** | **3156.00** |

**செலவினம்**

| | |
|---|---|
| 1. ஊதியம் | 85.00 |
| 2. நிர்வாக செலவு | 54.50 |
| 3. பழுது மற்றும் பராமரிப்பு | 120.50 |
| **கூடுதல்** | **260.00** |

**Grant Details 2023 – 2024**

| Sl. No | Details | Amount (Rs.in lakhs) |
|---|---|---|
| 1 | MPLADS | 11439952.00 |
| 2 | MLACDS fund | 71160700.00 |
| 3 | 15th CFC | 507016027.00 |
| 4 | TURIF | 724321000.00 |
| 5 | Infrastructure fund and Development Fund (Panjapur Busstand)Est.349.98 crores ) | 1260000000.00 |
| 6 | NSMT | 274770000.00 |
| 7 | NNT (Public Contri) | 29077967.00 |
| 8 | NNT (Grant) | 23214000.00 |
| 9 | Infra.and Amenities fund (I&A) | 44600000.00 |
| 10 | Dormant A/c Interest Fund 23-24 | 430650000.00 |
| 11 | SFC - URDF 22-23 | 296865000.00 |
| 12 | TWAD-SuwaseM fund | 1490000.00 |
| 13 | IPP-V scheme- salary | 43706821.00 |
| 14 | CGF & O&M | **3930000.00** |
| 15 | NULM (SUSV) | 5779778.00 |
| 16 | NULM (SUH) | 1200000.00 |
| 17 | Surcharge on Stamp Duty- 1201001 | **208178571.00** |
| 18 | SFC Grant (5th) | **1314144515.00** |
| 19 | Incentive Fund | 8395111.00 |
| 20 | Incentive Fund (SFC Addl. Amount Adjusted Existing Loan amount) | 377469478.00 |
| 21 | Megistrial Fines | 591930.00 |
| 22 | Slum Board (WS conne) | 185000.00 |
| 23 | TNUDF interest | 150000.00 |
| 24 | Property Tax Adjustment Amount 1801001 | 53998344.00 |
| 25 | Others (DMA) | 20615000.00 |
| 26 | CMBFS -23-24 | **25654426.00** |
| 27 | AMRUT - Phase II | 442839000.00 |
| 28 | AMRUT - Phase III | 193422000.00 |
| | **TOTAL** | **6374864620.00** |

**79. மூலதன செலவு**

கட்டிடங்கள் கட்டுவதற்கு தூசியில்லா சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் மற்றும் இதர இனங்கள் அமைப்பதற்கும் ரூ. 71373 /– லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**80. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மின்னணு நிர்வாகம்(E – Governance)**

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தகவல் தொழில் நுட்ப ஆற்றலை (Information Technology ) பயன்படுத்தி மின்னணு நிர்வாக நடைமுறைகளை உருவாக்குவதில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு தேவையான கீழ்கண்ட மென்பொருட்களை (Software Modules ) நகராட்சி நிர்வாக துறையில் பணிபுரியும் தகவல் தொழில்நுட்ப வ ல்லுநர்களைக் கொண்டு தயார் செய்து இவ்வலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

1. சொத்துவரி
2. குடிநீர் கட்டணம்
3. பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்
4. வரியில்லா இனங்கள்
5. திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி
6. அச்ச மற்றும் அருவருக்கத்தக்க மற்றும் உணவு கலப்பட உரிமம்
7. அசையும் சொத்துக்களின் விபரங்கள்
8. அசையா சொத்துக்களின் விபரங்கள்
9. திடக்கழிவு மேலாண்மை
10. சேவை மைய வசூல்
11. புகார் மனுக்கள்
12. வங்கி வரிவசூல்
13. விண்ணப்பம் பெறுதல் / கோப்பு நிலை அறிதல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள வார்டுக்குழு எண் .1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய ஐந்து வார்டுக்குழு அலுவல கங்களிலும் வரி மற்றும் வரியில்லா இனங்கள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் கணினிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது . மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை பொது மக்கள் , மாநகராட்சியின் கோட்ட அலுவலகங்களில் உள்ள சேவை மையங்களிலோ அல்லது வங்கிகளிலோ அல்லது இணையதள வாயிலாக வோ செலுத்துவதற்கு ஏதுவாக தற்போது மின்னணு நிர்வாக நடைமுறைகளின் கீ ழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது . மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு வார்டுக்குழு அலுவலங்களிலும் உள்ள கணினிகள் அனைத்தும் Local Area Network மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் மாநகராட்சி இணையதளத்தின் மூ லம் தாங்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகள் , பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் பற்றிய விவரங்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள வும், அனைத்து வரிநிலுவைகளையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் www.tnurbanepay.com (UTIS Software ) இணையதள வழியாக (Payment Gatway ) செலுத்துவதற்கும், அவ்வாறு செலுத்திய வரியினங்களுக்கு உரிய ரசீதுகளினை பெற்றுக் கொள்ளும் வசதியும் இவ்விணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக கடந்த அறிக்கை ஆ ண்டில் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு மேயர், மாண்புமிகு துணை மேயர், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல் துறை ஆணையர் மற்றும் மாவட்ட அளவிலான இதர துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**